

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | ஜூன் 05, 2014 | புரட்சி 13 | முழக்கம் 21 | விலை: ரூ.3.00


### ✦ மய்ய அரசு அலுவலகங்களில் குவியும் வடமாநிலத்தவருக்கு எதிராகப் போராட்டம் ✦ கோவையில் கழக செயலவை கூட்டம் ✦ கொள்கை முடிவுகளுக்கு எதிராக செயல்பட்டவர்கள் தற்காலிக நீக்கம்

# திருப்பூரில் கூடிய தலைமை செயற்குழு முடிவுகள்

31-05-2014 சனிக்கிழமை அன்று காலை 10-00 மணிக்கு, திருப்பூர், கழக செயலவைத் தலைவர் தோழர் சு. துரைசாமி அவர்கள் இல்லத்தில், திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமைக் குழுக் கூட்டம், கழக செயலவைத் தலைவர் சு.துரைசாமி தலைமையிலும், கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. தலைமை கழகப் பொறுப்பாளர்களும் மண்டல அமைப்புச் செயலாளர்களும் கலந்து கொண்டு விவாதித்த இந்த கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன:

- திராவிடர் விடுதலைக் கழகத்தின் செயலவையை எதிர்வரும் 21-06-2014 சனிக்கிழமை அன்று கோவையில் கூட்டுவது என்று முடிவெடுக்கப் பட்டது.
- தமிழ்நாட்டில் இயங்கிவரும் வருமான வரித்துறை, சுங்க வரித்துறை முதலிய மத்திய அரசு அலுவல கங்களில், அண்மைக் காலமாக, அனைத்து மட்டங்களிலும், இந்தி பேசும் மாநிலங்களைச் சார்ந்தவர்களே குவிந்து வருகிறார்கள். அவர்களின் தாய் மொழியான இந்தியில் தேர்வு எழுதும் வாய்ப்பினால் மட்டுமின்றி, வட மாநிலங்களில் நடக்கும் தேர்வு மையங்களிலும் அவர்களை தேர்ச்சியடைய செய்ய பல்வேறு முறைகேடு களும் கையாளப்படும் செய்திகளும் கசிகின்றன. இந்த நிலையில் ஒவ்வொரு மாநிலத்தின் மத்திய அரசு அலுவலகங்களிலும், அந்தந்த மாநிலங் களைச் சார்ந்தோரையே தேர்வு செய்து நியமிக்கும் நடைமுறையைப் பின்பற்ற வேண்டும் என்பதை வழியுறுத்தும் வகையில் வருகிற 23-06-2014 திங்கட்கிழமை அன்று சென்னையில், சமூக அக்கறை கொண்ட அரசு ஊழியர்கள், இயக் கங்கள், அமைப்புகளையும் உடன் இணைத்துக் கொண்டு இக்கோரிக்கையை வலியுறுத்தி ஆர்ப் பாட்டம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.
- கழக சார்பில் நடந்துவரும் மக்கள் சந்திப்பு இயக்கத்தை கோவை மாவட்டத்தில் 2014 ஜூன் 10 முதல் ஜூன் 20 வரை நடத்துவது என முடிவெடுக்கப்பட்டது.
- 5-11-2013 அன்று சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர் தோழர் க.சக்திவேல் அவர்களின் இல்லத்தில் கூடிய கழக தலைமைக் குழுவில், கழக ஒழுங்குமுறைகளுக்கு முரணாக செயல்பட்ட குற்றச்சாட்டுகளின் பேரில் தற்காலிகமாக கழகத்திலிருந்து நீக்கி வைக்கப்பட்டிருந்த தோழர்கள் நங்கவள்ளி பொ.கிருஷ்ணன், சேலம் ப.அம்பிகாபதி, மா.அருள்குமார் ஆகியோர் அளித்திருந்த, விளக்கங்களை சேலம் மண்டல குழு தனது 17-5-2014 நாளிட்ட கலந்துரையாடலின் போது ஆய்வு செய்து அளித்திருந்த பரிந்துரையை ஏற்று, மேற்கண்ட மூவரையும் மீண்டும் கழகத்தில் இணைந்து செயல்பட அனுமதிப்பதென முடிவு செய்யப்பட்டது.
- காஞ்சிபுரம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் மாவட்டத் தலைவராக பணியாற்றி வந்த தோழர் மா.டேவிட் பெரியார், சென்னை மாவட்ட துணை செயலாளராக செயல்பட்டு வந்த ஆ.வ.வேலு, காஞ்சிபுரம் -அய்யம்பேட்டை கழகத் தோழர் கா.இரவிபாரதி ஆகியோர் கழக செயலவையில் முடிவெடுக்கப்பட்ட தேர்தல் நிலைப்பாட்டுக்கு எதிராக செயல்பட்டது கழகத்தின் ஒழுங்குமுறைகளுக்கும், கட்டுப் பாட்டுக்கும் எதிரானது என்பதைச் சுட்டிக் காட்டி, 3-5-2014 அன்று விளக்கம் கோரப்பட்டது. அக்கடிதத்திற்கு ஆ.வ.வேலு, கா.இரவிபாரதி ஆகியோர் அளித்த விளக்கங்களில் கழகத்தின் முடிவுகளை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. மா.டேவிட் பெரியார் எவ்வித விளக்கக் கடிதமும் அனுப்பாததால் விளக்கம் அளிக்க ஏதுமில்லை என்பது அறிய வருவதால், மேற்குறிப்பிடப்பட்ட தோழர்கள் மா.டேவிட் பெரியார், ஆ.வ.வேலு, கா.இரவிபாரதி ஆகிய மூவரையும் திராவிடர் விடுதலைக் கழகத்திலிருந்து தற்காலிகமாக நீக்கிட முடிவெடுக்கப்பட்டது. ✦

## வீதி நாடகப் புத்தாக்கப் பயிற்சி

சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழக வீதி நாடக புத்தாக்கப் பயிற்சி, 26-05-2014 காலை முதல் மாலை வரை, சேலம் மாவட்டம் உக்கம்பருத்திக் காடு பெரியார் படிப்பகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் இரண்டு புதிய நாடகங்கள் உரு வாக்கப்பட்டன. நாடகங்களை காணொளியாக பதிவு செய்து, உடனுக்குடன் ஒளிபரப்பப்பட்டு, அதைப் பார்த்து திருத்தங்கள் செய்யப்பட்டது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்துகொண்டு தனது ஆலோசனைகளை வழங்கினார். அடுத்தக்கட்ட பயிற்சி 2014 ஜூன் 22,23 ஆகிய இரண்டு நாட்கள் நடத்த திட்டமிட்டுள்ளனர்.

## வினா – விடை!

✦ ஏழுமலையானுக்கு விசாகப்பட்டினத்தைச் சார்ந்த பக்தர், ரூ.30 இலட்சம் மதிப்புள்ள ஒரு கிலோ எடையுள்ள பாத கவசம் (செருப்பு) வழங்கினார்.
– **செய்தி**

ஏழுமலையான் எந்தக் காலத்திலும் எழுந்து நடக்கவே போவதில்லை என்பதில் பக்தருக்கு அவ்வளவு உறுதியான நம்பிக்கை போலும்! அதனால்தான் ஒரு கிலோ எடையில் செருப்பு.

✦ 1967 இல் தி.மு.க.விடம் ஆட்சியை பறிகொடுத்த போது 41.10சதவீதமாக இருந்த காங்கிரசின் வாக்கு வங்கி 2014 மக்களவைத் தேர்தலில் 4.3 சதவீதமாக சரிந்தது. – **‘தினமணி’ செய்தி**

திவாலாகும் வங்கியைக் காப்பாற்ற முடியாது; இதுக் கெல்லாம் ரிசர்வ் வங்கியும் உதவி செய்யாது!

✦ அன்னிய நேரடி முதலீடு உள்ளிட்ட முடிவுகளை மத்திய அரசுதான் எடுக்க வேண்டுமே தவிர அன்னியநாடுகள் அல்ல.
– **ஆர்.எஸ்.எஸ். தலைவர்**

ஆமாம்! ‘அன்னிய முதலீடு’ பற்றி வெளிநாட்டுக் காரர்களுக்கு முடிவெடுக்க உரிமை கிடையாது; நாங்களே அந்த முடிவை தேசபக்தியோடு எடுப்போம்!

✦ தமிழகத்தில் காங்கிரசை வலுப்படுத்த உள்கட்சித் தேர்தலை நடத்த வேண்டும். – **ஜி.கே. வாசன்**

அருமையான யோசனை! இந்தத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியே மகத்தான வெற்றிகளை குவிக்கும்! இது உறுதி!

✦ கடந்த முறை திருமலைக்கு வந்தபோது நரேந்திரமோடி பிரதமராக வேண்டும் என்று வேண்டினேன். அதை ஏழுமலையான் நிறை வேற்றி வைத்துள்ளார்.
– **திருப்பதியில் வெங்கய்யா நாயுடு பேட்டி**

இந்த ‘வேண்டுதலை’யை 10 வருடத்துக்கு முன்பே வைச்சிருக்கலாம்ல! இப்படித்தான் நீங்க எல்லாத்துலேயும் ‘லேட்’!

✦ வீட்டில் உட்கார்ந்துக் கொண்டே வெவ்வேறு ஓட்டல்களில் தனித்தனியாக உணவுப் பண்டங் களை ‘இணையம்’ வழியாக வாங்கும் காலம் விரைவில் வரும். – **‘தமிழ் இந்து’ செய்தி**

இதுல, என்ன பெரிசா வந்துடப் போவுது? அதற்கான செலவுத் தொகையும் இணையத் திலேயே ‘ஆர்டர்’ செஞ்சா, வருமான்னு சொல்லுங்க!

✦ ஆந்திரப் பகுதியைச் சார்ந்த அரசு ஊழியர்களை புதிதாக உருவாகியுள்ள தெலுங்கானா அலுவல கங்களில் பணிபுரிய அனுமதிக்க முடியாது.
– **தெலுங்கானா முதல்வர் சந்திரசேகர் ராவ்**

ஓ... இதற்குப் பெயர்தான் மொழி வழி ‘தேசப் – பிரிவினை’ என்பதோ!

✦ சுவிஸ் நாட்டு வங்கியில் இந்தியர்கள் போட்டு வைத்துள்ள பணம், இந்தியாவின் வெளிநாட்டுக் கடனைவிட 13 மடங்கு அதிகம். – **செய்தி**

எனவே, கடன் கொடுத்த வெளிநாடுகள், இந்தி யாவை மிரட்ட வேண்டாம் என்று எச்சரிக் கிறோம்.

✦ பெரியார் இயக்கங்களுக்கு பெரியார் திடல் கதவு திறந்தே இருக்கிறது; ஆனால் கொள்கையில் சமரசம் செய்ய மாட்டோம்.
– **மறைந்த பெரியார் சாக்ரடீஸ் படத்திறப்பில் கி.வீரமணி**

அதாவது, தங்கள் கழகத்தைத் தவிர ஏனைய பெரியார் இயக்கத்தினர் எல்லோரும் ‘துரோகிகள்’ என்ற ‘கொள்கையில்’ உறுதியா இருப்போம்னு சொல்ல வர்றீங்க... புரியுது!

✦ ‘ஏழுமலை’யானின் 20 லட்சம் கோடி சொத்துக்கள் சீமாந்திராவுக்கே சொந்தம்; தெலுங்கானாவுக்கு அல்ல.
– **சீமாந்திரா அரசு உத்தரவு**

‘ஏழுமலையான்’ கனவுல வந்து அப்படி சொன்னாருன்னு உத்தரவுல சேத்துக்கங்க; வழக்கு உச்சநீதிமன்றம் போனாலும் ஜெயிச்சுடலாம்!

✦ பாதுகாப்புத் துறையில் 100 சதவீத அன்னிய முதலீட்டை அனுமதிக்க மோடி அரசு முடிவு.
– **செய்தி**

சரியான முடிவு! அன்னிய நாட்டு ஊடுருவல் மற்றும் தாக்குதலிலிருந்து நாட்டைப் பாதுகாக்க அன்னிய நாட்டைத் தான் பயன்படுத்த வேண்டும்! அதுதான் ‘பாரத மாதாவுக்கு’ வெற்றி!

**தலையங்கம்**

## கள்ள மவுனம்!

19 ஆண்டுகளுக்கு முன்பு காவல்துறையால் "தூக்கிலிடப்பட்ட" தனது கணவரின் மரணத்துக்கு நீதியைப் பெற்றிருக்கிறார், அஞ்சலை! அரியலூர் மாவட்டம் வேப்பூர் ஆதி திராவிடர் குடியிருப்பில் வசித்துவரும் அஞ்சலை நடத்திய போராட்டம் இப்போது உதவி ஆணையராக உள்ள ஒரு காவல்துறை அதிகாரிக்கு கைவிலங்கிடச் செய்திருக்கிறது.

மைனர் பெண் ஒருவர் காதலனுடன் ஓடிய வழக்கு அது. பெண்ணின் தந்தை, மகளைக் கண்டுபிடித்துத் தர உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் விசாரணையைத் தொடங்கிய பாடலூர் காவல் நிலைய ஆய்வாளர் கஸ்தூரி காந்தி என்பவர் அடைக்கலம் தந்த சந்தேகத்தின் பேரில் பாண்டியன் எனும் சுமை தூக்கும் தலித் தொழிலாளியை விசாரிக்கிறார். ஏதும் தெரியாத அந்த அப்பாவி கைகள் கட்டப்பட்ட நிலையில் தூக்கில் தொங்கினார். காவல்துறை நடத்திய படுகொலை இப்போது நிரூபிக்கப்பட்டு, அதிகாரி கஸ்தூரி காந்தி கைது செய்யப்பட்டுள்ளார். மக்கள் இயக்கங்களுடன் இணைந்து அஞ்சலை நடத்திய போராட்டம் வீண் போகவில்லை. குறிப்பாக மக்கள் சிவில் உரிமைக் கழகம் இந்த வழக்கைத் தொடர்ந்து நடத்தி, குற்றவாளிகளைத் தண்டிக்கச் செய்துள்ளது.

ஜாதியமைப்பு சமூகத்தில் ஒடுக்கப்பட்ட ஜாதியினரின் 'உயிர்' ஒரு பொருட்டாகவே மதிக்கப்படுவது இல்லை. இப்படித்தான் உ.பி. மாநிலத்தில் கத்ரா மாவட்டத்தில் இரண்டு தலித் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு தூக்கில் தொங்கவிடப் பட்டுள்ளனர். இந்தக் கொடும் செயலைப் புரிந்த 7 பேர் கொண்ட கும்பலில் இருவர் காவல்துறையினர். உ.பி. அரசு முதலில் அலட்சியம் காட்டி, புறக்கணித்த இந்த வழக்கு, இப்போது நாடு முழுதும் கடும் கண்டனத்தை உருவாக்கிய பிறகு சி.பி.அய். விசாரணைக்கு அனுப்பப்பட்டுள்ளது. அய்.நா.வில் பொதுச் செயலாளர் பான்.கி.மூன், "இந்தியா, பாகிஸ்தான், நைஜிரியாவில் – பெண்கள் மீது நடத்தப்படும் தாக்குகள் அதிர்ச்சியைத் தருகின்றன" என்று கூறியுள்ளார். அய்.நா.வின் குழந்தைகள் நிதியத்தின் இந்தியப் பிரதிநிதி லூயிஸ் ஜார்ஜ் அர்செனாட், "இந்தியாவின் கிராமப்புறங்களில் வசிக்கும் 65 சதவீதம் பேர் கழிவறை வசதி இல்லாததால் திறந்த வெளியில் இயற்கை உபாதைகளை கழிக் கின்றனர். இதனால் பெண்கள் நள்ளிரவில் வெளியே செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. அதனால் அவர்களின் பாதுகாப்புக் கேள்விக்குரியாகியுள்ளது" என்று பேசியுள்ளார்.

சேரிகள் இல்லாத கிராமங்கள் இல்லை; கழிப்பறைகள் இல்லாத வீடுகளே அதிகம். ஜாதிய ஒடுக்கு முறைகளும் வன்கொடுமைகளும் வாழ்வியல் போக்குகளாகவே மாறிவிட்டன. அய்க்கிய நாடுகள் அவையிலேயே விவாதங்கள் வந்தால்கூட இந்த நாட்டில் இவைகள் பிரச்சினைகளாகவே மதிக்கப்படுவதில்லை. மோடியின் ஆட்சி நாட்டை எதிர்நோக்கியுள்ளதாக பட்டியலிட்டுள்ள செயல்திட்டங்களில் இந்த ஜாதி, தீண்டாமைகள் எதுவும் இடம் பெறவே இல்லை. வளர்ச்சி வீதம், கட்டமைப்பு வசதி, அன்னிய முதலீடு, நிதிப் பற்றாக்குறை, அன்னிய செலாவணி என்ற சொல்லாடல்களுக்குள்ளே பிரச்சினைகள் முடங்கிப் போய்விடுகின்றன.

தீண்டாமைக் கொடுமை; அதன் அடித்தளமான ஜாதியமைப்பு; பெண்கள் மீதான ஒடுக்கு முறை; தலித் பெண்கள் சந்திக்கும் பாலின வன்முறைகள்; மதிப்பிழந்து போய் நிற்கும் இவர்களின் உழைப்புச் சந்தை; இந்த அவலங்களைப் புனிதப்படுத்தும் மதம், மதச் சடங்கு, பக்தி, கலாச்சாரம், சமூக ஒழுங்கு இவைகளைப் பற்றி எல்லாம் பேசுவதற்கோ, போராடுவதற்கோ, மக்களிடம் எடுத்துச் சொல்வதற்கோ, கட்சிகளையோ இயக்கங்களையோ காண முடிகிறதா? இத்தகைய இயக்கங்களும் அதற்கான போராட்டங்களும் முன்னெடுக்கப்படாத வரை இந்த சமுதாயத்தில் எந்த ஒரு மாற்றத்தையும் கொண்டு வந்துவிட முடியுமா? இந்த பேதங்களை உறுதிப்படுத்திக் கொண்டே அரசு கொண்டுவர முயலும் திட்டங்களின் பயன்கள் ஒடுக்கப்பட்ட மக்களை சென்று அடையுமா? இந்த அடக்குமுறைகளுக்கு துணை போகும் அதிகார மய்யங் களான காவல்துறையும் நிர்வாக அமைப்பும் மாற்றியமைக்கப்படுவதற்கோ மக்களுக்கு நீதி வழங்கு வதற்கோ இந்த அரசுகள் கடுகளவு முயற்சிகளையாவது மேற் கொள்கின்றனவா?

சமூக மாற்றம் – சமூக விடுதலை – அரசியல் மாற்றம் பற்றியெல்லாம் தத்துவங்களையும் நடைமுறைகளை விவாதித்துக் கொண்டிருக்கும் இயக்கங்களாவது இது பற்றிக் கவலைப்படுகிறதா?

நெஞ்சில் கைவைத்துச் சொல்லுங்கள்!

# இருளர் பழங்குடியினருக்கு மறுக்கப்படும் உரிமைகளைக் கண்டித்து கழகம் ஆர்ப்பாட்டம்




விழுப்புரம் மாவட்டம் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 31.5.2014 சனிக் கிழமை மாலை 4 மணியளவில் இருளர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு ஜாதி சான்றிதழ் வழங்கக்கோரி தமிழக அரசை வலியுறுத்தி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட் டத்திற்கு மாவட்டத் தலைவர் ந.வெற்றிவேல் முன்னிலை வகிக்க, அறிவியல் மன்ற செயலாளர் சி.ஆசைத் தம்பி தலைமை வகித்தார்.

மாவட்ட அமைப்பாளர் செநாவாப்பிள்ளை, ந. வெற்றிவேல், மதி, காஞ்சிபுரம் மாவட்ட அமைப்பாளர் செங்குட்டுவன், வி.வி.மு. பொருப் பாளர் இராமலிங்கம், கழக வழக்கறிஞர் துரை அருண், க. இராமர், பழங்குடியினர் பாதுகாப்பு முன்னணி தலைவர் சுடர்வொளி சுந்தரம் ஆகியோர் உரையாற்றினர்.

1952இல் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி பழங்குடியினர் ஆறரை லட்சம் பேர், 2014-லும் அதே ஆறரை லட்சம் மக்கள் தொகை இருப்பதாக கூறுவது எப்படி சரியாகும்?

இரண்டு லட்சம் குடும்பங்களுக்குமேல் உள்ள வீடுகளுக்கு இதுவரை பட்டா வழங்கவில்லை. அதனால் இவர்களுக்கு இருப்பிட சான்றிதழ் மறுக்கப்படுகிறது.

பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் இயங்கும் பல பள்ளிகளுக்கு ஆசிரியர்களே இல்லை.

தமிழகத்தை பொருத்தவரை சில ஆண்டு களாகத்தான் பள்ளிப் படிப்பை முடித்து பழங் குடியினர் மற்றும் இருளர் மாணவர்கள் கல்லூரி படிப்புக்கு வருகின்றனர். இந்த சூழ்நிலையில் அவர்களுக்கு ஜாதி சான்றிதழ் மறுக்கப்படுவதால் கல்லூரி படிப்பை அவர்களால் தொடர முடியவில்லை.

ஜாதி சான்றிதழ் இல்லாமல் கல்லூரி படிப்பு தடைப்பட்டதால் தமிழகத்தில் இதுவரை நான்கு பழங்குடியின மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

எனவே, இந்த மாணவர்கள் கல்லூரிப் படிப்பு தொடர உடனே ஜாதி சான்றிதழ் வழங்க வேண்டும். அதுவரை இந்த மாணவர்கள் கல்லூரி யில் சேர மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும்.

பழங்குடியினர் ஆணையம் இதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் சென்னை மாவட்ட கழகத் தலைவர் பா.ஜான், காஞ்சிபுரம் மாவட்ட செய லாளர் தினேஷ் மற்றும் செ. பிரபு, ச.கு.பெரியார் வெங்கட், கி. சாமிதுரை, ந. அய்யனார் உள்பட பல பகுதிகளிலிருந்தும் தோழர்கள் பங்கேற்றனர்.

## 'புதிய குரல்' நடத்திய பெரியார் குடும்பங்களின் சந்திப்பு

ஜாதி மறுப்புக் கொள்கைகளை வாழ்வியலாக்கி வாழும் பெரியார் குடும்பங்களின் சந்திப்பு பயிற்சியரங்கை 'புதிய குரல்' அமைப்பு ஆண்டுக்கு இரு முறை கூடி நடத்தி வருகிறது. பெரியார் இயக்கங்களுக்கும் அப்பால் வாழும் குடும்பங்களை ஒன்று திரட்டி கருத்துப் பரிமாற்றத்தோடு கொள்கை உறவுகளை வளர்த்தெடுக்கும் முயற்சியில் தோழர் ஓவியாவும் அவரது தோழர்களும் இணைந்து செயல்பட்டு வருகின்றனர். கடந்த 23, 24, 25 தேதிகளில் கன்னியாகுமரியில் நடந்த குடும்ப சந்திப்பு நிகழ்வில், மதம்-மூடநம்பிக்கை-பெண்ணுரிமை குறித்த கருத்துகள் விவாதிக்கப்பட்டன. பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, மதம் குறித்து உரையாற்றி, விவாதங்களிலும் பங்கேற்றார். குழந்தை களுக்கான அறிவியல் கலந்துரையாடல் நிகழ்வுகள் இசைப் பாடல்களோடும் தனியே நிகழ்ந்தன. அ. மார்க்ஸ் மதத்தின் சர்வதேச அரசியல் குறித்துப் பேசினார். அமைப்பின் தோழர்கள் தோழியர்கள் கருத்துகளைப் பகிர்ந்தனர். இரவில் ஆவணப் படங்கள் திரையிடப்பட்டன.

## மன்னார்குடியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

இலங்கையில் கடந்த 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற முள்ளிவாய்க்கால் இனபடுகொலையில் 5 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி தமிழின உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பில் மன்னை வட்ட லாரி உரிமையாளர்கள் சங்கப் பொருளார் சேரன்குளம் செந்தில்குமார், திராவிடர் விடுதலைக் கழக திருவாரூர் மாவட்ட செயலாளர் இரா.காளிதாசு ஆகியோர் தலைமையில் மன்னார்குடி பேருந்து நிலையத்தில் நடைபெற்றது. தமிழ் தேசிய விடுதலை இயக்கப் பொதுச் செயலாளர் தியாகு, மன்னை வட்ட லாரி உரிமையாளர்கள் சங்கத் தலைவர் அணையா விளக்கு அய்யப்பன், தமிழக தலித் மக்கள் முன்னேற்ற கழக மாநிலத் தலைவர் ராமசாமி, சிபிஎம்எல். மக்கள் விடுதலை மாவட்ட செயலாளர் மருதசெல்வராசு, தமிழ் தேசிய விடுதலை இயக்க மாவட்ட செயலாளர் புகழேந்திரன், த.தே.பொ.கட்சி நகர செயலாளர் செயபால், திருத்துறைப்பூண்டி ஒன்றிய செயலாளர் தனபால், நாம் தமிழர் கட்சி நகர செயலாளர் முத்து செழியன், தமிழ் மாநில தமிழர் கட்சித் தலைவர் தங்க. குமரேசன், தலித் கூட்டணி மாநில ஒருங்கிணைப்பாளர் பிரபு, மண்டல செயலாளர் லெனின், புரட்சிச் சிங்கங்கள் பொதுச் செயலாளர் சிரஞ்சீவி, திராவிடர் விடுதலைக் கழக மன்னை ஒன்றிய செயலாளர் ரமேஷ், நல்லிக்கோட்டை முருகன், பா.வெங்கட்ராமன், வழக்கறிஞர் செந்தமிழ்ச்செல்வன் ஆகியோர் உரையாற்றினர். முன்னதாக போரில் இறந்த தமிழர்களின் படத்திற்கு மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தி மெழுகுவர்த்தி தீபம் ஏற்றப்பட்டது.

# காஷ்மீரின் '370' ஆவது பிரிவு உருவான வரலாறு

***ஜம்மு – காஷ்மீர் மாநிலத்துக்கு தனி அரசியல் சட்டத்தை உருவாக்கிக் கொள்வதற்கு வழங்கப்பட்டுள்ள 370 ஆவது பிரிவை நீக்கும் நோக்கத்தோடு மோடி ஆட்சி விவாதங்களைத் தொடங்கியிருக்கிறது. காஷ்மீர் மாநிலத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜிதேந்திரசிங் பிரதமர் அலுவலக இணையமைச்சராக்கப்பட்டுள்ளார். பதவி ஏற்ற அடுத்த நாளே இந்த விவாதத்தை அவர் தொடங்கிய நிலையில், '370' உருவான வரலாற்றை விளக்குகிறது இக்கட்டுரை.***

இந்தியாவில்தான் காஷ்மீர் இருக்கிறது. ஆனா, அது எப்படி இந்தியாவுக்குள் வந்தது என்பதை இன்றைய பெரும்பான்மையானவர்கள் அறிய மாட்டார்கள். இந்தியா சுதந்திரம் பெற்றபோது 526 சமஸ்தானங்கள் இருந்தன. இவற்றில் பெரும்பாலானவை இந்தியாவுடன் இணைந்துவிட்டன. இணைய மறுத்த ஐதராபாத் சமஸ்தானத்தை இராணுவ பலத்தால் இணைத்தார் அன்றைய உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் பட்டேல். காஷ்மீர் சமஸ்தானத்தை இந்து மன்னரான ஹரிசிங் ஆட்சி செய்து வந்தார். அங்கே உள்ள மக்களில் பெரும்பான்மையானவர்கள் இஸ்லாமியர்கள். இதனால் காஷ்மீர், இந்தியாவுடன் இணைவதா, பாகிஸ்தானுடன் இணைவதா என்ற குழப்ப நிலை நீடித்தது.

பாகிஸ்தானுடன் இணைந்தால் தனி சமஸ்தானத் தகுதியுடன் நீடிக்கலாம் என்றும், இந்தியாவுடன் இணைந்தால் ஏற்கெனவே உள்ள மாநிலங்களில் ஒன்றாகி, தனித் தன்மையை இழக்க வேண்டி வரும் என்றும், மன்னர் ஹரிசிங்கிடம் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு, தனது பூர்வீகமான காஷ்மீர், இந்தியாவுடன் இணைந்திருக்க வேண்டும் என விரும்பினார். இதனை கௌரவப் பிரச்சினையாகக் கருதினார். காஷ்மீரைத் தன்னுடன் இணைப்பதில் விருப்பம் காட்டிய பாகிஸ்தான் தனது இராணுவத்தை நிலைநிறுத்தியது. இந்தியாவின் உதவியை நாடினார் மன்னர் ஹரிசிங்.

இந்திய எல்லையிலிருந்து இந்திய இராணுவமும், பாகிஸ்தான் எல்லையிலிருந்து அந்நாட்டு இராணுவமும் காஷ்மீருக்குள் ஊடுருவின. காஷ்மீரின் மூன்றில் ஒரு பகுதியை பாகிஸ்தான் கைப்பற்றிக் கொண்டது. அது சுதந்திர காஷ்மீர் (Azad Kashmir) என்று பாகிஸ்தான் கூறுகிறது. அதனை ஆக்கிரமிப்பு காஷ்மீர் (Pakistan Occupied Kashmir-POK) என்று இந்தியா கூறுகிறது. பாகிஸ்தான் கைப்பற்றிய பகுதி போக, எஞ்சிய மூன்றில் இரு பங்கு பகுதியை இந்திய இராணுவம் கைப்பற்றிக் கொண்டது. காஷ்மீர் மீதான உரிமைக்கு இருநாடுகளும் போட்டியிட்டன.

இந்த விவகாரம் 1948 இல் ஐக்கிய நாடுகள் சபைக்குச் சென்றது. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் 21.4.1948 அன்று தீர்மானம் (எண்.47) நிறைவேறியது. இதன்படி இருநாடுகளும் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்ய வேண்டும்.

ஊடுருவிய பகுதியிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும். ஆனால், இது நிறைவேறவில்லை. இந்தியாவும் பாகிஸ்தானும் தனது செயலைச் சட்டப்பூர்வமானது என்று நிரூபிக்க இயலாததால், காஷ்மீர் மக்களிடம் ஓட்டெடுப்பு நடத்தி தீர்வு காண்பதாக ஐ.நா. சபையில் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

காஷ்மீர் மக்கள் இந்தியாவுடன் இணைய விரும்புகிறார்களா? பாகிஸ்தானுடன் இணைய விரும்புகிறார்களா? அல்லது தனிநாடாகவே இருக்க வேண்டும் என விரும்புகிறார்களா? என்ற மூன்று கேள்விகள் அடிப்படையில் ஓட்டெடுப்பு நடத்த வேண்டும், ஓட்டெடுப்பின் மூலம் கிடைக்கும் மக்கள் கருத்தை இந்தியாவும் பாகிஸ்தானும் மன்னரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதுதான் ஐ.நா. அவையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம்.

காஷ்மீர் இந்தியாவுடன் முழுமையாக இணைய வேண்டும் என்கிற நேருவின் கருத்துக்கு ஆதரவாக இருந்தார் மாநில முதல்வரான (அப்போது அதற்கு பிரதமர் பதவி எனப் பெயர்) ஷேக் அப்துல்லா. அவருக்கு ஐ.நா. சபையின் தலையீடு பிடிக்கவில்லை. பொது வாக்கெடுப்பிலும் ஆர்வமில்லை. நேரு தலைமையிலான இந்திய அரசாங்கமோ பொது வாக்கெடுப்புக்கு ஒப்புக் கொண்டிருந்தது. ஆனால், பாகிஸ்தான் தன்னுடைய இராணுவத்தை வெளியேற்றினால்தான் பொது வாக்கெடுப்பு நடத்தப்படும் என இந்தியா கூறியது.

நேருவுடன் ஷேக் அப்துல்லா நட்பு பாராட்டுவதாலும், இந்திய இராணுவம் நிலை கொண்டிருப்பதாலும் காஷ்மீர் மக்களால் சுதந்திரமாக வாக்களிக்க முடியாது என பாகிஸ்தான் கூறியது. உலக நாடுகளின் தலையீட்டில் இருதரப்பு இராணுவத்தையும் வெளியேற்றலாம் என்றும் பாகிஸ்தான் தெரிவித்தது. காஷ்மீர் பிரச்சினையில் மூன்றாவது நாட்டின் தலையீட்டை விரும்பவில்லை எனக் கூறி, பாகிஸ்தானின் யோசனையை நிராகரித்த இந்தியா, பொது வாக்கெடுப்பு என்கிற அய்.நா. ஒப்பந்தத்தையும் நிறைவேற்றாமல் கை கழுவியது.

அதே நேரத்தில் காஷ்மீரைத் தக்க வைத்துக் கொள்வதில் இந்தியா முழுமையாகக் கவனம் செலுத்தியது. அதன் விளைவுதான், காஷ்மீர் மாநிலத்திற்கு சிறப்புத் தகுதி தரும் 370 ஆவது அரசியல் சட்டப் பிரிவின் உருவாக்கம். இந்த சிறப்புத் தகுதியைப் பெறுவதன் மூலம் காஷ்மீரின் சுயநிர்ணய உரிமையைப் பாதுகாக்கலாம் என நினைத்தார் ஷேக் அப்துல்லா. பொது வாக்கெடுப்பைத் தவிர்க்க இது நல்ல வழி என நினைத்தது நேரு அரசாங்கம்.

இந்திய அரசியல் சாசனத்தின் 370 ஆவது பிரிவு, ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு தற்காலிகமாக சிறப்புத் தகுதியை அளிக்கிறது. இந்த சிறப்புத் தகுதியின்படி இந்திய மாநிலங்களில் ஜம்மு காஷ்மீர் மாநிலம் மட்டுமே பெருமளவில் மாநில சுயாட்சியை கொண்டுள்ளது. ஜம்மு-காஷ்மீரின் மாநில ஆட்சிக் காலம் 6 ஆண்டுகளாகும். காஷ்மீர் மக்கள் தங்களுக்கு என்று சிறப்புச் சட்டங்கள் இயற்றி அதன் கீழ் வாழ்கிறார்கள். இதில் குடியுரிமை, சொத்துரிமை, அடிப்படை உரிமைகள் போன்றவை அடங்கும்.

இந்தச் சிறப்பு சட்ட பாதுகாப்பு காஷ்மீருக்கு மட்டுமல்லாமல், இமாசலபிரதேசம், அருணாசல பிரதேசம், அந்தமான் நிகோபர் தீவு, நாகாலாந்து உள்ளிட்ட பகுதிகளில் வசிக்கிற பழங்குடியினருக்கும் உண்டு. சுருக்கமாக சொல்ல வேண்டுமென்றால், இந்திய பாராளுமன்றத்தில் இராணுவம், தகவல் தொடர்பு, வெளியுறவு விவகாரம் ஆகிய துறைகளைத் தவிர்த்து மற்ற துறைகளில் இயற்றப்படும் எந்தச் சட்டமும் ஜம்மு காஷ்மீர் சட்டசபையின் ஒப்புதல் இன்றி அம்மாநிலத்தில் செல்லாது.

பிரதமர் நேருவின் நம்பிக்கைக்குரியவரும் அவரது அமைச்சரவையில் இலாகா இல்லாத அமைச்சராக இருந்தவரும், காஷ்மீர் மகாராஜாவான ஹரிசிங்கின் முன்னாள் திவானுமான தமிழகத்தைச் சேர்ந்த கோபால்சாமி அய்யங்கார்தான் இச்சட்டப்பிரிவை வடிவமைப்பதில் முன்னின்றார். உள்துறை அமைச்சர் பட்டேலின் ஒத்துழைப்பையும் கோபால்சாமி அய்யங்கார் பெற்றார். இதன் காரணமாக, 370 ஆவது சட்டப் பிரிவு நிறைவேறியது.

மேலும், இந்தியாவுக்குத் தனியாக அரசியல் சாசனம் இருப்பதுபோல் காஷ்மீருக்குத் தனியாக அரசியல் சாசனம் உருவாக்கிக் கொள்ள இந்திய அரசு ஒப்புக் கொண்டு, அதன்படி காஷ்மீருக்குத் தனி அரசியல் சாசனச் சட்டம் உருவாக்கப்பட்டு, 17.11.1956 இல் நிறைவேற்றப்பட்டது. இது, 26.1.1957இல் இந்தியாவின் 8 ஆவது குடியரசு நாளில் நடைமுறைக்கு வந்தது. காஷ்மீருக்கெனத் தனி தேசியக் கொடியும் அமைத்துக் கொள்ள சட்டம் அனுமதித்தது. அதன்படி, காஷ்மீர் தேசியக் கொடியும் உருவானது.

பொது வாக்கெடுப்பு நடத்தாமல் காஷ்மீரைத் தக்க வைத்துக்கொள்ள விரும்பிய இந்தியா, எக்காரணம் கொண்டும் காஷ்மீரை இழந்துவிடக் கூடாது என நினைத்ததால்தான் சிறப்புத் தகுதி வழங்கும் 370 ஆவது பிரிவுக்கு வழி வகுத்தது. 1974 ஆம் ஆண்டு போடப்பட்ட இந்திரா காந்தி-ஷேக் அப்துல்லா ஒப்பந்தத்திலும் (சிம்லா ஒப்பந்தம்) அரசியல் சாசனத்தின் 370 ஆவது பிரிவின்படி ஜம்மு-காஷ்மீரின் உரிமைகள் பாதுகாக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. எனினும், இதனை மாற்று வழிகளில் அடிக்கடி மீற முயற்சிப்பது இந்தியத் தரப்பின் வழக்கமாக இருக்கிறது. பாதுகாப்பு என்ற பெயரில் அளவுக்கதிகமாக இராணுவத்தைக் குவிப்பது, மாநில அரசைக் கலைத்துவிட்டு குடியரசுத் தலைவர் ஆட்சியை அமைப்பது, தீவிரவாதிகளை ஒடுக்குவது என்ற பெயரில் இளைஞர்களை வேட்டையாடுவது, பெண்களை பாலியல் கொடுமைகளுக்குள்ளாக்குவது என 370 ஆவது பிரிவுக்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகள் காஷ்மீரில் அதிகம்.

காஷ்மீர் மக்களுக்கு வழங்கிய உரிமைகளை அவ்வப்போது இந்திய அரசு பறித்தே வந்துள்ளது. இது குறித்து எல்.கே.அத்வானி, தனது சுயசரிதையில் இந்த அதிகாரப் பறிப்புகளை பெருமையுடன் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

"ஜம்மு காஷ்மீர் சட்டமன்றத்தில் அனுமதி பெற்றுத்தான் எதையும் செய்ய வேண்டும் என்ற வெறுக்கக்கூடிய முறையை இந்திய அரசு நீக்கியது. அம்மாநிலத்தில் இந்திய குடியரசின் நிறுவனங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த பல கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. தேர்தல் ஆணையம், தலைமை தணிக்கை அதிகாரியின் அதிகாரம், காஷ்மீருக்கு விரிவாக்கப்பட்டது. அம்மாநில முதல்வரை 'பிரதமர்' என்று அமைக்கப்படும் முறை ஒழிக்கப்பட்டது" என்று எழுதியுள்ளார்.

சிறப்புத் தகுதியை வழங்கும் 370 ஆவது பிரிவினால் காஷ்மீர் மக்களுக்கு நேரடிப் பலன் தரும் அம்சங்கள் சில மட்டுமே. அவற்றில் முக்கியமானது, காஷ்மீரிகளைத் தவிர வேறு யாரும் அங்குள்ள நிலங்களை வாங்க முடியாது என்பதாகும். இதனால் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு மலிவு விலையில் நிலத்தை தாரை வார்க்கும் புதிய பொருளாதாரக் கொள்கையின் முயற்சி அங்கு பலிக்கவில்லை. அதே நேரத்தில், காஷ்மீரில் நிரந்தரமாக வாழ்பவர்களுக்கே நிலம் உரிமை என்பதால், வெளி மாநிலத்தவரைத் திருமணம் செய்து கொள்ளும் காஷ்மீர் பெண்களுக்கு நிலம் தொடர்பான சொத்துகளில் உரிமை இல்லை என மறுக்கப்பட்டது. எனினும், வெளி மாநிலப் பெண்களைத் திருமணம் செய்து கொள்ளும் காஷ்மீர் ஆண்களுக்கு நிலமும் அதனைச் சார்ந்த சொத்துகளும் உரிமையுடையனவாக இருந்தன.

இந்தப் பாலின பாகுபாட்டுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கில், 2002 ஆம் ஆண்டில் ஜம்மு-காஷ்மீர் மாநில உயர்நீதிமன்றத்தின் முழு அமர்வு வழங்கிய தீர்ப்பின் மூலம், வேறு மாநிலத்தைச் சேர்ந்தவரைத் திருமணம் செய்து கொண்டாலும், காஷ்மீர் பெண்களுக்கான சொத்துரிமை நீடிக்கும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

காஷ்மீர் மாநிலத்திற்கு மட்டும் ஏன் இந்த சிறப்புத் தகுதி என்று பொதுவாகக் கேட்கப்பட்டாலும், இந்தியாவில் உள்ள பிற மாநிலங்கள் சிலவற்றுக்கும் அந்தந்த மாநிலங்களின் தன்மைக்கேற்ப இதுபோல சிறப்புத் தகுதி அளிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசியல் சாசனத்தின் 371 ஆவது பிரிவின்படி மகாராஷ்டிராவின் விதர்பா, மரட்வாடா, குஜராத்தின் சவுராஷ்ட்ரா, கட்ச் ஆகிய பகுதிகளுக்கும் வளர்ச்சி நோக்கத்தின் அடிப்படையில் சிறப்புச் சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. 371ஏ பிரிவு நாகலாந்திலுள்ள ஒரு மாவட்டத்திற்கும், 371 ஜே பிரிவு ஐதராபாத்துக்கும் சிறப்புத் தகுதிகளை வழங்குகிறது.

நமது அரசியல் சாசனத்தின் தொடக்கத்திலேயே, "இந்தியா, அதாவது பாரதம் பல மாநிலங்களின் ஒன்றியம்" என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. மாநிலத்தின் மொழி, இனம், பண்பாடு, மக்களின் வாழ்க்கை முறை இவற்றின் அடிப்படையில் அவர்களின் உரிமைகள் காக்கப்பட சில சிறப்பு சட்டப் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்துத்வா என்கிற நெ(வெ)றியைத் தவிர வேறெதுவும் இந்த மண்ணில் இருக்கக்கூடாது என்ற நோக்கத்தில் செயல்படும் பா.ஜ.க.வும், அதன் மூளையான ஆர்.எஸ்.எஸ்.சும் காஷ்மீர் மாநிலத்திற்குத் தரப்பட்டுள்ள சிறப்புத் தகுதியை நீக்குவதற்கான முதற்கட்ட முயற்சிகளை இத்தகைய விவாதங்கள் மூலம் தொடங்கியுள்ளன. பதவியேற்ற இரண்டாம் நாளிலேயே தேசிய அளவிலான இத்தகைய சர்ச்சை உருவாகியிருப்பது குறித்து பிரதமர் நரேந்திர மோடியிடமிருந்து எந்த வார்த்தையும் வெளிப்படவில்லை. குஜராத் கலவரத்தின்போதே இரண்டு நாட்கள் கண்டுகொள்ளாமல் இருந்து, அதன் பின் 'அமைதி'யை உருவாக்கிய வளர்ச்சியின் நாயகராயிற்றே அவர்! காஷ்மீரிலும் 'அமைதி'யை நிலைநாட்டக்கூடும்.

**(கோவி. லெனின், இணையத்திலிருந்து)**

DATE OF PUBLICATION 04.06.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# விடுதலைப்புலியின் களப்போருக்கு பெங்களூர் "அண்ணாச்சி"யின் அளப்பரிய உதவி! கழகத் தலைவர் உருக்கமுடன் நினைவு கூர்ந்தார்

*22-05-2014 வியாழக்கிழமை மாலை 6-00 மணியளவில், கர்நாடக மாநிலம், பெங்களூர்த் தமிழ்ச் சங்க கட்டிடம், திருவள்ளுவர் அரங்கில் மறைந்த, பெங்களூர் தமிழ்ச் சங்கத் தலைவரும், கர்நாடகத் தமிழர்ப் பேரவையின் தலைவருமாகிய திரு பா.சண்முகசுந்தரம் (எ) அண்ணாச்சி அவர்களின் 75 வது பிறந்த நாள் விழா நடைபெற்றது. மறைத்திரு பா.சண்முகசுந்தரம் நினைவு அறக்கட்டளை சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சியில் "அண்ணாச்சி சிறப்பு மலர்" வெளியிடப்பட்டது. திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி மலரை வெளியிட உலகத் தமிழர் பேரமைப்பு தலைவர் பழ.நெடுமாறன் பெற்றுக் கொண்டார். காவேரிக் கலவரம், தொடர்வண்டித் துறையினரின் நிலம் கையகப்படுத்துதல், தலைமுறைக் கணக்காய் வாழ்ந்தோரை வனத்துறையினர் விரட்டி அடித்தல் போன்ற நிகழ்வுகளில் கருநாடகத் தமிழரின் உரிமை காக்க முன் நின்றவரும்; ஈழ விடுதலை ஆதரவாளரும்; விடுதலைப் புலிகளின் தோழருமான அண்ணாச்சி அவர்களை நினைவு கூர்ந்து, பலரும் உரையாற்றினர்.*



*கழகத்தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரையின் சுருக்கம்:*

*கொளத்தூரில் புலிகள் பயிற்சி எடுத்துக்கொண்டிருந்தபோது, பெங்களூரில் அண்ணாச்சி ஏற்பாட்டில் புலிகளுக்கு இரண்டு இலக்கம் உருபாக்கள் நிதி அளித்ததுதான் அப்பயிற்சிப் பாசறைக்குக் கிடைத்த முதல் பெரிய நன்கொடை. அவற்றோடு பயிற்சியாளர்களுக்கு, பயிற்சி முடிந்து ஈழம் திரும்பும் புலிகளுக்கான சீருடைகள், புலி இலச்சினையோடு கூடிய தொப்பிகள், தோள்பட்டையில் பொருத்தப்படும் உலோகத்தினாலான எழுத்துகள் என உதவிகள் செய்தவர். தொடர்ச்சியாக நடேசன், டேவிட் போன்றோரைத் தங்கள் இல்லத்திலேயே தங்கவைத்து இயக்க ஆதரவு பரப்புரை பணிகளுக்கு ஊக்கமும் அளித்தவர்.*

*அவ்வாறு அங்கு தங்கியிருந்து பணியாற்றிய (கருப்பு) தினேஷ் தான் பிற்காலத்தில் தமிழ்ச்செல்வனாகி புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவராக, அரசியல் ஆலோசகர் அன்டன். பாலசிங்கம் அவர்களின் மறைவுக்குப் பின்னர், சர்வதேச பேச்சு வார்த்தைக் குழுவுக்குத் தலைமையேற்று சிறப்பான பங்களிப்பை ஈந்தார். அது போல அங்கு தங்கியிருந்த டேவிட், பின்னாட்களில் தமிழீழ அரசின் நீதித்துறையில் நீதிபதியாக பணியாற்றினார். பெங்களூரில் ஈழ ஆதரவு கருத்தரங்குகள், பேரணிகள், மாநாடுகள், கண்காட்சிகள் தொடர்ச்சியாக வீச்சாக நடத்துவதற்கு காரணமானவர்.*

*தமிழரல்லாத, குடியரசுத் துணைத் தலைவர் ஜாட்டி, பின்னாளில் இந்தியத் தலைமை அமைச்சராய் விளங்கிய சந்திரசேகர், இந்திய பாதுகாப்பு அமைச்சராய் உயந்த ஜார்ஜ் பெர்ணாண்டஸ் போன்றோரை தமிழர் நிகழ்வுகளுக்கு அழைத்து கலந்துகொள்ளச் செய்ததன் பலனாய் பிற தேசிய இன மக்களிடையிலும், கருநாடக மாநிலத்திலும் ஈழ விடுதலைக்கான பரவலான ஆதரவுத் தளம் உருவானதற்கு காரணமானவர், அண்ணாச்சி!*

*தமிழர்களின் மொழி, பண்பாட்டுத் தளமாக பெங்களூர் தமிழ்ச் சங்கம் விளங்க தமிழர்களின் உரிமை காப்புத் தளமாக இயங்குவதற்கென கருநாடகத் தமிழர்ப் பேரவை உருவாக்கப்பட்டு, புலவர் பாவிசைக்கோ, பேரா. அப்துல்காதர், அறிவுமதி போன்ற பல பாவலர்கள் பங்கேற்பில் பாவரங்கங்கள், புலவர் பாவிசைக்கோ படைத்த 'விடுதலைப் புலிகள்' , 'மண்ணை நம்பாத மரங்கள்' போன்ற பல நாடகங்கள், பொருள் திரட்டும் பணிகள் ( பொருள் எனில் பணம் என்று மட்டும் பொருள் கொள்ளலாகாது ) என எழுச்சியும், உற்சாகமும் பொங்க களப்பணிகள் நடந்தேறியதற்கு காரணமானவர்.*

*இவ்வாறாக சுற்றிச் சுழன்று பெருவீச்சில் நடந்த எல்லாப் பணிகளிலும் அண்ணாச்சியே அச்சாணி ஆவார். அவைதாம் பின்னாளில் இராஜீவ் கொலையின் போது அவரும், அவரது மகனும், புலவர், ஜெகநாதன் போன்ற பலரும் புலனாய்வுப் பிரிவினரால், காவல்துறையினரால் பல சங்கடங்களை, கொடுமைகளைச் சந்திக்க வைத்தன.*

*கருநாடகத்தின் புகழ்மிக்க நடிகர் இராச்குமார், சந்தன வீரப்பனால் கடத்தப்பட்டார். நோக்கம் எதுவாகவும் இருக்கலாம். ஆனால், தன் நாட்டுப் பெருமைமிகு மனிதர் ஆயிற்றே என கருநாடக அரசும், தன் நாட்டில் கடத்தல் நடந்துவிட்டதே என தமிழ்நாட்டு அரசும், தங்கள் குடும்பத் தலைவரைக் கடத்திவிட்டார்களே என அவரது குடும்பத்தாரும், அவரது சுவைஞர்களும், தவித்துத் துடித்ததைப் போலவே - ஏன்?... அவர்களனைவரையும் விட கூடுதலாக - ஏதேனும் எதிர்பாராமல் அவருக்கு (இராச்குமாருக்கு) நடந்துவிட்டால் கருநாடகத்தில் வாழும் தமிழர் நிலை என்னவாகும் என்ற பெருந்தவிப்போடு எல்லோரிடமும் நடந்தார்; எல்லாக் கதவுகளையும் தட்டினார்; எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டார், அண்ணாச்சி!*

*சந்தன வீரப்பனோடு, அரசுகளுக்கு ஒப்பந்தம் ஏற்பட்டு, ஒப்பந்தக் கூறுகள் நிறைவேற்றப்பட்ட பின்னரும், ஒரு வழக்கில் பெறப்பட்ட இடைக்காலத் தடையால், வீரப்பன் கோரியவாறு நீதிமன்ற பிணை ஆணை சிலருக்குக் கிடைக்காத நிலை ஏற்பட்ட போது பெருந்தவிப்போடு அலைந்து திரிந்தார். தங்கள் நலனை, பலனைக் கருதி பிறர் தவித்து நின்றதைக் காட்டிலும் தமிழர் நலனைக் கருதி தவித்துக் கலங்கியது மிகப்பெரிது. ஆனால் இடையில் யாரோ இதனைப் பலனாக்கிக் கொள்ள, இவர் மீது நண்பர்கள் சிலரே அய்யங் கொண்டதுதான் அவருக்குக் கிடைத்த பலனாகிப் போனது ஒரு அவலம்.*

*சிற்றரசரைப் போல பெரிய மாளிகைகளில் பெருமிதத்தோடு வாழ்ந்த அவர் சிறிய வாடகை வீட்டில் வண்ணம் பழுத்த உடைகளோடு, முடங்கிய உடலோடு, உயர் சிகிச்சைப் பெற இயலா வறுமையோடு தனது கடைசி நாட்களைக் கழித்ததும் பொதுவுக்கே தன்னை ஒப்படைத்துக் கொண்ட அவர், தனது தனி வாழ்வை, தொழிலை, அன்பு மகனைக் கூட கவனிக்காமல் விட்டதும் பேரவலம். ஒரு காலகட்டத்தில் அவரது நட்புறவில் முளைவிட்ட சிறு நெருடலை - அவரது இறுதிக் காலத்தை மறைவை இப்போதும் கலங்கிய கண்களோடு அசை போடுகிறேன்.*

*பிற மாநிலங்களில் இருந்தும், கருநாடகத்தின் பிற பகுதிகளிலிருந்தும் தமிழ்ச் சங்கத்தினரோ, முன்னணித் தமிழர் நலம் பேணும் தமிழ்ப் பேராளர்களோ வந்துவிட்டால் தனது அனைத்து பணிகளையும் புறந்தள்ளிவிட்டு அவர்தம் நெஞ்சம் நெகிழ வரவேற்று மகிழ்வித்த விருந்தோம்பல்; தனது தாயிடம் அவர் கொண்டிருந்த பணிவு கலந்த, அளவு கடந்த பாசம், தமிழர் நலமோ, சரக்குந்து உரிமையாளர் நலனோ, ஓட்டுநர்கள் உரிமையோ - அது காவல் துறையினராலோ, வேறு துறையினராலோ சிறு அளவில் பாதிக்கப்பட்டாலும் பாதிப்புக்குக் காரணமானவர் அரசு, அமைச்சு, அதிகாரி என எந்த நிலையினரானாலும் அவர்கள் தங்கள் தவறைத் திருத்திக் கொள்ளும்வரை, இயலாத நிலைகளில் மன்னிப்புக் கேட்கும்வரை பருந்திடம் தன் குஞ்சுகளைக் காக்க சீறிச் சிலிர்த்துப் போராடும் தாய்க் கோழியைப் போலப் போராடும் அஞ்சா நெஞ்சம்; புரட்சிக் கவிஞர் போன்றோரின் பாக்களில் அவர் கொண்டிருந்த பிடிப்பு, புலவர் பாவிசைக்கோவின் பாக்களை, புலவரே மறந்திருக்கும் பாக்களை அடி பிறழாமல், சுவைத்து சுவைத்து சொல்லி மகிழும் பாங்கு, பன்மொழிப் புலமை; அவரது அமைதியான ஆனால் அழுத்தமான குரல்; இந்திய அளவில் சரக்குந்து உரிமையாளர் அமைப்பில் எந்தப் பதவியிலும் இல்லாதபோதுகூட அவர் தனித்துவமாகக் கொண்டிருந்த செல்வாக்கு; எல்லாத் தமிழினத் தலைவர்களோடும் நல்ல நட்பினைப் பேணிவந்தாலும் அந்நட்புக்காக தனது கருத்தை மாற்றிக்கொள்ளாத பேராண்மை; புலிகள் இயக்க ஆதரவுப் பணிகளில் மூழ்கிப்போய் பெரு வருவாய் ஈந்த தன் தொழிலில் எல்லாவற்றையும் இழந்து தொடக்க நிலைக்கே போய்ச் சேர்ந்த கொடுமை .. என எவையெவையோ என் நெஞ்சத்துள் அலைமோதுகின்றன.*

*அவரது மனித நேயம், தமிழர் பற்று, தமிழ் உணர்வு, பொதுமை உணர்வு, பண்பு நலன் என மிளிர்ந்த அவரது பொது வாழ்க்கை நமக்கான பாதை காட்டும் ஒளி விளக்கு; அவரது தனி வாழ்க்கை அனைவருக்குமான எச்சரிக்கை விளக்கு. அண்ணாச்சி இல்லாமல் போய்விடவில்லை; என்றும் வாழ்வார் நம் உள்ளங்களில்; என்றும் வாழ்வார் அனைத்து இன உணர்வுத் தமிழர் நெஞ்சங்களில்- என தமது உரையில் குறிப்பிட்டார்.*

## காலடுவெல் 200 ஆவது பிறந்த நாள்

*22-05-2014 வியாழக்கிழமை காலை 10-00 மணியளவில், பெங்களூர் பென்சன் ரோடு, இந்திய சமூகக் கழகம் (I.S.I) அரங்கில், இராபர்ட் கால்டுவெல் அவர்களின் 200வது பிறந்த நாள் விழா, 'சிறகுகள்' இலக்கிய வட்டம் தொடக்க விழா, சாகித்ய அகாதெமி விருது பெற்ற இறையடியான் அவர்களுக்குப் பாராட்டு விழா ஆகிய முப்பெரும் விழாக்கள் நடைபெற்றன. உலகத் தமிழர் பேரமைப்பு (கர்நாடக கிளை) சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விழாவில் உலகத் தமிழர் பேரமைப்பு தலைவர் பழ.நெடுமாறன், திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, முதலானோர் உரையாற்றினார்கள்.*


*அடுத்த இதழில்...*

**கழகம் நடத்திய 'மக்கள் சந்திப்பு திட்ட'த்தின் எழுச்சி!**

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம்**
**ரூ.200**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆9941613535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 5th June 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | ஜூன் 12, 2014 | புரட்சி 13 | முழக்கம் 22 | விலை: ரூ.3.00


## கரூர்–திருச்சிப் பகுதிகளில் கழகத்தின்

# மக்கள் சந்திப்பு இயக்கம் வெற்றி நடை

ஊர்தோறும் சென்று மக்களை சந்தித்து கழகத்தின் செயல்பாடுகளை விளக்கிடும் துண்டறிக்கைகளை வழங்கி பெரியார் கொள்கைகளை விளக்கிடும் மக்கள் சந்திப்பு இயக்கத்தை திராவிடர் விடுதலைக் கழகம் தொடர்ந்து நடத்தி வருகிறது. கழகத்தின் பரப்புரைக்காக வாங்கப்பட்டுள்ள 'வேனில்' தோழர்கள் இந்தப் பயணத்தை மேற்கொண்டு வருகிறார்கள். வாகனத்திலேயே உணவுப் பொருள்களை எடுத்துப்போய் ஆங்காங்கே உணவு தயாரித்து சாப்பிட்டு, வாகனத்திலேயே தங்கி, தொடர்ந்து தோழர்கள் உற்சாகமாக பணியாற்றி வருகிறார்கள். கழகப் பொருளாளர் இரத்தின சாமி, இந்த இயக்கத்துக்கு தலைமை யேற்று திட்டமிட்டு வழி நடத்தி வருகிறார். சந்திக்கும் மக்களிடம் ரூ.10 மட்டுமே நன்கொடையாக வாங்கும் இந்தத் திட்டத்தில் பொது மக்கள் ஆர்வத்துடன் நன்கொடை வழங்குவதோடு கழக வெளியீடுகளையும் வாங்கி வருகிறார்கள்.

வெற்றி நடைபோடும் மக்க சந்திப்பு திட்டம் பற்றிய செய்தி தொகுப்பு:




**மே 22, 2014 :** திராவிடர் விடுதலைக் கழகத்தின் மக்கள் சந்திப்பு இயக்கத்தை, கரூரில் 22.5.2014 காலை 11 மணிக்கு மூத்த பெரியார் தொண்டர் பரமத்தி சண்முகம், வழக்குரைஞர் குடியரசு ஆகியோர் தொடங்கி வைத்தனர். பரமத்தி சண்முகம் பேசும் போது, இது போன்ற இயக்கங்கள் தான் மக்களுக்கும் நமக்குமான இடைவெளியைக் குறைக்கும் என்று வாழ்த்திப் பாராட்டினார். இந்நிகழ்வில் திராவிடர் விடுதலைக் கழகப் பொருளாளர் இரத்தினசாமி, செயலவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி, கரூர் மாவட்டத் தலைவர் பாபு (எ)முகம்மது அலி, துணைத் தலைவர் சத்தியசீலன் மற்றும் மோகன் தாஸ், அறிவியல் மன்ற அமைப்பாளர் ஈரோடு சிவக்குமார், செல்வராஜ், சத்தியராஜ், விஜய் ரத்தினம், முத்து, சசிக்குமார், வெங்கட், வல்லரசு ஆகியோர் உள்பட ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டனர். முதல் நாள் மக்கள் சந்திப்பு மதியம் 1 மணி முதல் மாலை 8 மணி வரை நடந்தது. பொதுமக்களுக்கு நமது இயக்கத்தின் கொள்கைகளையும், மக்கள் சந்திப்பு இயக்கத்தை முன்னெடுத்துள்ளதன் நோக்கங் களையும் விளக்கி, தோழர்கள் துண்டறிக்கைகளை வழங்கினர். இயக்க புத்தகங்களும் விற்பனை செய்யப் பட்டன. கரூர் மாவட்டத் தலைவர் தோழர் பாபு வீட்டில் இரவு தோழர்கள் தங்க வைக்கப்பட்டனர்.

**மே 23, 2014 :** காலை 11 மணிக்கு தளிவாசல், சேர்வகாரன்பட்டி, பாலவிடுதி, தரகம்பட்டி ஆகிய

(2 ஆம் பக்கம்)

## வினாக்கள்... விடைகள்...!

✦ பொற் கோயிலுக்குள் இராணுவம் நுழைந்து 700 பேர் வரைக் கொன்றுக் குவித்த 30 ஆம் நினைவு நாளன்று பொற்கோயிலில் இரு சீக்கிய பிரிவினர், வாள், ஈட்டியுடன் மோதிக் கொண்டனர். **– செய்தி**

இப்படித்தான் அன்றைக்கு இராணுவம் நுழைந்த போதும் நடந்தது என்பதை செயல்முறையாக நிகழ்த்திக் காட்டியிருக்கிறார்கள் போல!

✦ கங்கை நதியை தூய்மைப்படுத்தும் திட்டம்; 4 அமைச்சர்களிடம் மோடி ஒப்படைத்தார். **– செய்தி**

முதலில் 'பாவம்' செய்த பக்தர்கள் 'பாவத்தை' கங்கையில் தொலைப்பதற்கு தடை போடுங்க! அதுவரை கங்கை "பாவங்களின்" நதியாகத்தான் இருக்கும்; தூய்மையாகாது.

✦ போரில் காணாமல் போனவர்கள் குறித்து விசாரணை நடத்த ராஜபக்சே நியமித்துள்ள விசாரணைக் குழுவிடம், 18,590 புகார் மனுக்கள் வந்துள்ளன. **– செய்தி**

அப்புறம், இந்த மனுக்களும் காணாமல் போகும்; அதைக் கண்டுபிடிக்க ராஜபக்சே மற்றொரு குழு போடுவார். இந்திய வெளியுறவுத் துறை அதையும் வரவேற்று அறிக்கை விடும். அட, போங்கப்பா!

✦ "கற்பழிப்பு" குற்றவாளிகளை கடவுளால் மட்டுமே தடுக்க முடியும். ஆட்சியாளர்களை குறை சொல்லக் கூடாது.
**– ம.பி. உள்துறை அமைச்சர் பாபுலால் கவுர்**

அப்ப, கடவுள் ஏன் தடுக்க மாட்டேங்குறாரு? இதைக் கேட்டா, அதுக்கு கடவுளால் மட்டுமே பதில் சொல்ல முடியும்னு பேசுவீங்க... விளங்கி டுவீங்க...

✦ திருப்பதியில் தரிசனத்துக்கு வந்த முதல்வர் சந்திரபாபு நாயுடு கியூவில் நின்ற பக்தர்களிடம் குறைகளைக் கேட்டார். **– செய்தி**

அதுவும் சரிதான்! முதல்வரிடம் குறைகளைக் கொட்டினால் ஏதாவது தீர்வு கிடைக்க வாய்ப்பு உண்டு. ஏழுமலையானுக்கு அருகிலேயே அரசுக்கு மனு போடுவதற்கு ஒரு புகார்ப் பெட்டியை நிரந்தரமாக வச்சிடுங்க!

✦ என் காலிலோ, தலைவர்களின் காலிலோ விழும் பழக்கத்தை – நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைவிட வேண்டும். **– பிரதமர் மோடி**

இந்து மதத்துக்கு மட்டுமே சொந்தமான அடிமைப் பண்பாட்டுக்கு எதிராக குரல் கொடுத்த மோடியைப் பாராட்ட வேண்டும். தமிழகத் தலைவர்களே, உங்கள் காதுகளில் கேட்கிறதா?

✦ காங்கிரசில் 'கோஷ்டி'களே இல்லை. ஞானதே சிகன் திட்டவட்டம். **– 'தமிழ் இந்து' செய்தி**

உண்மைதான்! கோஷ்டிகள் தான் காங்கிரசாக இருக்குது!

✦ ராஜீவ் காந்தி கொலை வழக்கை விசாரித்த 'தடா' நீதிமன்ற நீதிபதி மற்றும் ஊழியர்களுக்கு கடந்த 15 ஆண்டுகளாக பாதுகாப்பு அலவன்ஸ் என்ற பெயரில் வழங்கப்பட்டு வந்த 30 சதவீத கூடுதல் ஊதியத்தை தமிழக அரசு நிறுத்தியுள்ளது. **– செய்தி**

இது நியாயமில்லைங்க. 26 பேருக்கு தூக்கு வழங்கிய நீதிபதிக்கு குறைந்தது 26 ஆண்டு களுக்காவது இந்த கூடுதல் ஊதியத்தை நீடிக்க வேண்டாமா?

✦ அமைச்சர்கள் சுஷ்மா சுவராஜ், உமாபாரதி, நாடாளுமன்ற உறுப்பினராக சமஸ்கிருதத்தில் உறுதி ஏற்றனர். **– செய்தி**

அதோட நிறுத்துங்க. கோப்புகளிலும் சமஸ்கிருதத்தில் குறிப்பு எழுதி, கோப்புகளை கோயிலுக்கு அனுப்பி வச்சுடாதீங்க.

✦ சத்தியமூர்த்தி பவனில் காமராசருக்கு சிலை; எதிர்காலத்தில் தோல்வியிலிருந்து காப்பாற்ற ஜோதிடர் தந்த ஆலோசனையை ஞானதேசிகன் ஏற்றார். **– 'தினமலர்' செய்தி**

இப்ப, காமராசர் சிலையை வைப்பீங்க... சட்டசபை தேர்தலுக்குப் பிறகு தோல்விக்குக் காரணம் காம ராசர் சிலையை வச்சதுதான்னு ஒரு கோஷ்டி கிளம் பும்; காமராசர் பாவம்; அவரை விட்டுடுங்கய்யா...

✦ சேவல் சண்டை – தமிழர் பண்பாட்டு விளை யாட்டு; நீதிமன்றத் தடைக்கு தமிழ் அமைப்புகள் கண்டனம். **– செய்தி**

ஜாதியோ, வாய்க்கால் வரப்பு தகராறோ இல்லாத பறவைகளை சண்டை போட வைச்சு சாகடிப்பது தான் தமிழர் பண்பாடுன்னு சொல்ல வர்ரீங்களா?

**தலையங்கம்**

## பெரியார் இயக்கங்களின் கூட்டுச் செயல்பாட்டை வரவேற்கிறோம்!

மறைந்த பெரியார் சாக்ரடீஸ் படத்திறப்பு நினைவேந்தல் நிகழ்வு பெரியார் திடல் நடிகவேள் எம்.ஆர். ராதா மன்றத்தில் நடந்தபோது (30.5.2014) கவிஞர் அறிவுமதி, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களிடம் ஒரு கோரிக்கையை வைத்துள்ளார். பெரியார் கொள்கைகளுக்கு நெருக்கடி உருவாகியுள்ள அரசியல் சூழலில், பெரியார் இயக்கங்கள், தங்களுக்குள் இணைந்து செயல்படவேண்டும் என்றும், அதற்கான முன்முயற்சியை திராவிடர் கழகத் தலைவரே எடுக்க வேண்டும் என்பதே கவிஞர் அறிவுமதியின் கோரிக்கை. தொடர்ந்து பேசிய நடிகர் சத்தியராஜ் அவர்களும் இதே கோரிக்கையை வலியுறுத்தியுள்ளார். இது குறித்து திராவிடர் கழகத் தலைவர் தமது உரையில் பேசியதை ‘விடுதலை’ நாளேடு கீழ்க்கண்டவாறு பதிவு செய்திருக்கிறது.

“இங்கே கவிஞர் அறிவுமதி அவர்களும் நமது இனமுரசு சத்யராஜ் அவர்களும் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அது பற்றி நான் கருத்து சொல்லவில்லை என்றால், என்ன நாம் எடுத்து வைத்த கோரிக்கைக்கு ஆசிரியர் (கி.வீரமணி) பதில் சொல்லாமல் போய்விட்டாரே என்று கருதிட இடம் கொடுக்கக் கூடாதல்லவா?

பெரியார் திடல் என்பது எந்த ஒரு தனிப்பட்டவருக்கும் சொந்தமானதல்ல. என்றைக்கும் திறந்தே இருக்கிறது. யாரும் வரலாம். நான் அடிக்கடி சொல்வதுண்டு, அதையே திரும்பவும் சொல்கிறேன். நம்மை எது இணைக்கிறதோ அதனை விரிவு செய்வோம்; எது நம்மைப் பிரிக்கிறதோ அதனை அலட்சியப்படுத்துவோம் என்று குறிப்பிட்ட திராவிடர் கழகத் தலைவர் அவர்கள், சாக்ரட்டீசின் நினைவைப் போற்றும் வகையில் ஆக்கப்பூர்வமாக சிலவற்றைச் செய்ய வேண்டும் என்று நினைக்கிறேன் என்றார்” என்று ‘விடுதலை’ பதிவு செய்துள்ளது.

ஆனால், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி ஆற்றிய உரையின் ஒலி வடிவம், பெரியார் வலை தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளது. அதில் பெரியார் இயக்கங்கள் 10, 12 என்ற அளவில் உள்ள நிலையில், பொது கொள்கை என்று வரும்போது கூட்டு அமைப்பாக செயல்பட முன் வரவேண்டும் என்ற கருத்தை “இரு கை நீட்டி வரவேற்க திராவிடர் கழகம் தயாராக இருக்கிறது” என்று பேசியுள்ளார். ஆனால், இந்த முக்கிய பகுதியை ஏனோ ‘விடுதலை’ அச்சேற்றவில்லை. கவிஞர் அறிவுமதி எழுப்பிய கோரிக்கைக் குறித்து அவர்களே மேடையில் வெளியிட்ட கருத்தைக்கூட முழுமையாக வெளியிட தயங்குகிறார்கள்.

‘திராவிடர் விடுதலைக் கழக’த்தைப் பொறுத்தவரை பெரியார் இயக்கங் களுக்குள் பகைமை பாராட்டும் அணுகுமுறையை தவிர்த்தே வந்திருக்கிறது. ‘குடிஅரசு’ தொகுப்பை வெளியிட நாம் திட்டமிட்டபோது திராவிடர் கழக தலைமை அதை எதிர்த்து நீதிமன்றம் போய் தடைப்படுத்த முயன்றபோது தான் அவர்களைக் கடுமையாக விமர்சிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம். தீர்ப்பு கிடைத்த பிறகு, திராவிடர் கழக அணுகுமுறையில் நமக்கு கொள்கை ரீதியான மாறுபாடுகள் இருந்தாலும் விமர்சனங்களைத் தவிர்த்தே வந்துள்ளோம்; அதுபோது ஜாதி மறுப்புத் திருமணங்களுக்காக திராவிடர் கழகம் மேற்கொண்ட “மன்றல்” திட்டத்தை நாம் பாராட்டி வரவேற்று எழுதியுள்ளோம். திருவரங்கத்தில் திராவிடர் கழகம் நிறுவிய பெரியார் சிலை மதவெறி சக்திகளால் சேதப்படுத்தப் பட்டபோது பெரியார் திராவிடர் கழகம்தான் அதற்கு எதிர் வினையாற்றியது. கழகத் தோழர்கள் தேசிய பாதுகாப்புச் சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட் டார்கள். அதற்கான கண்டனத்தைக்கூட திராவிடர் கழகம் பதிவு செய்யவில்லை.

திண்டுக்கல்லில் திராவிடர் கழகத் தோழர் இராசேந்திரன், மதவெறி சக்திகளால் தாக்கப்பட்டபோது, பெரியார் திராவிடர் கழகம்தான், தாக்கப்பட்டவர் திராவிடர் கழகத்தைச் சார்ந்தவர் என்று பார்க்காமல் அனைத்து அமைப்புகளையும் திரட்டி இயக்கம் நடத்தியது. (அதில்கூட திராவிடர் கழகமே பங்கேற்காமல் தவிர்த்துக் கொண்டது) திராவிடர் கழகத் தலைவரை மதவெறி சக்திகள் தாக்க முயன்றபோது நாம் உடனே கண்டனம் தெரிவித்தோம். தலைவர்களின் கண்டன அறிக்கைகளை எல்லாம் வெளியிட்ட ‘விடுதலை’, கழகம் வெளியிட்ட கண்டனத்தை மட்டும் ஏற்கவே மறுத்தது. பெரியார் சாக்ரடீசு உடலுக்கு இறுதி மரியாதை செலுத்திய அனைத்து அமைப்புகள், பிரமுகர்கள் பெயர்களை பட்டியலிட்ட ‘விடுதலை’, திராவிடர் விடுதலைக் கழக சார்பில் பொதுச் செய லாளர் விடுதலை இராசேந்திரனும், தோழர்களும் இறுதி மரியாதை செய்ததை மட்டும் நீக்கிவிட்டுத்தான் வெளியிட்டது. இப்படி ஏராளம் பட்டியலிட முடியும். என்றாலும்கூட, இப்போதும் நமது நிலை பெரியார் இயக்கங்கள் தங்களுக்கான தனித்தனி செயல் திட்டங்களை முன்னிறுத்தினாலும் அவசியம் தேவை கருதி பொதுவான திட்டங்களில் கரம் கோர்த்து நிற்க வேண்டும் என்பதுதான்.

பெரியார் திராவிடர் கழகத்தில் செயல் திட்டங்களை முன்னெடுப்பதில் எழுந்த கருத்து மாறுபாடுதான், திராவிடர் விடுதலைக் கழகம் உருவாகக் காரணமாயிற்று. அப்போதும்கூட ‘பெரியார் திராவிடர் கழகம்’ என்ற பெயருக்கு பெரியார் அமைப்புகள் வெளிப்படையாக மோதிக் கொள்ளக் கூடாது என்றே நாம் கருதினோம். அதன் காரணமாக அந்த அமைப்பின் தலைவர் மற்றும் பொதுச் செயலாளராக இருந்த நாம் இயக்கத்தின் பெயருக்கு உரிமை கோர வேண்டாம் என்று முடிவெடுத்து, திராவிடர் விடுதலைக் கழகம் என்ற தனி பெயர் சூட்டிக் கொண்டு செயல்பட முன் வந்தோம். அதற்குப் பிறகும்கூட தந்தை பெரியார் திராவிடர் கழகத்தோடு கூட்டமைப்புகளில் நாம் எந்த மனத் தடையுமின்றி இணைந்தே நிற்கிறோம்.

திருவரங்கத்தில் தந்தை பெரியார் திராவிடர் கழகம் நடத்திய போராட்டத்தில் தோழர்கள் கைது செய்யப்பட்டு அடக்குமுறைக்கு உள்ளாகியபோது அதைக் கண்டித்து திராவிடர் விடுதலைக் கழகம் கண்டன சுவரொட்டிகளை ஒட்டியதோடு கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி பொதுக் கூட்டங்களில் கண்டனம் தெரிவித்துப் பேசினார்.

பெரியார் இயக்கங்களின் தோழர்கள், அரசியல் கட்சிகளைப்போல் அல்லாமல், கொள்கைக்காக வாழக்கூடியவர்கள்; பெரியாரியலை வாழ்வியலாக ஏற்றவர்கள்; அதற்காக விலை கொடுத்து வருவோர். இந்தப் பார்வையோடுதான் பெரியார் இயக்கங்களிடையே தோழமையும் கூட்டுச் செயல்பாடுகளும் தேவை என்ற அணுகுமுறையை திராவிடர் விடுதலைக் கழகம் வற்புறுத்தி வருவதோடு, செயலளவிலும் அதை நடைமுறைப்படுத்தி வருகிறது. இந்த ஆரோக்கியமான பார்வை வளர்த்தெடுக்கப்படவேண்டும் என்பதே நமது உறுதியான நிலைப்பாடு.

## 9 நாள்கள் தொடர்ச்சியான பயணம்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

கிராமங்களில் மக்கள் சந்திப்பு நடந்தது. தோழர்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று மக்களைச் சந்தித்து பேசினர். இந்தப் பகுதிகளில் இருந்துதான், கழகத்தின் சார்பில் நடந்த ஈரோடு மாநாட்டிற்கு 25 க்கும் மேற்பட்ட புதிய தோழர்கள் வந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. தளிவாசல் கிராமத்திலுள்ள இளைஞர்களையும் தோழர்களையும் ஊர் சாவடிக்கு வரவழைத்து, நமது இயக்கம் பற்றியும், சாதி ஒழிப்புக்கு நாம் முன்னெடுத்துள்ள பணிகள் பற்றியும், கடவுள், மூட நம்பிக்கைகள் பற்றியும், ஜாதி மறுப்பு இணையருக்கு ஏற்படும் இன்னல்களையும், அதற்கென “ஜாதி மறுப்பு இணையர் பாதுகாப்பு இயக்கம்” என்ற துணை அமைப்பு தொடங்கப்பட் டுள்ளதையும் விளக்கி தோழர்கள் கலந்துரையாடினர். இதில் கழகப் பொருளாளர் இரத்தினசாமி, அறிவியல் மன்ற அமைப்பாளர் சிவக்குமார், சசிக்குமார், வெங்கட், செல்வராஜ், சத்தியராஜ், விஜி, சத்தியசீலன், பாபு, தோழர் மோகன் தாஸின் மகள் 4 ஆம் வகுப்பு படிக்கும் பவதாரிணி ஆகியோர் கலந்து கொண்டனர். பவதாரிணி பெண்கள் மற்றும் தன் வயதையொத்த சிறுவர் சிறுமிகளிடம் சென்று தந்தை பெரியாரின் கொள்கைகளை விளக்கியது அனைவரையும் கவர்ந்தது. அந்தப் பகுதியில் உள்ள மோகன்தாஸ் உள்ளிட்ட நமது தோழர்களின் செயல்பாடுகள் மேல், அப்பகுதி மக்கள் பெருமதிப்பு வைத்திருப்பதை நம்மால் உணர முடிந்தது.

தரகம்பட்டி பகுதிகளில் உள்ள 4 சத்துணவு அமைப்பாளர் பணியிடங்களை யும், அப்பகுதி ஆதிக்க சமுதாயத்திலுள்ள ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்களே வைத்திருப்பதையும், தங்களுக்கும் சத்துணவு அமைப்பாளர் வாய்ப்பு வேண்டும் என்று கேட்டால், “பறைச்சிகள் சமையல் செய்தால் தங்கள் குழந்தைகள் சாப்பிட மாட்டார்கள்” என்று ஆதிக்கவாதிகள் ஆணவத்துடன் கூறுவதையும் அப்பகுதி தாழ்த்தப்பட்ட மக்கள் வேதனையுடன் தெரிவித்தனர். மக்கள் சந்திப்பில் அப்பகுதி தோழர்கள் டேவிட், அன்பு, வினோத் ஆகியோர் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.

### 22.5.14 முதல் 30.5.14 முடிய, 9 நாட்களும் மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட தோழர்கள் :

ப. இரத்தினசாமி, கழகப் பொருளாளர்; ப. சிவக்குமார், அறிவியல் மன்ற அமைப்பாளர்; செல்வராசு, சென்னிமலை ஒன்றியத்தலைவர்; சத்தியராசு, கொங்கம்பாளையம் கிளைத் தலைவர்; விஜய் ரத்தினம், ரங்கம்பாளையம் பகுதி.

இடையிடையே கலந்து கொண்ட தோழர்கள் – ஈஸ்வரன், கொளத்தூர் ஒன்றியச் செயலாளர்; சித்துசாமி, காவலாண்டியூர்; பழனிச்சாமி, காவலாண்டியூர்; சித்தன், காவலாண்டியூர்; ராஜேந்திரன், காவலாண்டியூர் கிளைத் தலைவர்; மாரியப்பன், காவலாண்டியூர் கிளைச் செயலாளர்; பாண்டியன், கொடுமுடி வெங்கட்; தமிழ்நாடு மாணவர் கழக ஈரோடு மண்டலச் செயலாளர்; சசிக்குமார், சென்னிமலை; வல்லரசு, உப்பிலிபாளையம்; காமராஜ், கரூர் மாவட்டச்செயலாளர்; பாபு (எ) முகம்மது அலி, கரூர் மாவட்டத் தலைவர்; சத்தியசீலன், கரூர் மாவட்டதுணைத் தலைவர்; மோகன் தாஸ், கரூர் மாவட்ட துணைச் செயலாளர்; பவதாரிணி, நான்காம் வகுப்பு; முத்து, கோவக்குளம்; தமிழ்முத்து, திருச்சி; கணேசமூர்த்தி, விருதுநகர்; அவிநாசி, காவலாண்டியூர்; வடிவேல் (நடத்துனர்) பரமத்தி; வாகன ஓட்டுநர்கள் – வல்லரசு, சிவக்குமார், அவிநாசி.

**மே 24, 2014 :** காலை 11 மணி முதல் கரூரில் உள்ள பாரதியார் தெரு, வெங்கமேடு ஆகிய பகுதிகளில் மக்கள் சந்திப்பு நடந்தது. பாரதியார் தெருவிலுள்ள தமிழ் உணர்வாளர் சாமியப்பன் நமது பணிகளைப் பாராட்டி நன்கொடை வழங்கினார். மாலையில் வெங்கமேடு பகுதியில் உள்ள ஒரு குடிசைப்பகுதிக்கு நமது தோழர்கள் சென்றபோது அங்கிருந்த பெரும்பாலான இளைஞர்கள் மது அருந்திவிட்டு (அன்று சனிக்கிழமை) நிலைதடுமாறி நடந்து கொண்டிருந்ததைக் கண்டு, வேதனையுடன் குடிபோதைக்கு எதிரான பிரச்சாரத்தை நமது தோழர்கள் செய்தனர். அங்கிருந்த பெண்கள் குடிபழக்கத்தால் நிலவும் அவலங்களை வேதனையுடன் தெரிவித்தனர்.

**மே 25, 2014 :** காலை 11 மணி முதல் கோவக்குளம், ஜெயங்கொண்ட சோழபுரம் ஆகிய பகுதிகளில் மக்கள் சந்திப்பு கரூர் மாவட்டச் செயலாளர் காமராஜ், மற்றும் முத்து ஆகியோர் முன்னிலையில் நடந்தது.நமது தோழர்களை அப்பகுதி CPM பொறுப்பாளர் நாகராஜ் வரவேற்று தேநீர் வழங்கி உபசரித்தார். ஜெயங்கொண்ட சோழபுரம் பேரூராட்சி துணைத் தலைவர் வேலு, மக்கள் சந்திப்பில் உற்சாகத்துடன் நம்முடன் களமிறங்கி மக்கள் சந்திப்பில் ஈடுபட்டார். மதிய உணவுக்குப் பின் லாலாபேட்டை பகுதியில் மக்கள் சந்திப்பு நடந்தது. அப்பகுதி ம.தி.மு.க நகரச் செயலாளர் சோமு இரவு வரை நம்முடன் கலந்து கொண்டார். லாலாப்பேட்டை பகுதிவாழ் தமிழறிஞர் “பூந்தமிழ் புகழேந்தி” நமது பணியைப் பாராட்டி “அருந்தமிழ் அருளாளர்” என்ற புத்தகத்தைப் பரிசாக வழங்கினார்.

மாலை 5 மணிக்கு கொம்பாடிப்பட்டி கிராமத்தில் மக்கள் சந்திப்பு நடந்தது. அப்பகுதி தேநீர்க் கடைகளில் இருந்த இரட்டைக் குவளை முறை நமது தோழர்களின் கடுமையான எதிர்ப்பால் ஒழிக்கப்பட்டது என்பதும், அதை யொட்டி, கழகத் தலைவர் கொளத்தூர் மணி முன்னிலையில் அப்பகுதியில் இயக்கக் கிளை தொடங்கப்பட்டு, கொடியேற்றப்பட்டு, ரஞ்சித் உள்ளிட்ட தோழர்கள் நமது இயக்கத்தில் செயலாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

**மே 26, 2014 :** இயக்க ஆதரவாளர் குளித்தலை முருகேசனுக்குச் சொந்தமான கட்டிடத்தில் தங்கி இருந்த தோழர்களுக்கு, நமது இயக்க ஆதரவாளர் பெட்டவாய்த்தலை இராமசாமி- லட்சுமி ஆகியோர் காலை உணவு வழங்கினர். பெட்டவாய்த்தலை மருதூர் கிராமத்தில் மக்கள் சந்திப்பு நடந்தது. அடுத்து ராஜேந்திரம் என்ற கிராமத்தில் நடந்த சந்திப்பின் போது, அப்பகுதியில் உள்ள 80 வயதான விசாலாட்சி என்ற மூதாட்டி, தான் பெரியாருடன் பிள்ளையார் சிலை உடைப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டதை நினைவு கூர்ந்தார். குளித்தலை பகுதியில் நடந்த சந்திப்பின் போது, ம.தி.மு கவைச் சார்ந்த குளித்தலை

(3 ஆம் பக்கம்)

# முதுபெரும் பெரியார் தொண்டர்களுடன் நெகிழ்ச்சியான சந்திப்பு

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

நகராட்சி துணைத்தலைவர் பல்லவி ராஜா வரவேற்று தேநீர் வழங்கி உபசரித்தார். தி.மு.க.வைச் சார்ந்த மருதூர் பேரூராட்சித் தலைவர் சம்பத் மதிய உணவு வழங்கினார். உணவுக்குபின் குளித்தலை ஆற்றங்கரை யோரம் தோழர்கள் ஓய்வு எடுத்தனர்.

மாலை நடந்த சந்திப்பின் போது, நம்மைத் தேடி வந்த மரகதம் என்ற பெண்மணி, தான் ஒரு ஆயுர்வேத மருத்துவர் என்றும், அப்பகுதியில் இருந்த இராமநாதன் என்ற பெரியார் தொண்டரின் மகள் என்றும், "எனது தந்தை போன்றவர்கள் விட்டுச் சென்ற பெரியாரின் பணிகளை இளைஞர்களாகிய நீங்கள் முன்னெடுத்து செல்வது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. உங்களது பணி தொடர வேண்டும் " என்று பெருமிதம் பொங்கக் கூறி, நன்கொடை வழங்கி, இது போன்றதொரு மக்கள் சந்திப்பை நீங்கள் மீண்டும் குளித்தலையில் நடத்தினால் நீங்கள் கட்டாயம் எங்கள் வீட்டில் இருந்துதான் அந்தச் சந்திப்பை ஆரம்பிக்க வேண்டும் என்று உரிமையுடன் கூறி, தனது முகவரியைத் தோழர் களிடம் அளித்தார். நம்மை சந்தித்த அப்பகுதி ஆசிரியர் மணிகண்டன் தான் இயக்கத்தில் இணைந்து செயல்பட விரும்புவதாகக் கூறினார். குளித்தலையில் ஆடிட்டராகப் பணிபுரியும் பகுத்தறிவுவாதியான அறிவுக்கண்ணன் என்ற தோழர், தன்னுடைய வீட்டு நிகழ்வுகளை எவ்வித சடங்குகளும் இல்லாமல், செய்வதைக் கூறி, நமது மக்கள் சந்திப்பு பணிகளைப் பாராட்டி நன்கொடை வழங்கினார். கரூர் மாவட்டத்தலைவர் பாபு, மற்றும் துணைத் தலைவர் சத்தியசீலன் ஆகியோர் 4 நாட்களும் நம்முடனிருந்து பணிகள் சிறப்புற உறுதுணையாக இருந்தனர்.

**மே 27, 2014:** காலை 10 மணிக்கு முக்கொம்பு, ஜீயர்புரம் போன்ற பகுதி களில் மக்கள் சந்திப்பு நடந்தது. ஜீயர்புரம் வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்குச் சென்ற நமது தோழர்கள் அங்கிருந்தவர் களிடம் துண்டறிக்கைகளை வழங்கினர். சட்டப்படி இது தவறு என்று மிதப்புடன் கூறிய வருவாய் ஆய்வாளரிடம், "அரசு அலுவலகங்களில் கடவுள் மதம் சம்பந்த மான படங்களோ, குறியீடுகளோ இருக்கக் கூடாது என்று கூடத் தான் சட்டம் சொல் கிறது, அரசாணைகளும் உள்ளன, எங்களது இந்தச் சந்திப்பை சட்டப்படி தவறு என்று கூறும் நீங்கள், கடவுள் படம் தொடர்பான அரசாணையை ஏன் கடைப்பிடிக்கவில்லை? சட்டத்தை ஏன் மீறு கிறீர்கள்? ஏன் இவ்வளவு பெரிய கடவுளர் படங் களை வைத்துள்ளீர்கள்? இது போன்ற படங்களை வைத்தால், அரசு அலுவலகங்கள் அனைவருக்கும் பொது வானது என்ற எண்ணத் தில் இங்கு வரும் மாற்று மதத்தினரையும், எங்களைப் போன்ற கடவுள் நம்பிக்கையற்ற நாத்திகர்களையும் அது புண்படுத்து வதாகாதா? என்று சராமரி கேள்வி களை நமது தோழர் செல்வராஜ் எழுப்பவும், வருவாய் ஆய்வாளர் வாயடைத்து நின்றார். மதியம் தோழர்கள் திருச்சி மனோகரன் மேலாளராகப் பணி புரியும் ஷகீலா தங்கும் விடுதியில் தங்க வைக்கப்பட்டனர். மாலை திருச்சி நகரில் மக்கள் சந்திப்பு நடந்தது. சமயபுரம் கோவிலில் யானைகளை வைத்துள்ள நமது ஆதர வாளர் சுகுமார், நமது மக்கள் சந்திப்பு முயற்சியை வாழ்த்தி, ரூ 2,000/- மதிப்பிலான அரிசி மற்றும் மளிகைப் பொருட்களை வழங்கி உற்சாகப்படுத் தினார். தோழர்கள் இரவு இருங்களூர் காந்தி நகரில் உள்ள "ஆதிவாசிக் கூட்டமைப்பு கட்டிடத்தில்" கரூர் தோழர் மோகன் தாஸ் அவர்களின் உதவியால் தங்க வைக்கப்பட் டனர்.



**பெருவளப்பூரில் பெரியார் தொண்டர் சாமிநாதனுடன் தோழர்கள்**

**மே 28, 2014:** காலை உணவைத் தயாரித்து, மதியத்திற்குத் தேவையான உணவை எடுத்துக் கொண்ட தோழர்கள் மக்கள் சந்திப்பு பயணத்தை மீண்டும் தொடர்ந்தனர். மகிழம்பாடி அருகிலுள்ள புறத்தாக்குடி கிராமத்தில் நடந்த மக்கள் சந்திப்பின் போது, நம்மைச் சந்தித்த சவரி ஆனந்தன் என்ற 75 வயது பெரியார் தொண்டர், கிறிஸ்தவ மதத்தைப் பெரும்பாலும் தழுவிய இந்த ஊரில், தான் மட்டும் கருப்பு சட்டை அணிந்து, பெரியார் தொண்டனாக இருப்பதைக் கூறி, தனது மகன் டாக்டர். வீரமணி திருச்சி ஜோசப் கல்லூரியில் விரிவுரையாளராக இருப்பதைக் கூறி பெருமைப்பட்டார். புறத்தாக்குடி கிராமத்தில் நமது பிரச் சாரத்திற்கு பெரும் ஆதரவு இருந்தது. நமது பணியைப் பாராட்டிய அன்னை அக்ரோ நிறுவனம் உரிமையாளர் நன்கொடை வழங் கினார். சைக்கிள் கடை வைத்திருக்கும் தனி சிலாஸ் என்ற கிறிஸ்தவர், பெரியார் கொள்கைகள் என்றென் றும் மக்களுக்குத் தேவை என்று கூறி, நன்கொடை வழங்கி நம்மை உற்சாகப் படுத்தினார். பிறகு நெற் குப்பை என்ற கிராமத்தில் பிரச்சாரம் நடந்தது. லால்குடிக்குச் செல்லும் வழியில் மரத்தடி நிழலில் மதிய உணவு அருந்திய தோழர்கள் சற்று நேரம் ஓய்வு எடுத்தனர்.

லால்குடி நகரத்தில் நடந்த பிரச்சாரத்தின் போது, அப்துல்லா என்ற முஸ்லிம் பெரியவர், தான் பெரியாரையும் மணி யம்மையாரையும் சந்தித் துள்ளதைக் கூறி, பெரி யாரும் பெரியார் இயக்கங் களும் இல்லையேல், தாழ்த்தப்பட்ட மற்றும் சிறுபான்மையின மக்கள் பெரிதும் ஒடுக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டிருப்பார்கள் என்று கூறினார்.

அடுத்து பூவாளூர் கிராமத்தில் நடந்த பிரச் சாரத்தின் போது, த.பெ.தி.க.வைச் சார்ந்த ஜெகந்நாதன் என்ற பெரியார் தொண்டர் நம்மை உற்சாகப்படுத்தி ரூ.500/- நன்கொடை வழங்கினார். அவ்வூரில் உள்ள ஓய்வு பெற்ற ஆசிரியரும், வழக் கறிஞர் அமிர்தநேசன் என்பவரது தந்தையுமாகிய மூத்த பெரியார் தொண்டர், பெரியார் கொள்கைகளை எங்களுக்குப் பின், இளைய தலைமுறை இளைஞர் களாகிய நீங்கள் இவ்வாறு ஊர்தோறும் பிரச்சாரம் செய்வது, எங்களைப் போன்றவர்களுக்கு மகிழ்ச்சி தருகிறது என்று நம்மைப் பாராட்டி, ரூ.1000/- நன்கொடை அளித்து உற்சாகப்படுத்தினார். இந்தப் பிரச்சாரத்தில் திருச்சி இரயில்வே துறையில் பணி புரியும், விருதுநகரைச் சார்ந்த கணேசமூர்த்தி நம் முடன் மக்கள் சந்திப்பில் உற்சாகமுடன் ஈடுபட்டார்.

**மே 29, 2014 :** காலை 11 மணிக்கு பாடாலூரில் மக்கள் சந்திப்பு நடந்தது. பிறகு பெருவளப்பூர் என்ற கிராமத்தில் மக்கள் சந்திப்பு நடந்தது. அங்கு சிதம்பரம் என்ற மூத்த பெரியார் தொண்டர், 1957 ல் 4000 பேர் கைதான சட்ட எரிப்புப் போரில் தானும் கலந்து கொண்டு 1½ ஆண்டுகள் சிறைதண்டனை பெற்றதையும், தங்கள் ஊரில் 5 பேர் சிறை தண்டனை பெற்றதையும் கூறி, தான் அக்காலத்திலேயே சாதி

(4 ஆம் பக்கம்)

## 89 வயது பெரியார் தொண்டரின் நெகிழ்வலைகள்

மே 29 ஆம் தேதி பெருவளப்பூரில் நாம் சந்தித்த 89 வயது சாமிநாதன் என்ற மூத்த பெரியார் தொண்டர் சற்றும் உற்சாகம் குறையாமல் ஒரு இளைஞன் போல் நம்முடன் உரையாடினார். 1948 ல் ஈரோட்டில் நடந்த மாநாட்டில், அண்ணாவை வாகனத்தில் அமர்த்தி, பெரியார் நடந்து வந்ததையும், தானும் அந்த மாநாட்டில் கலந்து கொண்டதையும் நினைவு கூர்ந்தார். 1944 ல் சேலத்தில் நடந்த மாநாட்டிற்கு தான் செல்லும் போது, சாமிக்கென தன் தாயார் சேர்த்து வைத்திருந்த 19 ரூபாய் பணத்தை எடுத்துக் கொண்டு 18 மைல் நடந்து மெயின் ரோட்டுக்கு வந்ததையும், ஒரு குச்சியில் கருப்புக் கொடியைக் கட்டி, சாலையில் போகும் வாகனங்களை நிறுத்தி, அதில் ஏறி சேலம் செல்ல முயற்சித்த போது, எதிர்பாராத விதமாக பெரியார் வந்த வண்டியையே வழிமறித்ததையும், தான் 18 மைல் நடந்தே வந்ததைக் கேட்ட பெரியார் தன் வாகனத்திலேயே ஏற்றி, மாநாட்டிற்கு கூட்டிச் சென்றதையும், 2 நாள் மாநாடு முடிந்து, பெரியார் கிளம்பும் போது தான் மீண்டும் பெரியாரிடம் வந்து நின்றதையும், பெரியார் தன்னை மீண்டும் வண்டியில் ஏற்றி, சொந்த ஊருக்குச் செல்ல உதவியதையும் நினைவு கூர்ந்தார்.

வாகனத்தில் வரும் போது, தான் கொண்டு வந்த பெரிய மூட்டையைப் பார்த்த பெரியார், அது என்ன என்று விசாரித்ததையும், மாநாட்டிற்கு கொண்டு சென்ற 19 ரூபாய்க்கும் (அக்காலத்தில் அது பெரிய தொகை) புத்தகங்கள் வாங்கி, வீட்டிற்கு கொண்டு செல்வதைக் கேட்ட பெரியார், தன்னைப் பெரிதும் பாராட்டினார் என்று பெருமிதம் அடைந்தார். மீண்டும் உனது ஊருக்குச் செல்வதற்கு பணம் உள்ளதா? எவ்வளவு செலவாகும்? என்று பெரியார் கேட்ட போது, 6 அணா தேவைப்படும் என்று தான் கூறவே, பெரியார் தனக்கு 12 அணா கொடுத்து வழியனுப்பி வைத்தார் என்று பெரியாருடனான தனது அனுபவங்களை பெருமகிழ்வுடன் நினைவு கூர்ந்தார்.

நாம் கிளம்பும் போது, அவரது மகன் நம்மிடம், தன் தந்தை இவ்வூரில் 3 முறை ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தபோது, தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டதையும், கிராமத்தில் பள்ளி, மற்றும் மருத்துவமனை கொண்டு வந்ததையும் கூறி, எல்லாக் கிராமங்களிலும் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகள் பெரும்பாலும் ஊருக்கு மேற்கே தான் இருக்கும், (நமது நிலத்தின் அமைப்பு மேற்கு நோக்கி சரிந்துள்ளதால், ஆறு, வாய்க்கால் போன்ற நீர்நிலைகளை தாங்கள் பயன்படுத்திய பின்னரே, தாழ்த்தப்பட்ட மக்கள் பயன்படுத்த வேண்டும் என்று ஆதிக்க சமூகத்தினர் நினைத்ததுகூட காரணமாக இருக்கலாம்). ஆனால், அதை தன் தந்தை மாற்றி தாழ்த்தப்பட் டோர் குடியிருப்புகளை ஊருக்கு மத்தியில், கிழக்கில் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் கொண்டு வந்ததைச் சுட்டிக் காட்டினார். அதன் காரணமாக அந்தப் பகுதி சாமிநாதபுரம் என்று தன் தந்தை பெயரால் அழைக்கப்படுவதைக் கூறினார். நாமும் பெரியார் பெருந்தொண்டர்களைப் பார்த்து அவர்களின் அனுபவங்களைக் கேட்ட மனநெகிழ்ச்சியுடன் விடைபெற்றோம்.

அதே ஊரில் மாணிக்கம் என்ற பெரியார் தொண்டர், 40 ஆண்டுகளுக்கு முன்பு, பெருவளப்பூரில் உணவு விடுதி நடத்தி, அனைத்து சமூகத்தினரும் அங்கு சமமாக அமர்ந்து உணவு அருந்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ததை அவரது மகன் நினைவு கூர்ந்தார்.

DATE OF PUBLICATION 11.06.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# கோவையில் கழக செயலவை கூடுகிறது

கோவையில் ஜூன் 21 ஆம் தேதி காலை 10 மணியளவில் கழக செயலவை - செயலவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி தலைமையில் கூடுகிறது.

இடம் : ஓட்டல் அண்ணாமலை அரங்கம் (இரயில் நிலையம் அருகில்)

செயலவை உறுப்பினர்களுக்கு தனியே அழைப்பிதழ் அனுப்பப்பட்டுள்ளது. செயலவை உறுப்பினர்கள் தவறாது பங்கேற்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## ஜோலார்பேட்டையில் படத்திறப்பு

கவிஞர் குயில்தாசன் தாயார், மறைந்த கண்ணம்மாள் அவர்களின் படத்திறப்பு 15.6.2014 அன்று முற்பகல் 11 மணியளவில் ஜோலார்பேட்டை ‘கேகேசி’ திருமண மண்டபத்தில் நிகழ இருக்கிறது. பள்ளிக் கல்வி அமைச்சர் கே.சி.வீரமணி படத்தைத் திறந்து வைக்க, பேராசிரியர் இரத்தின நடராசன் இரங்கல் உரையாற்றுகிறார்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர்,
சென்னை-41.
✆9941613535

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் மத மறுப்புத் திருமணம் செய்துள்ளதையும், தன் மகனுக்கு விதவைத் திருமணம் செய்து வைத்துள்ளதையும் கூறினார். அக்காலத்தில் பெருவளப்பூர் கிராமம் பெரியாரின் கோட்டையாகத் திகழ்ந்ததை யும், நூற்றுக்கும் மேற்பட்ட தோழர்கள் அவ்வூரில் இருந்ததையும் பெருமையுடன் நினைவுகூர்ந்தார்.

அடுத்து நமது பிரச்சாரம் விடுதலைபுரம் என்ற கிராமத்திற்குச் சென்றது. அவ்வூரில் இருந்த தங்கவேல் என்ற பெரியார் தொண்டர், தனக்கு சொந்தமான 4 ஏக்கர் நிலத்தை மக்களுக்கு எழுதிவைத்து, அதில் அனைத்து சாதி, மத மக்களுக்கும் இடம் கொடுத்து, அன்றே ஒரு “சமத்துவபுரத்தை” உருவாக்கி, 10.6.64 ல் பெரியார் பெருவளப்பூர் கிராமத்தில் நடந்த மூட நம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்திற்குச் சென்றபோது, தங்களது ஊரின் விடுதலைபுரம் என்ற பெயர்ப் பலகையை திறந்து வைத்ததை அவரது மகன் வீரசேனன் கூறினார். தனது தந்தை தங்கவேலனாரும், தாயார் மங்கையற்கரசியும் பெருவளப்பூர் கிராமத்தில் நடந்த மூட நம்பிக்கை ஊர்வலத்தில் கலந்து கொண்டு அலகு குத்திக் கொண்டு சென்றதையும், மாலை நடந்த பொதுக்கூட்டத்தில் பெருவளப்பூர் கிராம மக்கள் சார்பாக பெரியாரின் எடைக்கு எடை மிளகாய் மூட்டை வழங்கப்பட்ட போது மேடையில் தன் சார்பாக “ஊர் பேர் திறந்தவருக்கு, ஒப்பில்லா அய்யாவுக்கு உப்பு மூட்டை வழங்குகிறேன்” என்று கூறி, தந்தை பெரியாரின் எடைக்கு எடை உப்பு மூட்டை வழங்கியதைக் கூறினார்.

அடுத்து நமது மக்கள் சந்திப்பு புள்ளம்பாடி கிராமத்தில் நடந்தது. இளைஞர்களும் பொது மக்களும் ஆர்வமுடன் நமது கருத்துக்களைக் கேட்டனர். நம்மை வழி மறித்த ஆர்.எஸ்.எஸ் உறுப்பினரான இளைஞர் ஒருவர், நாங்கள் எங்கள் இயக்கத்தில் ஜாதி பார்ப்ப தில்லை என்றார். அவரிடம் நமது தோழர்கள் அப்படியே அவர்களது குடும்பங்களில் திருமண உறவு வைத்துக் கொள்வீர்களா? சமமாக நடத்துவீர்களா? கோவிலில் நுழைய தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அனுமதி கொடுப்பீர்களா? பார்ப்பனர் மட்டுமே பூஜை செய்யும் கருவறையில் நுழைந்து சூத்திர மக்களும் பூஜை செய்ய, பூஜிக்க பாடுபடுவீர்களா? வெறுமனே இந்துக்களே ஒன்றுபடுங்கள் என்று கூவுவதில் என்ன பயன்? என்று கேள்வி எழுப்பினர்.

**மே 30, 2014 :** காலை 11 மணிக்கு சமயபுரத்தில் நடந்த மக்கள் சந்திப்பின் போது, செல்பேசி கடை வைத்திருக்கும் பாண்டி என்ற இளைஞர், தான் பெரியார் கொள்கைகள் மீது பற்றோடு இருப்பதாகவும், தனக்கு மேலும் அதிக தகவல்கள் தேவை என்றும் கூறி, தனது தொடர்பு எண்ணைக் கொடுத்து நமது எண்ணையும் வாங்கிக் கொண்டார்.. சமயபுரத்திற்கு வேறு வேலையாக வந்திருந்த குளித்தலை ஆர்ச்சான்பட்டியைச் சார்ந்த வெங்கடாச்சலம் என்பவர், கடையில் தேநீர் அருந்திய நமது தோழர்களுக்கான கட்டணத்தை நான்தான் தருவேன் என்று கட்டாயப்படுத்தி கொடுத்ததோடு, தான் இயக்கத்தில் இணைந்து செயல்பட விரும்புவதாகக் கூறி, தனது முகவரியைக் கொடுத்தார்.

திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் அருகிலுள்ள தங்கும் விடுதியில் நமது தோழர் மனோகரன் அவர்களைச் சந்தித்த பின், ஸ்ரீரங்கத்தைச் சார்ந்த மூத்த பெரியார் தொண்டர் 83 வயதான, பல் மருத்துவர் எஸ்.எஸ் முத்து நமது தோழர்களைச் சந்தித்தார். நம்மை உற்சாகப்படுத்திய அவர் பெரியாருடனான தனது பழைய நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார். பெரியார் கொள்கையில் வளர்ந்த தனது மகள், தற்போது மகப்பேறு மருத்துவராக உள்ளதாகவும், முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் இடமிருந்து 6 தங்கப் பதக்கங்கள் பெற்றதையும், இது குறித்த செய்தி “புரட்சிப் பெரியார் முழக்கத்தில்” வந்துள்ளதையும் காட்டிய அவர், மற்றொரு மகள் நீதிபதியாக உள்ளதையும், மகன் மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் வழக்கறிஞராக உள்ளதையும் கூறி, தான் இப்போது கூட பல் மருத்துவம் பார்த்து வருவதைக் குறிப்பிட்டார். நம் தோழர்கள் அவரிடருந்து விடைபெற்று, 9 நாள் மக்கள் சந்திப்பை முடித்துக் கொண்டனர்.

**தொகுப்பு : ஈரோடு சிவகுமார்**

# அச்சமே – ‘பேய்’ நம்பிக்கை!

“பேய் இருக்கா, இல்லையா?” “நம்பலாமா? நம்பப்படாதா?” என்று ரஜினியையே கலவரப்படுத்தும் கேள்வியை வடிவேலு கேட்கும் காட்சி பிரபலமானது. நம்மில் சிலரும் இந்தக் கேள்வியுடன் அருகில் இருப்பவர்களைப் பதற வைத்துக் கொண்டுதான் இருக்கிறோம். அதே சமயம், கொடூர முகப் பேய், வெள்ளுடை தரித்த ஆவிகளைத் திரைப்படங்களில் கண்டு பயந்து மகிழ்வதிலும் பலருக்கு ஆர்வம் அதிகம்.

தமிழில் அதீத ஒப்பனையுடன் நடிகர், நடிகைகள் ‘ரொமான்டிக் லுக்’ விடும் காதல் படங்களைத் தவிர்த்துவிட்டு, பேய்ப்படம் என்று அறிவிக்கப்பட்ட படங்களைக் கணக்கிட்டாலே ஒரு நூறை நெருங்கும். ‘யார்’, ‘மை டியர் லிஸா’, ‘ஜென்ம நட்சத்திரம்’, ‘13-ம் நம்பர் வீடு’, ‘வா அருகில் வா’ போன்ற படங்கள் பேய்களைப் பிரபலமாக்கியவை. சமீபத்தில், ‘யாவரும் நலம்’, ‘பீட்சா’ போன்ற படங்களும் சிறப்பாக எடுக்கப்பட்டவை. மிகச் சமீபமாக ‘யாமிருக்க பயமே’ என்ற திரைப்படம் பேயுடன் நகைச்சுவை கலந்த கதையைக் கொண்டு எதிர்பாராத வேகத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது. படத்தின் வெற்றியை நாயகன் கிருஷ்ணாவே நம்பியிருக்க மாட்டார்!

என்றாலும், அறிவியல்பூர்வமாக எந்த அடிப்படையும் இல்லாத ஒரு விஷயத்தைப் பற்றிய கதைகள், திரைப்படங்கள் மக்களைக் கவர்வது ஏன்? பேயின் இருப்புப் பற்றிய சந்தேகம் இருந்தாலும் மனதில் கிலியுடன், பாதுகாப்பான வளையத்துக்குள் அமர்ந்து பேய்ப் படங்களைப் பார்க்கும் ரசிகர்களால் அந்த பய உணர்வை ரசிக்க முடிகிறது என்று உளவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தான் எழுதிய ‘காஞ்சனை’ கதை குறித்த கேள்விக்கு “பேயும் பிசாசும் இல்லை என்றுதான் நம்புகிறேன். ஆனால், பயமாக இருக்கிறதே!” என்று புதுமைப்பித்தன் பதிலளித்திருக்கிறார். “நம் நினைவுகள்தான் பேய்கள்” என்று மர்மக் கதை மன்னனான ஸ்டீஃபன் கிங் குறிப்பிட்டிருக்கிறார். அவரது கதைகளை அடிப்படையாக வைத்துப் பல ‘திகில்’ திரைப்படங்கள் வெளியாகியுள்ளன.

ஆதி மனிதர்களாகக் குகைகளில் நாம் வாழ்ந்துவந்த காலகட்டத்தில்தான் நம்மிடையே பேய் பற்றிய பயம் வந்தது. ஒருவேளை, பேய் நம்பிக்கைதான் கடவுள் நம்பிக்கைத் தோன்றுவதற்கும் காரணமோ? விவசாயம், அறிவியல், கல்வி போன்ற விஷயங்கள் அறிமுகமாகாத அந்தக் காலகட்டத்தில், புதிரான சம்பவங்கள் நடந்தால் அதற்கு ஏதேனும் ஒரு ‘சக்தி’ தான் காரணம் என்று குகை மனிதர்கள் அஞ்சினர். உதாரணமாக, குகைக்கு வெளியே கற்கள் உருண்டோடினால்கூட, கண்ணுக்குப் புலப்படாத சக்திதான் அதற்குக் காரணம் என்று குகை மனிதர்கள் நம்பியிருக்கிறார்கள். இந்த பயம் நம் மனதின் எங்கோ ஓர் மூலையில் படிந்து வந்திருக்கிறது. அது இன்றும் அவ்வப்போது எட்டிப் பார்க்கிறது.

கல்வியும் அனுபவமும் இந்த நம்பிக்கைகள் மீதான கேள்வியை நம்முன் எழுப்பியுள்ளதால், இந்த விஷயங்களைக் கதைகளில் மட்டும் ரசிக்கும் அளவுக்கு நம் மனம் பக்குவப்பட்டிருக்கிறது. காட்டில் அமர்ந்து தவம் புரிந்த இரவுகளில், உடனடியாக விளக்க முடியாத ஒலிகள், அசைவுகளால் அச்சமுற்றதாக புத்தரே குறிப்பிடுகிறார். அறிவுபூர்வமாக அவற்றை அணுகிய புத்தர், தன் பயத்துக்கு எந்த ஆதாரமும் இல்லை என்று உணர்ந்தார். எனினும், கலைகளில் அறிவையும் தாண்டி கற்பனைகளே அதிகப் பங்கை வகிக்கின்றன. எனவே, பேய், டிராகுலா, ஓநாய் மனிதன் உள்ளிட்ட நிரூபணமாகாத விஷயங்கள் குறித்த கலைப் படைப்புகள் இன்றும் வெற்றி பெறுகின்றன. ‘யாமிருக்க பயமே’ அவற்றில் ஒன்று.

**‘தமிழ் இந்து’ நாளேடு**

**ஆசிரியருக்குக் கடிதம்**

# “டேவிட் ‘பஸ்ல’ இருக்கான்டா!”

7.5.14 ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழில் “உடுப்பி கிருஷ்ணன் கோயிலில் பார்ப்பனர்களின் தீண்டாமை” கட்டுரை கண்டேன். இது சம்பந்தமான கடந்தகால நிகழ்வை நினைவுபடுத்த விரும்புகிறேன்.


1961-1962 ஆண்டுகளில் தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டையில் அரசுப் பணியாற்றி வந்தேன். பட்டுக்கோட்டை சுயமரியாதை இயக்கத்தின் கோட்டை. ஒருமுறை பட்டுக்கோட்டை பேருந்து நிலையத்தில் தஞ்சை செல்ல பஸ் ஏறினேன். பஸ் புறப்பட்ட அடுத்த நிறுத்தத்தில் பேருந்தில் இருந்த மூன்று பார்ப்பனர்கள், கண்டக்டரிடம் பேருந்தை நிறுத்திச் சொல்லி தமது பூணூலையும் மேலாடையை யும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, ‘டேவிட் பஸ்சுல இருக்காண்டா’ என்று சத்தம் போட்டு சொல்லிக் கெண்டு பேருந்தைவிட்டு இறங்கி தலைதெறிக்க ஓடியதைப் பார்த்தேன். அணைக்காடு சுயமரியாதை வீரர் டேவிட் கண்ணில் பட்டால் பார்ப்பனர்களின் பூணூல் தப்பாது என்பதை உணர்ந்தேன்.

பார்ப்பனர்கள் நம் மீது குதிரை சவாரி செய்யலாம் என்ற மதவாத திமிர் போக்கை மாற்றிக் கொண்டு மனிதனாக மாறவேண்டும். இப்போது ஆட்சி அதிகாரத்தை நம்பி ஆட்டம் போட்டால் அழிவு அவர்களை நோக்கித்தான் பயணிக்கும். இது கணினி யுகம். உலகம் சுருங்கிவிட்டது. உங்கள் மனதை விசாலமாக்கிக் கொள்ளுங்கள்.

**ஒரு பெரியார் தொண்டன், மயிலாடுதுறை**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 12th June 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | ஜூன் 19, 2014 | புரட்சி 13 | முழக்கம் 23 | விலை: ரூ.3.00

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேட்டி

# காவிரி மேலாண்மை வாரியம்: தமிழக உரிமையை வலியுறுத்திய முதல்வரை பாராட்டுகிறோம்

பிரதமர் மோடியை சந்தித்து இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்றும், அங்கு பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் எனவும் கோரிய தமிழக முதல்வரை பாராட்டுவதாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி கூறினார்.

கடலூர் மாவட்டம் விருத்தாசலத்துக்கு திருமணம் ஒன்றில் கலந்து கொள்ள வந்த அவர், செய்தியாளர்களிடம் கூறியது:

சிதம்பரம் அடுத்த வடக்குமாங்குடி கிராமத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிராக நடந்த கலவரத்தை முறையாக விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு 92 ஆவது அரசாணையின்படி பள்ளி, கல்லூரிகளில் இலவசக் கல்வி வழங்க சட்ட வரையறை உள்ளது. ஆனால், இவற்றை கல்வி நிர்வாகங்கள் பின்பற்றுவதில்லை. மேலும் ஏழை மாணவர்களுக்கு தனியார் பள்ளிகளில் 25 சதவீத இடஒதுக்கீடு வழங்க வேண்டும். இவற்றை உரிய திருத்தங்களோடு செயல்படுத்த வேண்டும்.

பிரதமர் மோடியை அண்மையில் சந்தித்த தமிழக முதல்வர் ஜெயலலிதா, காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும். இலங்கையில் நடைபெற்றது. இனப்படுகொலை என்றும், அங்கு பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தார். இதன் மூலம் தமிழக மக்களின் ஒட்டு மொத்தக் குரலை எதிரொலித்ததற்காக முதல்வர் ஜெயலலிதாவை திராவிடர் விடுதலைக் கழகம் பாராட்டுகிறது.

மேலும், பா.ஜ.க.வுக்கு எதிராக இணைய தளங்களில் கருத்து தெரிவிப்பவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. பா.ஜ.க. ஆட்சக்கு வந்தபின் மதவாதம் தலைதூக்க தொடங்கியிருக்கிறது. மோடி அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள சிறுபான்மைப் பிரிவைச் சேர்ந்த நஜ்மா ஹப்துல்லா சிறுபான்மையினருக்கு இடஒதுக்கீடு தேவையில்லை எனக் கூறியுள்ளார். இதுபோன்ற போக்கு பா.ஜ.க.வுக்கே எதிராக மாறிவிடும்.

திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில், "அகமண முறையை அகற்றுவோம்; ஆரோக்கியமான தலைமுறையை உருவாக்குவோம்" எனும் தலைப்பில் தமிழகம் முழுவதும் பிரச்சாரப் பயணம் நடைபெற உள்ளது என்றார் அவர்.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அண்மையில் சென்னையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில், பிரிந்து சென்ற அமைப்புகளை ஒன்றிணைக்கவும், பொது எதிரியை வீழ்த்தவும் கூட்டமைப்பாக செயல்படுவோம் எனத் தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து செய்தியாளர்கள் கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் கேட்டபோது, இது தொடர்பாக திராவிடர் கழகத்தின் அதிகாரப் பூர்வமான நாளிதழில் செய்தி வரவில்லை. அதிகாரப் பூர்வமாக அறிவித்தால் திராவிடர் விடுதலைக் கழகம் இதனை வரவேற்கும் என்றார். ✦

## கோவையில் மக்கள் சந்திப்பு இயக்கம் தொடங்கியது

இரண்டாம் கட்ட மக்கள் சந்திப்பு இயக்கம், ஜூன் 10 ஆம் தேதி பகல் 11 மணியளவில் கோவை காந்திபுரத்தில் தொடங்கியது. கழகப் பொருளாளர் இரத்தினசாமி, செயலவைத் தலைவர் துரைசாமி, மாவட்ட தலைவர் நேரு உள்ளிட்ட 20 தோழர்கள் இயக்கத்தில் பங்கேற்றனர். கோவை நகரம் முழுதும் மக்களை சந்தித்து துண்டறிக்கைகளை வழங்கி, கழக நூல்களை விற்பனை செய்து வருகின்றனர். கழகத்தின் முயற்சியை பொது மக்கள் பெரிதும் பாராட்டி வரவேற்று வருகிறார்கள். ஒவ்வொருவரிடமும் 10 ரூபாய் என்று நன்கொடை திரட்டப்படுகிறது. 100 ரூபாய் நன்கொடை தருவோருக்கு 20 ரூபாய்க்கான நூல்கள் வழங்கப்படுகின்றன.

ஜூலை 4 ஆம் தேதி வரை மக்கள் சந்திப்பு இயக்கம் தொடருகிறது. 4 ஆம் தேதி மேட்டுப்பாளையத்தில் நிறைவு பொதுக் கூட்டம் நடைபெறுகிறது.

15.6.2014 அன்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தோழர்களை உக்கடம்பகுதியில் சந்தித்துப் பாராட்டுகளைத் தெரிவித்தார். அன்று மாலை கோவையில் நடந்த மறைந்த நடிகர் மணிவண்ணன் நூல் வெளியீட்டு விழாவில் கழகத் தலைவர் பங்கேற்றார். மக்கள் சந்திப்பு இயக்கத் தோழர்களும் நிகழ்வில் பங்கேற்றனர்.

இரவு நிகழ்ச்சி முடிந்து தோழர்கள் தங்கியுள்ள திண்ணியம்பாளையம் சென்று தோழர்களுடன் கழகத் தலைவர் கலந்துரையாடினார். தோழர்கள் மக்களை சந்திக்கும் இயக்கத்தில் உற்சாகத்துடன் பங்காற்றி வருகிறார்கள். – நமதுசெய்தியாளர் (முழு விவரம் பின்னர்)

## வினாக்கள்... விடைகள்...!

✦ திருவண்ணாமலையில் "உலக நன்மைக்காக" ஜெபம்–பூஜை நடத்திய சாமியார்கள், தங்களுக்கு நிலம், காப்பகம் வழங்க தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்தனர்.– **'தமிழ் இந்து' செய்தி**

உலக நன்மையை நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்; எங்கள் கோரிக்கைகளை அரசுதான் கவனிக்க வேண்டும் என்கிறார்கள். சாமியார்களுக்குக்கூட பகுத்தறிவு வந்துடுச்சு!

✦ கூடங்குளம் அணுமின் நிலைய பராமரிப்புப் பணியின்போது ஆறு ஊழியர்கள் படுகாயம் அடைந்ததற்கு வால்வு பழுதடைந்ததே காரணம் என்று கூறுவது தவறு. ஊழியர்கள் சரியாகக் கையாளாமல் போனதே காரணம்.
**– அணுசக்தி ஒழுங்கு முறை வாரியம்**

மனிதர்களுக்கு ஆபத்துன்னா, அது ஒரு பிரச்சினை அல்ல. ஆனால், எந்திரங்கள் பாதுகாப்பா இருக்குதுன்னு சொல்லவர்றீங்க.... நல்ல மனசு!

✦ வங்கிகளில் பெருமுதலாளிகள் வாங்கிய ரூ.2.40 லட்சம் கோடி திருப்பி செலுத்தப்படவில்லை. 10 ஆண்டுகளில் வராத கடனாக தள்ளுபடி செய்யப்பட்டது ரூ.2 லட்சம் கோடி.
**– வங்கி ஊழியர் சங்கம் தகவல்**

உஷ்... சத்தமாய் பேசாதீங்க... பெரு முதலாளிகள் காதுல விழுந்தா எவ்வளவு சங்கடப்படுவாங்க. அப்புறம் நாட்டை யார் காப்பாத்தறது, சொல்லுங்க...

✦ நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி 'அந்தஸ்தை' பெற காங்கிரஸ் தீவிர முயற்சி. **– செய்தி**

தேர்தலுக்கு முன்பே மக்களிடம் ஒழுங்கு முறையா இந்தக் கோரிக்கையை வச்சிருந்தா, அவங்களாவது, பரிசீலித்திருப்பாங்க... இப்பப் போய் கதறி என்ன ஆவப்போவுது?

✦ மோடி அமைச்சரவையில் இரசாயனம் மற்றும் உரத் துறை இணை அமைச்சராகவுள்ள ராஜஸ்தானைச் சேர்ந்த நிகல் சந்த்மேவில் என்பவருக்கு பாலியல் வன்முறை வழக்கில் நீதிமன்றம் சம்மன். **– செய்தி**

இருக்கட்டுமே! இது என்ன ஊழல் குற்றச்சாட்டா? நாங்கள் ஊழலுக்குத்தான் எதிரிகள்.

✦ மோடியை விமர்சித்து கல்லூரி இதழில் புதிர் போட்டி நடத்திய 9 கல்லூரி மாணவர்கள் கேரளாவில் கைது. **– செய்தி**

யாரங்கே! மன்னரை விமர்சித்த இந்த துரோகிகளை இழுத்துச் சென்று எண்ணெய் கொப்பரையில் வீசுங்கள்! இது பாரதத்தின் உத்தரவு...

✦ ஆப்கானிஸ்தான் அதிபர் தேர்தலில் தலிபான்கள் எச்சரிக்கையை மீறி வாக்களித்தவர்களின் கை விரல்களை தலிபான் தீவிரவாதிகள் வெட்டினர்.
**– செய்தி**

கடவுளின் பெயரால் கைவிரல்கள் வெட்டப்படும் போதும் கடவுள் அதைத் தடுக்க மாட்டாரா? என்று கேட்டால், இப்படி கேள்வி எழுப்புவதை தடுப்பதற்கு மட்டும் மதவாதிகள் வந்து விடுவார்கள்!

✦ நாமக்கல் ஆஞ்சநேயர் சிலைக்கு 1008 லிட்டர் பால், 500 லிட்டர் தயிர், நல்லெண்ணெய் அபிஷேகம் செய்யப்பட்டது. **– 'தினமணி' செய்தி**

ஆஞ்சநேயருக்கு மூச்சு முட்டுமேன்னு, கொஞ்சமாவது கவலை இருந்தா இப்படி தலையில குடம் குடமா ஊத்துவாங்களா? 'அபிஷ்டுகள்!'

✦ பீகார், கதிகார் மாவட்டத்தில் பூஜாதேவி என்ற 20 வயது திருமணமான பெண்ணின், கழிப்பறை கட்ட வேண்டும் என்ற வேண்டுகோளை மாமனார் வீட்டில் அலட்சியப்படுத்தியதால், பிறந்த வீட்டுக்கே திரும்பி வந்து விட்டார்.
**– 'இந்து' ஏடு செய்தி**

பூஜை அறையைவிட கழிப்பறையே முக்கியம் என்பதைப் புரிந்து போர்க்கொடி உயர்த்திய பூஜாதேவியை பாராட்டுவோம்!

✦ தமிழ்நாட்டில் – கோயிலில் உள்ள சாமி சிலைகளை கணக்கெடுக்கும் பணியின்போது ஆகம விதிகளை மீறக் கூடாது என்று அதிகாரிகளுக்கு உத்தரவிடப் பட்டுள்ளது. **– அறநிலையத் துறை அதிகாரி**

கோயில் சிலைகளைக் கணக்கெடுப்பதற்கே ஆகம விதிகளில் இடமிருக்கிறதா என்பதையும், சாமி சிலைகள் திருட்டுப் போவதை ஆகம விதிகள் அனுமதிக்கிறதா என்பதையும், திருடுப்போகிற சாமி சிலைகளை தேடிக் கண்டுபிடிக்க ஆகமவிதிகளில் இடமுண்டா என்பதையும் விளக்கமாகச் சொன்னால் நல்லது, சார்!

**தலையங்கம்**

# தடை போட வேண்டுமாம்!

மதுரை உயர்நீதிமன்றக் கிளை ஒரு விசித்திர வழக்கை சந்தித்திருக்கிறது. 'பிராமணர்'களை எதிர்த்தும் அவதூறாகவும் பேசி வரும் தி.க. தலைவர் கி.வீரமணி, தந்தை பெரியார் தி.க. பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் ஆகியோர் மீது நடவடிக்கை எடுத்து, அவர்கள் "பிராமணருக்கு" எதிராகப் பேச தடைவிதிக்க உத்தரவிடவேண்டும் என்பது வழக்கு. வழக்கைத் தொடர்ந்தவர் சிவகாசியைச் சேர்ந்த கார்த்திகேயன் என்ற வழக்கறிஞர். விசாரித்த நீதிபதிகள் வி.இராம சுப்பிரமணியன், வி.எம். வேலுமணி மனுவை தள்ளுபடி செய்து விட்டனர்.

"விமர்சனம் என்பது கருத்து சுதந்திரத்தின் ஒரு பகுதி கருத்துரிமைக்கு அரசியல் சட்டத்தில் இடமிருக்கிறது. சரியான விமர்சனங்களை வரவேற்க வேண்டும். விமர்சனம் முறையற்றதாக நியாயமற்றதாக இருக்குமானால், ஒன்று அதை புறக்கணிக்கலாம். மற்றொன்று சம்பந்தப்பட்ட நபர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரலாம். விமர்சனம் எல்லை மீறினால் புத்தர் காட்டிய வழியில் அமைதி காக்கலாம். இந்த வழக்கு விசாரணைக்கு உகந்தது அல்ல" என்று நீதிபதிகள் தீர்ப்பளித்துள்ளனர்.

சகமனிதர்களை தனது வைப்பாட்டி மக்கள், சூத்திரர்கள் என்ற அறிவித்துக் கொள்ளவும் அதற்கான அடையாளமாக 'பூணூலை' அணிந்து கொண்டு, தான் 'பிராமணனாக' உயர்ந்து ஏனையோரை 'சூத்திரராக்கி' விட்டேன் என்று அடையாளப்படுத்தி வருவதையும் தடை செய்யப் படாமல், அதை சுட்டிக் காட்டி இழிமகனாக இருக்க மாட்டோம் என்று பேசுவதற்கு தடை போட வேண்டுமா?

"இந்த உலகம் கடவுளுக்குக் கட்டுப்பட்டது. கடவுள் மந்திரங்களுக்கு கட்டுப்பட்டது மந்திரம் 'பிராமணர்'களுக்குக் கட்டுப்பட்டது. (ப்ராஹ் மணோ மம தேவதாஹா) என்று கூறும் வேதமும், "பிரம்மாவின் வாயிலிருந்து 'பிராமணன்' பிறந்த தாலும் அவன்தான் முதலில் பிறந்தவனாதலாலும் வேதங்களுக்கு உரிமையுடையவன் ஆதலாலும், அனைத்து படைப்புகளின் எஜமானன் அவனே என்று கூறும் 'மனுஸ்மிருதி'யும் இன்று வரை புனிதமாக போற்றப்பட்டு அறிவு தடை செய்யப் படாத ஒரு நாட்டில் இதை எதிர்த்துப் பேசுவதற்கு மட்டும் தடைபோடப்பட வேண்டுமா? 'பிராமண' எதிர்ப்புக்கே தடை போட வேண்டுமானால் யார் யாருக்கு எல்லாம் தடைபோட வேண்டியிருக்கும்?

இடைத்தரகர்களாக இருந்து ஆணையும் பெண்ணையும் கூட்டி வைப்பதே 'பிராமணன்' வேலை என்று கூறும் குறுந்தொகைப் பாடலான,

> "பார்ப்பன மகனே! பார்ப்பன மகனே! / செம்பூ முருக்கின் நன்னார் களைந்து / தண்டொடு பிடித்த தாழ்கமண் டலத்துப் / படிவ வுண்டிப் பார்ப்பன மகனே/
>
> எழுதாக் கற்பின் நின்சொல் லுள்ளும் / பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின் / மருந்தும் உண்டோ! மயலோ இதுவே!"

– என்று பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணன் கூறும் குறுந்தொகைப் பாடலுக்கு தடை போட வேண்டும்.

அரசு செல்வத்தைத் துறந்து ராமன் காட்டுக்குப் போகும் நிலையிலும் தங்களுக்குத் தரவேண்டிய தானங்களை இரக்கமின்றி கேட்ட பேராசைக் காரர்கள் பார்ப்பனர்கள் என்பதை,

> "பரித்த செல்வம் ஒழியப் படரும் நாள் / அருத்தி வேதியருக்கு ஆன் குலம் ஈந்து அவர் / கருத்தின் ஆசைக் கரையின்மை கண்டு இறை / சிரித்த செய்கை நினைத்தழும் செய்கையாள்"

– என்று சுந்தர காண்டத்தில் பார்ப்பனரைக் கண்டித்த கம்பனின் இராமாயணத்துக்கும் தடை போட வேண்டும்.

கோயில் கர்ப்பக்கிரகத்துக்குள் சென்று 'பிராமணன்' கடவுளை அர்ச்சிக்கக் கூடாது. அப்படி அர்ச்சித்தால் நாடாளும் மன்னனுக்கு நோய் உண்டாகி, நாட்டில் பஞ்சம் வந்துவிடும் என்பதை,

> "பிரான் தன்னை அர்ச்சித்தால் / போர் கொண்ட வேந்தர்க்குப் / பொல்லா வியாதி யாம் / பார் கொண்ட நாட்டுக்குப் / பஞ்சமு மாம் என்றே / சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத்தானே"

– என்ற திருமூலரின் திருமந்திரத்துக்குத் தடை போட வேண்டும்.

சாத்திரத்தையும் வேதத்தையும் நெருப்பில் போட்டுக் கொளுத்த வேண்டும் என்பதை,

> "சாத்திரத்தைச் சுட்டி சதுர்மறையை பொய்யாக்கிச் / சூத்திரத்தைக்கண்டு துயர் அறுப்பது எக்காலம்?"

பாடல் வழியாக போர் முழக்கமிட்ட சித்தர் பத்திர கிரியார் பாடல்களைத் தடை செய்ய வேண்டும்.

> "சாத்திரத்தை ஓதுகின்ற சட்டநாதபட்டரே வேர்த்து இரைப்பு வந்தபோது வேதம் வந்து உதவுமோ?"

– என்றும்,

> "மீன் இறைச்சி தின்றதில்லை அன்றும் இன்றும் வேதியர் / மீன் இருக்கும் நீரிலோ மூழ்குவதும் குடிப்பதும் / மான் இறைச்சி தின்றதில்லை அன்றும் இன்றும் வேதியர் மான் உரித்த தோலலோ மார்பில் நூல் அணிவதும்"

– என்றும் முழங்கிய சித்தர் சிவவாக்கியர் பாடல் களுக்கு தடை போடவேண்டும்.

பார்ப்பனரை அமைச்சராக வைத்துக் கொண்டால் ஆட்சி முறைகள் கெட்டுப் போகும். ஆட்சியில் நீதி இல்லாமல் போய்விடும் என்பதை –

> "நாலெனிலோ கோல்சாயும் நுந்தமரேல் வெஞ்சமராம் / கோலெனிலோ வாங்கே குடிசாயும் – நாலாவான் / மந்திரியுமா வான் வழிக்குத் துணையாவான் அந்தவரசேயரசு."

– என்று பாடிய அவ்வையார் பாடல்களுக்கு தடை போட வேண்டும்.

> "கன்மனப் பார்ப்பார்தங்களைப் படைத்துக் காகத்தை யென்செயப் படைத்தாய்?"

– என்று கேட்கும் 'விவேக சிந்தாமணி'க்கு தடை போடவேண்டும்.

"ஆயிரக்கணக்கான வருடங்களாக இந்திய ரிஷிகள் சேர்த்து வைத்த பொக்கிஷங்களை, இவற்றுக்கு டிரஸ்டியாக நியமிக்கப்பட்ட 'பிராமணன்', ஏனைய மக்களுக்கு பகுத்து வழங்காததால்தான் முஸ்லிம் படையெடுப்பு இந்தியாவில் வெற்றி அடைநத்து. பொக்கிஷங்களை (நல்ல கருத்துக்களை) "பிராமணன் அனைத்து மக்களுக்கும் வழங்காததால்தான், இந்தியர்களுக்கு தங்கள் மதத்தின் மீது ஈடுபாடு இல்லை" என்று பேசியும் எழுதியும் வைத்த விவேகானந்தரின் கருத்துகளுக்கு தடைபோட வேண்டும்.

"தமிழ் மக்கள் எல்லோருக்கும் தொடர்பாகத் தீது புரிந்துவரும் பார்ப்பனரை நஞ்சினுங் கொடியராக நினைத்திடக்" கோரிய மறைமலை அடிகளாரின் நூல்களுக்கு தடை போட வேண்டும்.

> "பார்ப்பான் பால்படியாதீர்; / சொற்குக் கீழ்ப் படியாதீர் / உம்மை ஏய்க்கப் பார்ப்பான்; / தீ துறப்பார்ப்பான் / கெடுத்துவிடப் பார்ப்பான் / எப்போதும் பார்ப்பான்."

– என்று உணர்ச்சியூட்டிய புரட்சிக்கவிஞர் பாரதி தாசன் பாடல்களுக்கு தடை போட வேண்டும். ஏன், "பேராசைக்காரனடா பார்ப்பான்" என்று எச்சரித்த பார்ப்பன பாரதிக்கும் தடை போட வேண்டும்.

இப்படி இன்னும் ஏராளம் உண்டு. பார்ப்பன எதிர்ப்பை சட்டத்தின் இடுக்குகளில் புகுந்து தடுத்துவிடலாம் என்று பார்ப்பனர்கள் கருதுவது அவர்களின் கோழைத்தனத்தின் வெளிப்பாடு.

நீதிமன்றத்தின் படிக்கட்டுகளை ஏறும் பார்ப்பனர்கள், காலத்தின் மாற்றத்தைக் கணக்கில் எடுத்து, 'பிராமணன்' இறுமாப்பைத் தூக்கி யெறிந்து சகமனிதனாக அடையாளப்படுத்திட முன் வராதவரை பார்ப்பனிய நச்சுக் கருத்துகளை கைவிடுகிறோம் என்று பிரகடனப்படுத்தி, சமத்துவத்தை நேசிக்காதவரை பார்ப்பன எதிர்ப்புப் போர் தொடரும்! தொடரும்!

இதைக் கல்லில் செதுக்கி வைத்துக் கொள்ளுங்கள்!

# அன்புமணி மீதான வழக்கு என்ன?

அன்புமணி மீதான சி.பி.ஐ. வழக்குகள் குறித்து டெல்லி வட்டாரத்தில் விசாரித்தோம். "அவர் மீது முதல் வழக்கு, ம.பி. மாநிலம் இந்தூரில் பதிவு செய்யப்பட்டது. இங்கு கடந்த 2007 ஆம் ஆண்டு 'இன்டெக்ஸ் மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம்' என்ற பெயரில் சுரேஷ் சிங் என்பவர் புதிய மருத்துவக் கல்லூரியைத் தொடங்கினார். 2008-2009 ஆம் கல்வியாண்டில் இந்தக் கல்லூரி எம்.பி.பி.எஸ். இரண்டாமாண்டு மாணவர் சேர்க்கைக்காக, இந்திய மருத்துவக் கவுன்சிலிடம் விண்ணப்பித்து.

இந்திய மருத்துவக் கவுன்சில் குழு அங்கு சென்று ஆய்வு செய்து, 'கூடுதல் மாணவர்களை சேர்க்கத் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் இல்லை' என அறிக்கை கொடுத்துவிட்டது. பின்னர் சுரேஷ் சிங் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். அதன் பேரில் நீதிமன்றமே ஒரு குழுவை அமைத்து ஆய்வு செய்ய, அந்தக் குழுவும் முதல் குழுவைப் போலவே அறிக்கை தாக்கல் செய்தது.

இதன் பிறகுதான் சுரேஷ் சிங், அன்புமணியின் இலாகாவை நாடியிருக்கிறார். மத்திய சுகாதாரத் துறை இதில் அதீத ஆர்வம் எடுத்துக் கொண்டு, புதிதாக துபியா, குப்தா என இரு டாக்டர்களை அனுப்பி ஆய்வு செய்தது. அவர்கள் கொடுத்த 'ரிப்போட்' அடிப்படையில் இரண்டாமாண்டு மாணவர் சேர்க்கைக்கு சுகாதாரத் துறை அனுமதித்தது. ஆனால் மீண்டும் மருத்துவக் கவுன்சிலின் ஆய்வில், மேற்படி துபியா, குப்தா ஆகியோரின் அறிக்கையில் ஏக குளறுபடிகள் இருப்பது தெரிய வந்தது. மருத்துவக் கல்லூரி நிர்வாகத்தின் 'கவனிப்பில்' அவர்கள் திளைத்ததாகவும் தெரிய வந்தது.

மத்திய அமைச்சராக இருந்த அன்புமணி, சுரேஷ் சிங், ஆய்வுக் குழு உறுப்பினர்களான துபியா, குப்தா மற்றும் அப்போதைய சுகாதாரத் துறை உயர் அதிகாரிகள் பலரும் வழக்கில் சிக்கியுள்ளனர். கடந்த 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் 27 ஆம் தேதி இந்த வழக்கின் குற்றப் பத்திரிகையை டெல்லி தனி நீதிமன்றத்தில் சி.பி.ஐ. தாக்கல் செய்தது.

இதேபோல உ.பி. மாநிலம் பரேலியில் உள்ள கோகில்கந்த் மருத்துவக் கல்லூரியில் 2 ஆம் ஆண்டு மாணவர் சேர்க்கைக்கு அனுமதி வழங்கிய விவகாரத்திலும் அன்புமணி மீது புகார் எழுந்தது. இந்த வழக்கில் கடந்த 2013 ஆம் ஆண்டு பிப்ரவரி 25இல் லக்னோ தனி நீதிமன்றத்தில் சி.பி.ஐ. குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. இரு வழக்குகளும் ஒரே மாதிரியான தன்மை கொண்டவை. இரு வழக்குகளிலும் குற்றவாளிகள் மற்றும் சாட்சிகளின் பட்டியலும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியானவை! எனவே உச்சநீதிமன்ற உத்தரவுப்படி, லக்னோ வழக்கும் கடந்த மார்ச் மாதம் டெல்லி தனி நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. ஒரே நீதிமன்றத்தில் நடக்கும் இந்த இரு வழக்குகளும்தான் அன்பு மணியின் அமைச்சர் கனவைத் தகர்த்திருக்கின்றன. தவிர, அவரது எதிர்கால அரசியலையும் இந்த வழக்குகளே நிர்ணயிக்க இருக்கின்றன" என்கிறார்கள், விவரமறிந்த டெல்லி பிரமுகர்கள்.

**5.6.2014 – 'குமுதம் ரிப்போர்ட்டர்'**

## திருவாரூர் தங்கராசு படத்திறப்பு

சென்னை திருவான்மியூர் 'குத்தூசி குருசாமி-குருவிக்கரம்பை வேலு சுயமரியாதைப் பேரவை' சார்பில், 16.3.2014 ஞாயிறு அன்று திருவாரூர் கே.தங்கராசு படம் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு மதுரை மரு.அ.சவுந்திர பாண்டியன் தலைமை வகித்தார். புதுகை க. இராசேந்திரன் வரவேற்புரையாற்றினார். திருவாரூர் தங்கராசு படத்தை திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரனும், திராவிடர் கழகப் பொருளாளர் கோ.சாமிதுரை படத்தை இனமானக் கவிஞர் செ.வை.ர. சிகாமணியும் திறந்து வைத்து உரை நிகழ்த்தினர். 'அறிவின் வழி' மாத இதழ் ஆசிரியர் கவிஞர் குடந்தையார் சிறப்புரையாற்றினார்.


"புரட்சிப் பெரியார் முழக்கம்"

**ஆண்டுக்கட்டணம்**

**ரூ.200**

தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆9941613535

## நாகம்மையார் மறைவும், கிறிஸ்துவ திருமணமும்

# பெரியார் வரலாற்று நூலில் பிழையான தகவல்கள்

**தா.செ. மணி**

***திராவிடர் கழகம் வெளியிட்டு வரும் 'தமிழர் தலைவர்' பெரியார் வரலாற்று நூலில் திரிக்கப்பட்ட பிழைகளை நேர் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு இக்கட்டுரை வெளியிடப் படுகிறது.***

பெரியாரின் வாழ்வில் நிகழ்ந்த குறிப்பிடத்தக்க நிகழ்வுகளில் ஒன்றாக, நாகம்மையார் மறைவுக்கு (11-5-1933) அடுத்த நாள் திருச்சியில் 144 தடையை மீறி, இரு கிறிஸ்துவர்களுக்கு சுயமரியாதைத் திருமணம் செய்து வைத்தார் என்பது ஒன்றாகும். திராவிடர் கழகம் வெளியிட்டுள்ள சாமி சிதம்பரனார் எழுதிய 'தமிழர் தலைவர்' எனும் 1939 ஆம் ஆண்டு வரையிலான வாழ்க்கை வரலாற்று நூலிலும் "11-5-1933 இல் நாகம்மையார் காலஞ்சென்றார். 12-5-1933 இல் ஈ.வெ.ரா திருச்சி சென்று அங்கு ஒரு கிறிஸ்துவ விவாகத்தை 144 வது செக்ஷனை மீறி நடத்தி வைத்து அரஸ்டு செய்யப்பட்டார். பிறகு, சர்க்காரால் இந்த வழக்கு வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட்டது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதைப் பின்பற்றியே தோழர் வே.ஆனைமுத்து அவர்கள் தொகுத்து வெளியிட்டுள்ள "பெரியார் ஈ.வெ.ரா சிந்தனைகள்" இரு பதிப்புகளிலும் அவ்வாறே குறிப்பிடப்பட்டுள்ளது.

திராவிடர் கழகம் வெளியிட்டு வரும் சாமி சிதம்பரனாரின் 'தமிழர் தலைவர்' என்ற நூலை பெரியாரின் அதிகாரபூர்வமான வாழ்க்கை வரலாறாக நம்பியே, அந்நூலில் குறிப்பிடப்பட்டிருக்கும் செய்திகளை எவ்வித ஆய்வுக்கும் உட்படுத்தாமல் ஏற்றே, தொடர்ந்து இந்த செய்தியை அனைவரும் பதிந்து வந்திருக்கிறார்கள்.

ஆனால் நாம் 15-5-2014 நாளிட்ட 'பெரியார் முழக்கம்' ஏட்டில் வெளியிட்டுள்ள 7-5-1933 குடிஅரசு ஏட்டின் 12ஆம் பக்கத்தில் தமிழ்நாடு புரோகித மறுப்பு சங்க உறையூர் கிளை இத் திருமணத்திற்காக வெளியிட்டிருக்கும் அழைப்பிதழி லும், மணமகனின் தந்தை அச்சிட்டிருந்த ஆங்கில அழைப்பிதழிலும், மேற்குறித்த தடையை மீறி நடந்த கிருஸ்துவ சுயமரியாதை திருமணத்தின் மணமகன் எழுதிய பதிவிலும், 14-5-1933 தான் திருமண நாளாகக் குறிப்பிட்டிருக்கும் போது 'தமிழர் தலைவர்' நூலை எழுதிய சாமி.சிதம்பரனார் ஏன் திட்டமிட்டே 12-5-1933 என்று தவறுதலாகப் பதிவு செய்ய வேண்டும் என்று யார் ஒருவரும் அய்யுறக்கூடும்.

**அது குறித்து சில செய்திகள்**

பெரியார் 1938 இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கைதாகிறார். 6-12-1938 இல் ஓராண்டு சிறை தண்டனையும், ஆயிரம் ரூபாய் அபராதம்; அபராதம் - செலுத்தாவிடில் மேலும் ஆறு மாதம் சிறை என்று தண்டனை வழங்கப்படுகிறது. ஆனாலும் அவரது மோசமான உடல் நிலையைக் கண்டு, சிறைக்குள் ஏதாவது நடந்துவிட்டால் தேவையற்ற சிக்கல் வரும் எனக் கருதிய அரசு 6-6-1939 அன்று அவரை விடுவித்து விடுகின்றது.

பெரியார் சிறை செல்வதற்கு முன்னரும், சிறை செல்லும் போதும் அவரது வாழ்க்கை வரலாற்றை அவரையே எழுதச் சொல்லி பலரும் வற்புறுத்தியும், சிறை வாழ்க்கையிலும் அவர் எழுதவில்லை என்பதைக் கண்ட சாமி. சிதம்பரனார் பெரியாரது வாழ்க்கை வரலாற்றை எழுதத் தொடங்குகிறார். எழுதியவற்றை 1939 ஜூன் மாதம் விடுதலையான பெரியாரிடம் காட்டி திருத்தங்களைப் பெற்று 1939 ஜூலையில் அவ்வரலாற்று நூல் வெளியாகிறது.

அந்த ஆண்டு செப்டம்பரோடு பெரியாருக்கு வயது 60 முடிகிறது. அந்த காலத்தில் 60 ஆண்டுகளே ஒரு மனிதனின் ஆயுள்காலம் என்று எண்ணிய காலம். அதனால் தானே தமிழ் வருடங்கள் என்று சொல்லப்படும் தமிழல்லாத பெயர்களையே முழுதும் கொண்ட ஆண்டுக் கணக்கில் 60 ஆண்டுப் பெயர்கள் மட்டுமே வைத்துள்ளனர்.

**இடையில் ஒரு செய்தி**

'காங்கிரஸ் மகா சரித்திரம்' எழுதிய பட்டாபி சீத்தாராமையா, 1919, ஏப்ரல், 13 அன்று நடந்த ஜாலியன் வாலாபாக் படுகொலையைப் பற்றி எழுதும் போது, **இந்து ஆண்டுப் பிறப்பு நாளையொட்டி**, அந்த துப்பாக்கி சூடு நிகழ்த்தப்பட்ட பகுதியில் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டதாகக் கூறுகிறார். சித்திரை முதல் நாள் (ஏப்ரல் 13) தமிழ் ஆண்டுப் பிறப்பல்ல - இந்து ஆண்டு பிறப்பு என்கிறார் அவர்.

ஆக, பெரியாரின் மணி விழா (60 ஆவது ஆண்டு நிறைவு விழா) வெளியீடாக 'தமிழர் தலைவர்' என்ற அவரது வாழ்க்கை வரலாற்று நூலை குத்தூசி குருசாமி அவர்கள் தனது மாமனார் திரு. சுப்பிரமணியம் அவர்களது திருவல்லிக்கேணி வீட்டு முகவரியிட்டு நடத்தி வந்த "தமிழ் நூல் நிலையத்தின்" சார்பாக வெளியிட்டுள்ளார்.

ஆசிரியர் முன்னுரையில் சாமி. சிதம்பரனார் 1939 ஜூன் தொடக்கத்தில், பெரியார் விடுதலையான பின், 'தமிழ் நூல் நிலையத்தார்' பெரியாரிடம் படித்துக் காட்டிப் பல திருத்தங்கள் செய்யப்பட்டதாகவும் கூறி, 10-7-1939 இல் முன்னுரை எழுதியுள்ளார். சோமசுந்தர பாரதியாரிடம் 31-8-1939 அன்றும், திரு.வி.க.விடம் 1-9-1939 அன்றும், சர்.ஆர்.கே. சண்முகம் செட்டியாரிடம் 7-9-1939 அன்றும் நூலுக்கு சிறப்புரைகள் பெறப்பட்டுள்ளன.

அந்நூலின் அன்பிதழாக (Complimentary Copy) அப்போது கொச்சி திவானாக இருந்த சர்.ஆர்.கே சண்முகம் செட்டியார் அவர்களுக்கு வெளியீட் டாளரான குத்தூசி குருசாமி அவர்கள் தனது கைப்பட Complimentary Copy To Sir. R.K.Shanmugam Chettiar avl, KCIE Dewan of Cochin With the best Compliments from the Publishers என்று 19-9-1939 அன்று எழுதியனுப்பிய நூல் சர்.ஆர்.கே.சண்முகம் செட்டியாரின், கோவை கே. ஸ்ரீரங்கம்மாள் கல்வி நிலைய நூலகத்திலிருந்து எம்மால் படி எடுக்கப்பட்டு எம்மிடம் உள்ளது. ஆக, அந்நூல் பெரியாரின் 61-ஆவது பிறந்த நாளான 17-9-1939 அன்று வெளியிடப் பட்டிருக்கலாம்.

அந்த நூல் All Rights Reserved என்ற குறிப்புடனேயே வெளியாகியுள்ளது. அதன் பின்னர் 1942 இல் குத்தூசி குருசாமி அவர்களின் தமிழ் நூல் நிலையமே இரண்டாவது பதிப்பை வெளியிட்டுள்ள தாகவும் தெரிய வருகிறது.

1939 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ள முதல் பதிப்பின் 141 ஆம் பக்கத்தில் பெரியார், நாகம்மையார் உயிர் ஊசலாடிருக்கும் நிலையில், திருப்பத்தூரில் நடக்கவிருந்த வட ஆற்காடு ஜில்லா சுயமரியாதை மாநட்டுக்கு செல்ல வேண்டாம் என்று தடுத்தும் கேட்காமல் போன செய்தியும், அம்மாநாட்டில், "…………, வருணாசிரமம் இருக்க வேண்டும்; ஜாதி இருக்க வேண்டும்; முதலாளிகள் இருக்க வேண்டும்; மதம் இருக்க வேண்டும்; வேதம், புராணம், இதிகாசம் இருக்க வேண்டும்; இன்றைக்கிருக்கிறவைகள் எல்லாம் இருக்கவேண்டும்" என்று சொல்லிக் கொண்டு, இவைகளையெல்லாம் பலப்படுத்த நிலைக்க வைக்க வேண்டி - "வெள்ளைக்காரன் மாத்திரம் போகவேண்டும்" என்கின்ற காங்கிரசோ, சுயராஜ்யமோ, தேசியமோ, காந்தியமோ, - சுயமரியாதை இயக்கத்துக்கு வைரியே (எதிரியே) ஆகும். ஆகையால் சுயமரியாதை இயக்கத்தாரால் அழிக்கப்பட வேண்டியவைகளில் இந்தக் காங்கிரசும் காந்தீயமும் முதன்மையானவைகளாகும்" என்று திருப்பத்தூர் மாநாட்டில் பேசினார். இவ் வுண்மையை எல்லோரும் ஒப்புக்கொண்டனர். பின்னர் 11-5-1933-ல் நாகம்மையார் காலஞ் சென்றார் என்று தான் உள்ளது.

ஆனால், அடுத்து, ஈரோடு குடிஅரசு பதிப்பகம் 1960 ஆம் ஆண்டு வெளியிட்ட நான்காம் பதிப்பே நம் பார்வைக்குக் கிடைத்தது. அப்பதிப்பின் 151 ஆம் பக்கத்தில் "பின்னர் 11-5-1933 இல் நாகம்மையார் காலஞ்சென்றார். 12-5-1933 இல் ஈ.வெ.ரா திருச்சி சென்று அங்கு ஒரு கிறிஸ்துவ விவாகத்தை 144வது செக்ஷனை மீறி நடத்தி வைத்து அரஸ்டு செய்யப் பட்டார். பிறகு, சர்க்காரால் இந்த வழக்கு வாபீஸ் பெற்றுக் கொள்ளப்பட்டது" என்பதாகக் காணக் கிடக்கிறது.

அடுத்ததாக வெளியிடப்பட்டுள்ள அய்ந்தாம் பதிப்பை நம்மால் காணமுடியவில்லை. திருச்சி பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனத்தால் 1971 இல் வெளியிடப்பட்ட ஆறாம் பதிப்பு நம்மிடம் உள்ளது. அந்நூலின் 139ஆம் பக்கத்திலும் நான்காம் பதிப்பில் உள்ளவாறான செய்தியே காணக் கிடக்கிறது.

அடுத்து 1983 இல் வெளியிடப்பட்ட எட்டாம் பதிப்பு, 1992 இல் வெளியிடப்பட்டுள்ள ஒன்பதாம் பதிப்பு; 1997 இல் வெளியிடப்பட்டுள்ள பத்தாம் பதிப்பு என அனைத்துப் பதிப்புகளிலும் அவ்வாறே காணப்படுகிறது. 'வாபீஸ்' என்ற சொல் மட்டும் 'வாபஸ்' என மாற்றப்பட்டுள்ளது.

ஆக, பெரியாரின் வரலாற்றில் நடந்த ஒரு முக்கிய செய்தியை, ஏற்றத்தாழ்வை இந்து மதமல்ல எந்த மதம் சொன்னாலும் அதைக் கடுமையாக எதிர்ப்பது என்ற நோக்கில் கத்தோலிக்க கிறிஸ்துவர்களுக்கு இடையே பெருந்தடைகளை மீறி நடத்தப்பட்ட கிறிஸ்துவ சுமரியாதைத் திருமணத்தின் நாளை கூட ஒப்பு நோக்காமல் தொடர்ந்து பிழையாகவே அச்சிட்டு வரும் பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவனச் செயலாளர் நாம் 1925 முதல் 1938 முடிய 'குடிஅரசு' இதழில் வெளிவந்திருந்த பெரியாரின் எழுத்துக் களையும் பேச்சுகளையும் தொகுத்து வெளியிடுவதை அறிவித்தவுடன், உயர் நீதிமன்றத்தை அணுகி தடை வாங்கி வழக்கு நடத்தினார். உயர் நீதிமன்றத்தில் தோற்றதும், உயர் நீதிமன்ற டிவிஷன் பெஞ்சில் மேல் முறையீடு செய்து அதிலும் வெற்றி பெறமுடியாத போதும், டெல்லி உச்ச நீதிமன்றத்துக்கும் ஓடோடி சென்று மேல் முறையீடு செய்தார். அங்கு மேல் முறையீட்டு மனு விசாரணைக்கு ஏற்கவும் தகுதி யற்றது என்று தள்ளுபடி செய்த பின்னர்தான் ஓய்ந்தார்.

அதோடு விட்டாரா? எங்களைத் தவிர எவர் வெளி யிட்டாலும் பெரியார் கருத்தை திரிபு செய்து விடுவார்கள் என்று வித்தாரம் வேறு பேசினார்கள். ஆனால் அவர்கள் தான் 1925, மே 2ஆம் நாளிட்ட முதல் இதழின் தலையங்கத்தையே தப்பும் தவறுமாக வெளியிட்டு 'திரிபுவாத திம்மன்'களாக வெளிப் படுத்திக் கொண்டார். அப்போது நமது பெரியார் முழக்கம் ஏட்டில் "திரிபுவாத திம்மன்கள் யார்?" என்று ஒரு தொடரே அவர்களது திரிபு வாதங்களை விளக்கி எழுதியிருந்தோம்.

நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்; நடப்பவை நல்லவையாக இருக்கட்டும். இனி மேலாவது நாகம்மையார் மறைந்தது 11-5-1933; தடைகளைத் தாண்டி கத்தோலிக்க கிறிஸ்துவர் சுயமரியாதைத் திருமணம் நடந்தது 14-5-1933 என்று திருத்திக் கொள்வார்களாக!

மற்றுமொன்றையும் சுட்டிக் காட்டியாக வேண்டும்

1971 -ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட "தமிழர் தலைவர்" நூலின் ஆறாம் பதிப்புரை பிற் சேர்க்கையாக சேர்க்கப்பட்டிருப்பதில், 1943 ல் பம்பாயில் ஜின்னா, டாக்டர் அம்பேத்கர் ஆகி யோர்களைச் சந்தித்து நாட்டு பிரிவினை குறித்தும், சமுதாய மதவியல் குறித்தும் தம் கருத்துக்களை எழுதி விளக்கினார்கள் என்றுள்ளதில் இருந்த '1943 இல் என்ற தவறானப் பதிவை பிந்தைய பதிப்புகளில் '8-1-1940 இல்' என்று திருத்தி கொண்டுவிட்டார்கள். ஆனாலும் ஜின்னா, அம்பேத்கரை சந்தித்த பெரியார் தம் கருத்துக்களை எழுதி விளக்கினார்கள் என்றே உள்ளது. நேரில் சந்தித்தவர் தம் கருத்துக்களை எடுத்து விளக்கியிருப்பாரா? எழுதி விளக்கியிருப்பாரா? சரி அதையும் விடுவோம்

1960 ஆம் ஆண்டில் நான்காம் பதிப்பிலிருந்து பிற்சேர்க்கையாக 1959 பிப்ரவரி 1 முதல் 28 முடிய வடநாட்டு சுற்றுப் பயணம் உட்பட 1959 ஆம் ஆண்டு வரையிலான வாழ்க்கைக் குறிப்பே 1971 ஆம் ஆண்டின் ஆறாவது பதிப்பிலும் அடுத்த ஆண்டு களில் நிகழ்ந்த நிகழ்வுகளைச் சேர்க்காமல் தொடர்கிறது.

1959 பிப்ரவரி 1 முதல் 28 முடிய நடந்த பயணத்தில் பம்பாயில் பல இடங்களில் தொழிலாளர்கள் நிறைந்த பகுதியில் உரையாற்றியுள்ளார். அவற்றில் 1. கடவுள் மதம் 2. ஜாதி 3. ஜனநாயகம் இம்மூன்றும்

(4 ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION 18.06.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# பேரறிவாளன், மனம் திறக்கிறார்!

***வேலூர் சிறையில் இருக்கும் பேரறிவாளன் தூக்குத் தண்டனை ரத்து, தமிழக அரசின் விடுதலை முயற்சி, தன் தாய் அற்புதம்மாளின் போராட்டம் பற்றி பல கேள்விகளுக்கு வழக்கறிஞர் மூலம் விடை அளிக்கிறார்.***

*அரசியல் சாசன அமர்விற்கு உங்கள் விடுதலை வழக்கு மாற்றப்பட்டுள்ள நிலையில் என்ன நடக்கும் என எதிர்பார்க்கிறீர்கள்?*

அரசியல் சாசன அமர்வில் நீதியரசர்கள் யார் யார் பங்கு பெறப் போகிறார்கள் உள்ளிட்ட பல்வேறு காரணிகள் இருப்பினும் தற்போது அமைந்துள்ள புதிய மத்திய அரசு இதில் எவ்வகையான நிலைப்பாடு எடுக்க உள்ளது என்பதையே நான் மிக ஆவலுடன் எதிர்நோக்கிக் காத்திருக்கிறேன். காரணம் தண்டனை குறைப்பு அதிகாரம் என்பது முழுக்க முழுக்க மாநில அரசின் அதிகார எல்லைக்கு உட்பட்டது என நன்கு தெரிந்திருந்தும் அரசியல் காரணங்களுக்காக சென்ற காங்கிரசு மத்திய அரசு தமிழக அரசின் முடிவை எதிர்த்தது - வழக்கு தொடுத்தது. தற்போது அமைந்துள்ள புதிய மத்திய அரசு மாநில உரிமைகளை மதிக்கிற அரசாக இருக்கும் என நம்புகிறேன்.

மேலும், தற்போது நாட்டின் பிரதமராக பொறுப்பேற்கவுள்ள திரு.மோடி அவர்கள் மாநில முதல்வராக இருந்தவர் என்பதால் இதிலே எனக்கு கூடுதலாகவே நம்பிக்கை இருக்கிறது. அதேபோல் திருதியாகராசன் அவர்களின் வாக்குமூலத்தை தற்போதைய மத்திய அரசு கணக்கிலெடுத்து வழக்கின் தன்மையை எடைபோடும் எனவும் அதற்கு அமைய வழக்கை அணுகும் எனவும் உறுதியாக நம்புகிறேன்.

*'உயிர்வலி' ஆவணப்படம் மிகப் பெரிய அதிர்ச்சியை மக்களிடையே ஏற்படுத்தி இருந்தாலும் அதில் இடம் பெற்றிருந்த சி.பி.ஐ. அதிகாரி தியாகராசனின் வாக்குமூலத்தை நீதிமன்றம் ஏற்கவில்லையே?*


இந்திய நீதித்துறை வரலாற்றில் இதற்குமுன் யாருக்குமே நிகழாத திருப்பம் எனது வழக்கில் நடந்தது. இது ஒரு அதிசய நிகழ்வு என்றுகூட சொல்லலாம். என்னை குற்றவாளி என நீதிமன்றம் தீர்மானிக்கக் காரணமாக இருந்தது எனது 'தடா' ஒப்புதல் வாக்குமூலம். இதை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு தண்டிக்கும் முறை என்பது நாகரிக சமூகம் ஏற்றுக் கொள்ளாத சட்ட நடைமுறையாகும். ஆனால், அந்த அநாகரிகம் எமது வழக்கில் நடந்தது. அந்த ஆவணம் நம்பகத் தன்மையற்றது என கடந்த 22 ஆண்டுகளாக நான் கதறி கூக்குரலிட்டேன். எவருமே அதனை காது கொடுத்து கேட்கத் தயாராக இல்லை. ஏனெனில், குற்றவாளி என நான் முத்திரைக் குத்தப்பட்டபின் எனது குரலுக்கு எந்த மதிப்பும் இருக்கவில்லை. ஆனால் அந்த ஆவணத்தின் நம்பகத்தன்மை குறித்து என்னை தவிர்த்து இன்னுமொரு மனிதர் மட்டுமே சான்று தர முடியும் என்பதை நான் நன்கு அறிவேன்.

அந்த மனிதர் - அந்த வாக்குமூலத்தை பதிவு செய்ததாக கூறப்படும் திருதியாகராசன். எங்கள் இருவர் தவிர்த்து அந்த ஆவணத்தின் நம்பகத் தன்மை குறித்து பேச யாருக்கும் தகுதியில்லை. இந்த நிலையில் கடந்த 22.4.2013 அன்று எனது சிறை முகவரிக்கு திருதியாகராசன் அவர்கள் ஒரு கடிதம் எழுதினார். சட்டரீதியாக எனக்கு உதவ விரும்புவதாக தெரிவித்திருந்தார். பின்னர் 'உயிர்வலி' ஆவணப் படத்தில் தனது கருத்தை பதிவு செய்து உலகின் முன் அதிர்ச்சி தரும் உண்மைகளை போட்டுடைத்தார்.

அவர் சொல்கிறார் - "அறிவு ஒரு நிரபராதி" என்று. இதை காலம் கடந்து சொல்வதால் வரும் சட்ட விளைவுகளை சந்திக்கவும் தயார் என்கிறார், இருந்தும் தற்போது நடைமுறையில் சட்டத்தில் இதுபோன்ற புதிய ஆதாரங்களை ஏற்றுக் கொள்வதில் பெரும் இடர்களை சந்திக்க வேண்டியுள்ளது. மற்றபடி சட்டம் ஏற்றுக் கொள்கிறதோ இல்லையோ திரு.தியாகராசன் அவர்களின் வாக்கு மூலத்திற்கு பின்பு உண்மைகளை மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

*அம்மா-மகன் உறவு, அதாவது பேரறிவாளன்-அற்புதம்மாள் உறவினை திரைப்படம் ஆக்குவதாக 'தேசிய விருது' இயக்குநர் ராம் அவர்கள் கூறியுள்ளது பற்றி?*

மிகவும் நெகிழ்ந்து போனேன். இயல்பாகவே ஒரு தாய்க்கும் மகனுக்குமான உறவு என்பது 'அற்புதமானது'. அதனை சிறந்த படைப்பாளியான அண்ணன் ராம் அவர்கள் பதிவு செய்வது - அந்த கதைக்கான மாந்தர்களாக என்னையும் எனது தாயாரையும் தேர்வு செய்து சொற்களால் விவரிக்க முடியாத மன நிறைவு தந்தது. எனது சிறிய வயதில் திரைப்படங்களில் வரும் சண்டைக் காட்சிகளை காண மிகவும் அஞ்சுவேன். எனவே எனது பெற்றோர், சகோதரிகளுடன் திரைப் படம் காண மறுத்து நண்பர்களுடன் விளையாடுவதுண்டு. 'மூன்றாம் பிறை' திரைப்படம்தான் முதன்முதலில் திரைப் படங்கள் மீதான என் பார்வையை - அச்சத்தைப் போக்கி, நேசிக்கக் கற்றுத் தந்தது. எனவே பெருமைக்குரிய இயக்குநர் அய்யா பாலுமகேந்திரா அவர்களின் குடும்பத்திலிருந்து வந்துள்ள அண்ணன் ராம் இப் பதிவினை - படைப்பினை மேற் கொள்வது மிகப் பொருத்தமே.



*சிறிய சிறிய தோல்விகளை தாங்கிக் கொள்ள முடியாத நிலையில் உள்ள இன்றைய இளைஞர்களிடையே தோல்விகளும், துரோகங்களும், நம்பிக்கை இழப்புகளையும் தாங்கிக் கொண்டு இன்றைய அளவிலும் வெற்றி பெறுவதற்காகப் போராடிக் கொண்டிருக்கிறீர்களே...*

உங்களின் இந்த மதிப்பீட்டிற்கு முதலில் நான் நன்றி கூறிக் கொள்கிறேன். உங்களின் கேள்வி அடிப்படையில் இரு கூறுகளைக் கொண்டுள்ளது. தோல்வி, துரோகம், நம்பிக்கை இழப்பு ஆகியவற்றை தாங்கிக் கொள்ளும் மனவலிமை குறித்து கேட்கிறீர்கள். அடுத்து இந்த துன்பங்களுக்கு இடையே - அவற்றை தாங்கிக் கொள்வதைத் தாண்டி, வெற்றி பெறுவதற்கான போராட்டம் குறித்தும் கேள்வி எழுப்புகிறீர்கள். இதற்கான விடையினை கூறுவது அத்தனை எளிதானது அன்று. காரணம் எனது வாழவு அத்தனை எளிதானது அன்று. காரணம் எனது வாழ்வு முழுவதும் பயின்ற கொள்கைகளும் பழகிய மனிதர்களும் குடும்பச் சூழலும் என பல்வேறு காரணிகள் இருக்கின்றன. தந்தை பெரியார், வள்ளுவர், புரட்சிக் கவிஞர் என தலைவர்கள் பலரின் தத்துவம் தந்த பக்குவம் இருக்கிறது. பலரிடம் நான் கற்றுக் கொண்டவை ஏராளம். இவை எல்லாவற்றையும் கடந்து - நீங்கள் குறிப்பிடும் மனவலிமையை 23 ஆண்டுகால தோல்விகள், துரோகங்கள், நம்பிக்கை இழப்புகள் ஆகியவற்றிலிருந்துதான் நான் அதிகம் பெற்றேன்.

*எந்த பேட்டியிலும் தவிர்க்க முடியாத அந்த கேள்வி இந்த பேட்டியிலும்... உங்கள் தாயாரின் கால்நூற்றாண்டு கால போராட்டம் குறித்து....*

மலைக்க வைக்கிறது. சி.பி.ஐ.யினரால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டதற்கு அடுத்த நாள் (12.06.1991) என்னை சந்திக்க எனது தாயார் 'மல்லிகை' அலுவலகம் வந்தபோது துவங்கியது அவரது பயணம். அந்தப் பயணம் இத்தனை நீண்டதாக இருக்கப் போகிறது என அப்போது அவரும் எண்ணியிருக்க மாட்டார் - நானும் கற்பனை செய்திருக்கவில்லை. அவரை சந்திக்க ஒவ்வொரு வியாழனன்றும் நான் தயாராகி செல்லும்போது வழியில் எதிர்ப்படும் சிறை ஊழியர்கள், "அறிவம்மா வந்துவிட்டார், அப்படியானால் இன்று வியாழக்கிழமை" என வேடிக்கையாகக் குறிப்பிடுவார்கள். அவரது தொடர்ச்சியான உறுதிமிக்க உழைப்பும், போராட்டமும்தான் எமது வழக்கிற்கான மக்கள் ஆதரவை, அரசியல் அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்தது. அந்த அர்ப்பணிப்பு நிறைந்த போராட்டத்திற் கான அங்கீகாரமாகத்தான் முதல்வர் அவர்களுடனான சந்திப்பு என கருதுகிறேன்.

*மரண தண்டனையை மறு ஆய்வுக்கு உட்படுத்துவது குறித்து நீதிபதி ஏபி ஷா தலைமையிலான சட்ட ஆணையம் மக்கள் கருத்தை கோரியுள்ளது. இது பற்றி?*

இத்தனை ஆண்டுகால மரண தண்டனைக்கு எதிரான போராட்டத்தில் மகிழ்ச்சியான தருணம் இது. அதிலும் தவறான தீர்ப்பினால் மரண தண்டனையை அடைந்துவிடும் வாய்ப்பு குறித்தும் சட்ட ஆணையம் ஆராய முன் வந்திருப்பது என்போன்ற நிரபராதிகளின் போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதுகிறேன். எனவே சட்ட ஆணையத்தின் முன்பு மரண தண்டனைக்கு எதிரான மக்கள் கருத்துகள் குவிய வேண்டும் என விரும்புகிறேன். இதற்கான வேண்டு கோளையும் 'அந்திமழை' மூலமாக விடுக்கிறேன். **நன்றி: 'அந்திமழை' மாத இதழ்**

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்நாட்டு மக்களைப் பிடித்துள்ள 'பேய்கள்'. அதேபோல சட்டசபை, பத்திரிக்கை, பார்ப்பான், தேர்தல், சினிமா இவை இந்நாட்டைப் பிடித்துள்ள அவ்வகை நோய்களாகும். என்ற கருத்தை விளக்கிப் பல மணி நேரம் விளக்கவுரை யாற்றி, அவர்களுக்குப் புதியதோர் உணர்வூட்டினார்' என்ற செய்தி வெளியாகி உள்ளது.

ஆனால் பெரியாரின் மறைவுக்குப் பின்னர் வெளியாகியுள்ள பதிப்புகளின் வாழ்க்கைக் குறிப்புகளில் "19-5-1962 ல் பக்கம் 262ல் வாழப்பாடியில் பெரியார் பேசும் போது, மூன்று 'பேய்கள்' பற்றியும், அய்ந்து 'நோய்கள்' பற்றியும் முதன் முதலில் பேசினார். எல்லோருக்கும் புதுமையாய்த் தோன்றிற்று பேய்கள் மூன்று : 1. கடவுள் 2. சாதி - மதம் 3. ஜனநாயகம்

நோய்கள் அய்ந்து : 1. பார்ப்பான், 2. பத்திரிக்கை, 3. அரசியல் கட்சி, 4. தேர்தல், 5. சினிமா என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

1959 பிப்ரவரியில் பம்பாயின் பல பகுதிகளில் விளக்கிப் பேசிய அதே மூன்று பேய்களையும், அய்ந்து நோய்களையும் மீண்டும் 1962 இல் முதல் முதலாக "பேசியிருப்பது"தான் எல்லோருக்கும் புதுமையாய்த் தோன்றுகிறது.

ஆனைக்கும் அடி சறுக்குமாம்!

இவர்களுக்கு அடிக்கடி சறுக்குமோ? **- தா.செ. மணி**

## மதமா அரசா?

அரசாங்கம், சட்டதிட்டம், நீதி நிர்வாகம், தண்டனை, கண்டனை இல்லாமல் மனித சமூகம் எப்படிப்பட்ட மதத்தினாலாவது கூடி ஒழுங்கு முறையுடன் வாழ முடியுமா என்பதை யோசித்தால், மதம் மேற்கண்ட காரியங்களுக்கு உண்மையாய்ப் பயன்படுகின்றதா என்பது விளங்கும், இன்று எந்தத் தேசத்திலும், எந்த மதத்திலும், எந்தச் சமூகத்திலும் உள்ள மக்களின் சொத்தும் சரீரமும் காப்பாற்றப்படுவது மதத்தினாலா, அரசாங்கச் சட்ட திட்டங்களினாலா என்பதை யோசித்துப் பார்த்தாலே, மதத்தின் காப்பும் நடப்பும் எப்படிப்பட்டது என்பது சுலபத்தில் புரிந்துவிடும்.

**'பகுத்தறிவு' தலையங்கம் 9.9.1934**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 19th June 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN

புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | ஜுன் 26, 2014 | புரட்சி 13 | முழக்கம் 24 | விலை: ரூ.3.00

# கோவையில் கூடிய கழக செயலவைக் கூட்ட முடிவுகள்

# ஜூலை 10இல் மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் முற்றுகை



1. கடந்த ஆட்சிக்காலங்களில் மறைமுகமாக நடந்துவந்த இந்தித் திணிப்பு - மோடி அமைச்சரவை பதவியேற்புக்குப்பின் - பிரதமருக்கான தொடர்பு மொழியாகவும், சமூக வலைத்தளங்களில் அரசுப் பயன்பாட்டு மொழியாகவும், புதிய வேகமெடுத்து நுழையச் செய்வதை திராவிடர் விடுதலைக்கழகம் வன்மையாகக் கண்டிப்பதோடு - இந்தியா என்ற அமைப்பு நீடிக்கும்வரை ஆங்கிலம் மட்டுமே அலுவல் மொழியாக நீடிக்கவேண்டும் என்று வற்புறுத்துகிறது.

2. மக்கள் எதிர்ப்புகளைப் புறந்தள்ளிவிட்டு - கூடங்குளத்தில் 1, மற்றும் 2 ஆவது அணு உலைகளைத் திணித்த மத்திய அரசு, பெருந் தொகை செலவிட்ட பிறகு திட்டத்தை முடக்க லாமா? என்று நியாயங் கற்பித்தது. இப்போது நிதியேதும் ஒதுக்கி செலவிடப்படாத நிலையில், 3 வது மற்றும் 4 வது அணுஉலைகளை நிறுவ - மோடி அமைச்சரவை மேற்கொள்ளும் முயற்சிகளை - தமிழக முதல்வர் உறுதியாகத் தடுத்து நிறுத்த முன்வர வேண்டும். என இச்செயலவை வலியுறுத்துகிறது. பெரும்தொகை முதலீடு செய்யப்பட்டதைக் காரணம் காட்டி 1 ஆவது மற்றும் 2 ஆவது அணுஉலைத் திட்டத்தை ஆதரித்து வந்த அரசியல் கட்சிகள் மற்றும் இயக்கங்கள் இந்த நிலையிலாவது தங்கள் முடிவுகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று - இச்செயலவை வலியுறுத்து கிறது.

3. காவிரி நடுவர் மன்றம், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படவேண்டும் என்பதை திட்டவட்டமாக வலியுறுத்தி வழங்கியிருந்த தீர்ப்பாணை - தமிழக முதல்வரின் இடைவிடாத முயற்சியால் மத்திய அரசின் அரசிதழில் வெளியிட்டு, சட்டப்பூர்வ ஏற்பு வழங்கப்பட்ட நிலையில், மோடி அரசு - இப் பிரச்சினையை கடந்தகால காங்கிரஸ் ஆட்சியைப் போல - கட்சி அரசியல் காரணங்களுக்காக மீண்டும் குழப்பிட முயல்வதை இச்செயலவை வன்மையாகக் கண்டிக்கிறது.

4. ஏற்கனவே, காவிரி நீரின்றி, வறண்ட பிரதேச மாகிவரும் காவிரிப் படுகையில், மற்றொரு பேரிடியாக - நிலத்தடி நீரை உறிஞ்சிடும் மீத்தேன் எரிவாயு எடுக்கும் திட்டம் அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. இத்தகைய ஆபத்திலிருந்து காப்பாற்ற - காவிரிப்பாசனப் படுகைப் பகுதியை பசுமை மண்டலமாக அறிவித்து - அந்தப் பகுதிகளில் வேளாண்மைக்கு ஊறுவிளைவிக்கும் எந்தத் திட்டத்தையும் அனுமதிக்கக்கூடாது என்று தமிழக அரசை இச்செயலவை வற்புறுத்து கிறது.

5. பெரும்பொருட் செலவில் நடத்தப்படும் ஆடம்பரத் திருமணங்கள் - போலி சமூகப் பெருமைக்காக, வீண் விரயங்களையும், குடும்பங் களின் பொருளாதார நெருக்கடிகளையும் உருவாக்கி வருகிறது. புரோகித மறுப்பு, சிக்கனத் திருமணங்களை நடத்துவதில் முன்னேடியாக விளங்கிய தமிழகத்தில் - கர்நாடக, கேரள மாநிலங்களில் அமுலில் உள்ளதைப் போன்ற ஆடம்பரத் திருமணங்களுக்கான வரிவிதிப்பு முறையைக் கொண்டுவர வேண்டும் எனவும், அதேபோல பகுத்தறிவுக் கருத்துக்களைப் பரப்புவதில் முன்னோடியாக விளங்கும் தமிழகத்தில், மகாராஷ்டிர அரசு கொண்டு வந்துள்ளதைப்போன்ற மூட நம்பிக்கை ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டுவரை வேண்டும் எனவும் தமிழக அரசை இச்செயலவை வலியுறுத்துகிறது.

6. மக்கள் சந்திப்பு இயக்கத்தில் தொடர்ந்து பங்கேற்றுவரும் தோழர்களுக்கும், இத் திட்டத்தை ஒருங்கிணைத்து முன்னெடுத்து வரும் கழகப் பொருளாளர் தோழர் இரத்தினசாமி அவர்களுக்கும் இச்செயலவை மனம் நிறைந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறது. மக்கள் பேராதரவு பெற்றுவரும் இந்த இயக்கத்தை ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது 5 நாட்கள் முதல் 10 நாட்கள் வரை தொடர்ந்து நடத்துவது என்றும் இந்த செயலவை முடிவு செய்கிறது.

7. ஒவ்வொரு மாதமும், மாவட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் - மக்கள் மேம்பாட்டு மனித நேய சிந்தனைகளோடு - பெண்ணுரிமை, அறிவியல் சிந்தனை வளர்த்தெடுத்தல் சமூகநீதி, மக்கள் மேம்பாட்டுக்கான ஆலோசனை போன்றவற்றை பெரியாரியல் பார்வையில் துண்டறிக்கைகளை வெளியிட்டும் மக்களை நேரில் சந்தித்து தேவையான உதவிகளைச்செய்து கடமையாற்றுவது என்றும்

(4 ஆம் பக்கம்)

## செயலவை நிக வுக

திராவிடர் விடுதலைக் கழக செயலவைக் கூட்டம் 21.6.2014 சனிக்கிழமை 11 மணியளவில் கோவை அண்ணாமலை ஓட்டல் அரங்கில் கூடியது. செயலவைத் தலைவர் துரைசாமி தலைமையேற்றார். கோவை கழகத் தோழியர் ராஜாமணி, கடவுள்-ஆத்மா மறுப்புகளைக் கூற, மாநகர மாவட்டச் செயலாளர் தோழர் நேருதாஸ் வரவேற்புரையாற்றிட பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தொடக்க உரை யாற்றினார். மாறி வரும் அரசியல் சூழலில் பெரியாரியலை முன்னெடுப்பதில் பின்பற்ற வேண்டிய அணுகுமுறைகளை விளக்கி, ஒரு மணி நேரம் பேசினார். கழகத்தின் நிதிநிலை மற்றும் மக்கள் சந்திப்பு இயக்கம் குறித்து பொருளாளர் ஈரோடு இரத்தினசாமி விரிவாக விளக்கினார்.

உரையாற்றிய தோழர்கள்: மண்டல செய லாளர்கள் சேலம்-சக்திவேலு, மதுரை-இராவணன், நெல்லை-குமார், தஞ்சை-இளையராசா, கோவை-விஜியன், ஈரோடு-இராம இளங்கோவன் ஆகியோர் உரையைத் தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி தீர்மானங்களை முன்மொழிந்து உரை யாற்றினார். 2 மணி வரை கூட்டம் நீடித்தது. மதிய உணவுக்குப் பிறகு மீண்டும் 3 மணிக்கு கூட்டம் தொடங்கியது. கீழ்க்கண்ட மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் உரையாற்றினர்:

சென்னை-ஜான், காஞ்சிபுரம்-தினேஷ், விழுப்புரம் -நாவாபிள்ளை, வேலூர்-திலீபன், தருமபுரி-பரமசிவம், நாகை-மகேஷ், திருவாரூர்-காளிதாஸ், தஞ்சாவூர்-பாரி, மதுரை-பாண்டியன், திண்டுக்கல்-நல்லதம்பி, திருப்பூர் மாநகர்-குமார், ஈரோடு வடக்கு-நாத்திக ஜோதி, ஈரோடு தெற்கு-(ஆசிரியர் சிவக்குமார்) சென்னிமலை செல்லப்பன், சேலம் கிழக்கு-டேவிட், சேலம் மேற்கு-சூரியக் குமார், கோவை மாநகர்-கிருட்டிணன், கோவை புறநகர்-மேட்டுப்பாளையம் இராமச் சந்திரன், பொள்ளாச்சி-விஜய ராகவன், திருச்சி-ஆரோக்கியசாமி, கரூர்-பாபு, காஞ்சிபுரம்-வெங்கடேசன், பொள்ளாச்சி-நிர்மல் குமார். விழுப்புரம்-இரத்தினவேலு.

தொடர்ந்து மாணவர் கழகம் சார்பில் பா.சிவக்குமார், சிலம்பரசன், சுயமரியாதைக் கலைப் பண்பாட்டுக் கழகம் சார்பில் கொளத்தூர் குமார், அ.பா.சிவா, அறிவியல் மன்றம் சார்பில் ஆசிரியர் சிவகாமி, ஆசிரியர் சிவக்குமார், வீதி நாடகக் குழு சார்பில் அர்ஜுனன் ஆகியோர் உரையைத் தொடர்ந்து, கழகப் பொருளாளர் ஈரோடு ரத்தினசாமி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர். இரவு 7.30 மணி வரை கூட்டம் நீடித்தது. வீர பாண்டி பாபு நன்றி கூறினார்.

கோவை மாநகர மாவட்டக் கழகம் சிறப்பான ஏற்பாடுகளை செய் திருந்தது.

**தலையங்கம்**

## ‘இருக்கின்றாய், இதயமாக!’

இதயத்தின் துடிப்புக்கு ஜாதி கிடையாது, மதம் கிடையாது, ஆண்-பெண் பாகுபாடு கிடையாது. தேசம்-மொழிகளையும் கடந்து நிற்கிறது. இந்த உடலின் இயக்கம்; மனித உடலும், உடல் இயக்கமும் வெளிப் படுத்தும் ஒரே அடையாளம் மனிதர்கள் என்ற ஒன்றை மட்டும்தான்.

27 வயதே நிறைந்த இளைஞன் லோகநாதன் சாலை விபத்துக்குள்ளாகி அவரது மூளையின் இயக்கம் மரணித்துவிட்ட நிலையில் இதயம் மட்டும் உயிர்ப்புடன் துடித்தது. அதே நேரத்தில் அடையாறு தனியார் மருத்துவமனை ஒன்றில் இதயப் பாதிப்புக்கு உள்ளான மும்பையைச் சார்ந்த அலோவி என்ற 27 வயது பெண்ணுக்கு மாற்று இருதயம் ஒன்று கிடைத்துவிட்டால் உயிர் பிழைத்துவிட முடியும்! மரணத்தைத்தழுவிவிட்ட தனது மகனின் இருதயம் வேறு ஒரு உடலில் துடித்துக் கொண்டிருக்குமானால் – அன்பு மகனின் மறக்க முடியாத நிலைத்த நினைவாக இருக்குமல்லவா? அப்படி ஒரு அறிவார்ந்த முடிவுக்கு வந்தார் அந்தத் தாய். அவர் அரசு மருத்துவமனையில் செவிலியர். பெருமைக்குரிய அவரது பெயர் இராஜலட்சுமி. துடிக்கும் இருதயத்தை ஆம்புலன்சில் சுமந்து கொண்டு 11 கிலோ மீட்டர் தூரத்தை, 11 போக்குவரத்து ஒழுங்குமுறைக் கருவிகள், 6 வேகத் தடைகளைக் கடந்து 13 நிமிடம் 22 நொடிகளில் பாதுகாப்பாகக் கொண்டுவந்து சேர்த்தார் – ஆம்புலன்சின் ஓட்டுனர் கதிர். போக்குவரத்தை ஒழுங்கு செய்ய காவல்துறையும் மனிதாபிமானம் காட்டி செயல்பட்டது. துடிப்பு அடங்குவதற்குள் இருதயம் வந்து சேர்ந்து விடுமா என்று துடிக்கும் இதயங்களோடு அந்த மருத்துவமனை வாயிலில் காத்திருந்த மருத்துவர்களுக்கு கிடைத்தது நிம்மதி பெருமூச்சு! அந்தப் பெண்ணுக்கு மாற்று இருதயம் கிடைத்தது; அவர் உயிர் பெற்றார்.

“எங்களுடைய மகாராஷ்டிரா மாநிலத்தில் இது குறித்த விழிப்புணர்வு எதும் இல்லை. தமிழ்நாட்டில்தான் இவை எல்லாம் அதிகம் நடக்கின்றன” என்று பெருமையுடன் கூறினார், அந்தப் பெண்ணின் தாயார்.

உடல் உறுப்புகளையும், உடல் குருதியையும் பரிமாறிக் கொள்ள மனித உடல்கள் தயாராகவே இருக்கின்றன. ஆனால், மனிதர்கள்தான் மதங்களால், ஜாதிகளால், இனப் பாகுபாடுகளால் மக்களைப் பிரித்துக் கூறு போடுகிறார்கள்.

மனித உடலின் தலை, தோள், தொடை, கால்களைப் பிரித்துப் போட்டு, அவற்றை பிறப்பு உறுப்புகளாக கற்பனை யாக்கி, அதிலிருந்து ‘ஜனித்து’ வருவதாக மானுடர்களை மனுதர்மக் கூண்டுக்குள் அடைத்து வைத்து அடைகாத்து நிற்கிறார்கள். அதுவே மதம்; ஆச்சாரம் என்று கதைக்கிறார்கள்!

“ஓ, மானுடத்தை வதைக்கும், மாபாதகர்களே! மனித நேயத்தின் பண்புகளை எப்போதுதான் நீங்கள் அரவணைக்கப் போகிறீர்கள்? மனித உடலுக்கு பூணூல், விபூதி, நாமம், சிலுவை, குல்லாய் என்ற மத அடையாளங்களைத் திணித்து, ஏன் மானுடத்தைச் சிதைக்கிறீர்கள்?

மனித உடல்களை ஜாதி, மதம் என்ற மோதல் களங்களில் இறக்கி, மோதவிட்டு அதுவே கடவுளின் சித்தம் என்று ஏன் கதை விடுகிறீர்கள்?”

உண்மையான சமத்துவத்தை வேண்டி நிற்கும் மனிதர்களின் ஏக்கப் பெருமூச்சாக, இந்தக் கேள்விகள் வெடித்து நிற்கின்றன.

உண்மைதான்! உடல் உறுப்புகளை கொடையாக வழங்குவதில் இந்தியாவிலேயே முதலிடத்தில் நிற்பது தமிழகம்தான் என்ற செய்தி தமிழர்களுக்குப் பெருமை சேர்க்கிறது. தமிழகத்தில் இப்படி உறுப்புகளை கொடையாகப் பெற்றவர்கள் எண்ணிக்கை இதுவரை 2649 என்று புள்ளிவிவரம் கூறுகிறது. இதில் மூளைச் சாவுக்குள்ளாகி உடல் உறுப்புகளை கொடையாக்கியவர்கள் எண்ணிக்கை மட்டும் 483. நாம் தலைநிமிர்ந்து பெருமைப் படலாம்.

தமிழர்களின் பண்பாட்டுப் பெருமையும் இனத்துக்கான விழுமியங்களும் இப்படித்தான் இருக்க வேண்டும்! மாடுகளோடு முட்டி மோதுவதில் எங்கள் பழம் பெருமை பதுங்கியிருக்கிறது என்பதைவிட மாற்று இதயங்களை வழங்குவதில் நாங்கள் முதலிடத்தில் இருக்கிறோம் என்று மார்தட்டுவதில்தான் தமிழனுக்குப் பெருமை!

பண்பாட்டுக்கான விழுமியங்களை சமூக நாகரிகம், சமத்து நோக்கோடு வரையறுத்துக் கொள்ள நாம் தயாராக வேண்டும்! இதை உரத்துக் கூறுவோம்!

பெரியார் கூறுகிறார்:

*“ஒரு மனிதன் வாழ்க்கை இலட்சியம் எதுவாக இருக்கவேண்டும் என்றால், அவன் எந்த மனிதச் சமுதாயத்தின் வாழ்வில், நடப்பில், தன்மையில் கலந்து வாழுகின்றானோ அந்தச் சமுதாயத்தின் பொது நன்மைக்கு ஆனகாரியம் செய்வதும் அந்தச் சமுதாயம் புகழக் கூடியதான நலம் செய்வதும் ஆக இருக்க வேண்டும்.”* (‘விடுதலை’ 10.9.53)

# கழகத் தலைவர், பொதுச் செயலாளர் பங்கேற்கும் மாவட்டக் கலந்துரையாடல்-பொதுக் கூட்டங்கள்

**மாவட்டக் கலந்துரையாடல் கூட்டங் களையும் தீர்மானங்களை விளக்கி பொதுக் கூட்டங்களையும் கீழ்க்கண்ட திட்டப்படி நடத்திட கோவையில் கூடிய கழக செயலவை முடிவு செய்தது.**

15.7.14 செவ்வாய் - திண்டுக்கல்-தேனி

பழனி - 16.7.14 புதன் - சிவகங்கை - காரைக் குடி

17.7.14 வியாழன் - மதுரை - மதுரை

18.7.14 வெள்ளி - தூத்துக்குடி-நெல்லை-குமரி-திருநெல்வேலி

19.7.14 சனி - திருச்சி - திருச்சி

20.7.14 ஞாயிறு - புதுக்கோட்டை - கறம்பக்குடி

23.7.14 புதன் - திருவாரூர் - மன்னார் குடி

24.7.14 வியாழன் - நாகை - மயிலாடுதுறை

25.7.14 வெள்ளி - புதுச்சேரி - புதுச்சேரி

26.7.14 சனி - விழுப்புரம் - கள்ளக் குறிச்சி

27.7.14 ஞாயிறு - திருவண்ணாமலை - திருவண்ணாமலை

30.7.14 புதன் - காஞ்சிபுரம் - காஞ்சிபுரம்

31.7.14 வியாழன் - சென்னை - சென்னை

1.8.14 வெள்ளி - வேலூர் - வேலூர்

2.8.14 சனி - தருமபுரி-கிருட்டிணகிரி - கிருட்டிண கிரி

3.8.14 ஞாயிறு - சேலம் மேற்கு - மேட்டூர்

6.8.14 புதன் - சேலம் கிழக்கு - ஆத்தூர்

7.8.14 வியாழன் - பெரம்பலூர் - பெரம்பலூர்

8.8.14 வெள்ளி - கரூர் - கரூர்

9.8.14 சனி - நாமக்கல் - திருச்செங்கோடு

10.8.14 ஞாயிறு - ஈரோடு தெற்கு - ஈரோடு

13.8.14 புதன் - ஈரோடு வடக்கு - கோபிச் செட்டிபாளையம்

14.8.14 வியாழன் - கோவை புறநகர் - மேட்டுப்பாளையம்

16.8.14 சனி - கோவை மாநகரம் - கோவை

17.8.14 ஞாயிறு-பொள்ளாச்சி-பொள்ளாச்சி

18.8.14 திங்கள் - திருப்பூர் - பல்லடம்

# ஜாதி-மத மறுப்புத் திருமணங்களுக்கு பாதுகாப்பு தர உச்சநீதிமன்றம் ஆணை

ஜாதி-மத மறுப்புத் திருமணங்களுக்கு ஆட்சி உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பாக 2006 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை வழங்கியிருந்தது. “ஜாதி மறுப்புத் திருமணங்கள் தேசத்தின் நலனைக் காப்பதாகும். காரணம், ஜாதி மறுப்புத் திருமணங்களே. ஜாதி அமைப்பை அழிக்கக் கூடியவை” என்று கூறிய உச்சநீதிமன்றம், உ.பி. மாநில ஆட்சிக்கு நிரந்தரமான ஒரு உத்தரவைப் பிறப்பித்திருந்தது. வயது வந்த ஒரு ஆணும் பெண்ணும் வெவ்வேறு ஜாதி மதங்களுக்குள் திருமணம் செய்து கொள்வார்களேயானால், அவர்களுக்கு உரிய பாதுகாப்புத் தருவதும், அச்சுறுத்தலிலிருந்து தடுப்பதும் ஆட்சியாளர்கள், காவல்துறையின் கடமை என்று உச்சநீதிமன்றம் அந்தத் தீர்ப்பில் கூறியிருந்தது.

லதாசிங் என்ற பெண், உ.பி. அரசுக்கு எதிராக தொடர்ந்த வழக்கு இது. 8 ஆண்டுகளுக்குப் பிறகு, ஜாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்ட ஒரு இணையர், மேற்குறிப்பிட்ட தீர்ப்பின் அடிப்படையில் தங்களுக்கு பாதுகாப்புக் கோரி உச்சநீதிமன்றத்தை நாடினர். கடந்த ஏப்.17 ஆம் தேதி, ‘ஆரிய சமாஜ் மண்டலில்’ இந்த காதலர்கள் ஜாதி மறுப்பு திருமணம் செய்து கொண்டனர். திருமணத்துக்குப் பிறகு தங்களது மகளை கடத்திச் சென்று விட்டதாக பெண்ணின் பெற்றோர் கணவர் மீது புகார் தந்தவுடன், இணையர் உச்சநீதிமன்றத்தை நாடினர். வழக்கை விசாரித்த நீதிபதிகள், ஜே.எஸ்.சேகர், சி.நாகப்பன் அடங்கிய அமர்வு, அடுத்த 3 மாத காலத்துக்கு பாதுகாப்பு தரவேண்டும் என்று உ.பி. அரசுக்கு உத்தரவிட்டுள்ளதோடு, ஏதேனும் ஆபத்து வருமானால், இணையர், அலகாபாத் உயர்நீதிமன்றத்தை அணுகலாம் என்று உத்தரவிட்டுள்ளது.

# மேட்டூர் பெரியார் படிப்பகத்தில் சுயமரியாதை மணவிழா

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், ஆலமரத்துப்பட்டி கிராமம், கொளத்தூர் சித்திரப்பட்டி புதூர் ஊரைச் சேர்ந்த எம். ஈசுவரன்-வி.சரஸ்வதி ஆகியோரின் மகன் ஈ.சக்திவேல் என்பவருக்கும், நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், குமாரப்பாளையம், புத்தர் தெருவைச் சேர்ந்த எல்.கே. வெங்கடேசன்-வி.விமலா ஆகியோரது மகளுக்கும் 12.6.2014 அன்று காலை 11 மணியளவில் மேட்டூர் தந்தை பெரியார் படிப்பகத்தில் சுயமரியாதைத் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது.

இந்தத் திருமணத்தை சேலம் மேற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக மாவட்ட அமைப்பாளர் த.சி. டைகர் பாலன் தலைமையில், மாவட்ட அமைப்பாளர் அ.அண்ணாதுரை, கொளத்தூர் நகர பொருளாளர் துரை. சுந்தரம் ஆகியோர் முன்னிலை யிலும் நடத்தி வைக்கப் பட்டது.



சுயமரியாதை திருமணம் செய்து கொண்ட மண மக்கள் கழகத் தலை வர் கொளத்தூர் மணியை சந்தித்து வளர்ச்சி நிதியாக ரூ5000 வழங்கினர்

# பெரியாருக்கு எதிரான 'முன்னோடி-பின்னோடி' வாதங்களுக்கு விளக்கம்-மறுப்பு

## 'கண்டதைப் படிப்பவன்'

கொஞ்ச காலமாகவே பெரியார் மீது பல்வகை திறனாய்வுக் கணைகள் தொடர்ந்து வீசப்பட்டு வருகின்றன. தூற்றுதலாக இல்லாமல் திறனாய்வாக வந்தால் வரவேற்க வேண்டியது தான்; திறனாய்வு உள்நோக்கமின்றி வந்தால் வரவேற்க வேண்டியது தான்; உள்நோக்கத்தோடு வந்தாலும் ஆதாரத்தோடு இருந்தால் வரவேற்கவேண்டியது தான்.

என்ன காரணத்தாலோ, பெரியாருக்குத் தமிழ்ச் சமூகம் அளித்து வந்துள்ள இடத்திலிருந்து அவரைப் பலவந்தமாக, தந்திரமாக, சூழ்ச்சியாக எப்படியாவது இறக்கிட வேண்டுமென பலர் முயற்சியாய் முயற்சிக்கின்றனர்; பலபட எழுதுகின்றனர்.

அவற்றில் ஒன்றாக, "தமிழ்த் தேசியத் தமிழர் கண்ணோட்டம்" இதழில் 2014 மே -15 இதழில் ஒரு பதிவினைப் படித்தேன்; தோழர் பெ.மணியரசன், தஞ்சை முள்ளிவாய்க்கால் முற்றத்தில் 19-04-2014 அன்று நடந்த 5ஆவது உலகத் தமிழ்ப் பொது மாநாட்டில் ஆற்றிய உரையே அது.

அவ்வுரையில் தோழர் மணியரசன் மூன்று செய்திகளை முன்வைக்கிறார்.

1. "1916ஆம் ஆண்டு மறைமலை அடிகள் தொடங்கிய 'தனித் தமிழ் இயக்கம்' தமிழர் வாழ்வியல், சடங்குகள் ஆகியவற்றிலிருந்து சமஸ்கிருதத்தையும், ஆரியப் புரோகிதர்களையும் நீக்குவதையும் வலியுறுத்துகிறது. தமிழில், தமிழர்களைக் கொண்டு குடும்பச் சடங்குகளையும், ஆன்மீக நிகழ்வுகளையும் நிகழ்த்திக் கொள்ள வேண்டும் என்று மறைமலை அடிகள் வலியுறுத்தினார்.

   அரசியல் இயக்கங்கள் செயல்படும் காலம் வந்த பின், பெரியார் பார்ப்பனிய எதிர்ப்பைப் பெரும் வீச்சில் கொண்டு சென்றார். பட்டி தொட்டி எங்கும் பார்ப்பனிய ஆதிக்க எதிர்ப்பு பரவியது. **இதற்கெல்லாம் முன்னோடியாக, அடித்தளம் அமைத்தோர்களாக தமிழரறிஞர்கள் இருந்தார்கள்** என்பதை இன்றையத் தமிழுணர்வாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும்."

2. "தனித் தமிழ் நாட்டிற்கான முதற்குரல் கொடுத்தவர்கள் தமிழறிஞர்கள். இக்குரல் அறிஞர்கள் குரலாக மட்டும் சுருங்கி விடாமல் அதனை மக்கள் குரலாக பரப்பியவர் பெரியார்."

3. "1937 இல் சென்னை மாகாண முதலமைச்சராக ஆனவுடன் இராஜாஜி 1938 இல் ஒரு பகுதி பள்ளிக் கூடங்களில் வெள்ளோட்டமாக இந்தியைக் கட்டாயப் பாடமொழி ஆக்கினார் (இந்தியைக் கட்டாயப் பாடமாக்கினார் என்பதே சரி) அந்த இந்தித் திணிப்பைத் தமிழறிஞர்கள் எதிர்த்தனர். இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் பெரியார் கலந்து கொண்டு முன்னெடுத்த பின் அது பெரும் வீச்சைப் பெற்றது."

டும்.. டும்.. டும்.. இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால், பார்ப்பன விலக்கானாலும், சமற்கிருத விலக்கானாலும், இந்தி எதிர்ப்பானாலும், தனித் தமிழ் நாடானாலும் தமிழறிஞர் களே முன்னோடி; பெரியார் பின்னோடியேதான். டும்... டும்... டும்...

முதல் செய்தியான பார்ப்பன விலக்கு குறித்து பார்ப்போம்.

1916 இல் 'தனித் தமிழ் இயக்கம்' தோன்றிய காலத்திலேயே பார்ப்பன விலக்கை அதாவது மணியரசனார் மொழியில் ஆரியப் புரோகிதர் விலக்கு தொடங்கிவிட்டது என்பது உண்மையா?

வாழ்வியல் நிகழ்வுகளில் முதலில் பார்ப்பன புரோகிதர்கள் நீக்கம், பின்னர் சமற்கிருத மந்திரங்கள் நீக்கம் என்பதாக பெரியார் தொடங்கியது 1926 இல் தான்; அப்படித் தான் அவரது 'குடிஅரசு' ஏட்டுப் பதிவுகளும் கூறுகின்றன.

அதே 'குடிஅரசு' ஏட்டின் 11-9-1927 நாளிட்ட இதழில் 'நெற்றிக் கண்ணை காட்டினாலும் குற்றம் குற்றமே!' என்ற தலைப்பில் சிறு குறிப்புரை ஒன்று வெளியாகியுள்ளது. "சுவாமி வேதாச்சலம் அவர்கள் (மறைமலை அடிகள்) அருமை குமார்த்திக்கும் நமது நண்பர் திருவரங்கம் பிள்ளை அவர்களுக்கும் நடந்தேறிய திருமணச் சடங்கானது தமிழ் மக்களையே குழப்பத்தில் கொண்டுவந்து விட்டது" என்று தொடங்கும் அந்த குறிப்பு, அடிகளார் வீட்டுத் திருமணம், பார்ப்பனர்களை வைத்தே நடந்துள்ளதை சுட்டிக்காட்டுகிறது; 'குடிஅரசு' தரும் குறிப்பு இது.

"சுவாமி வேதாச்சலம் அவர்களும், திருவாளர் கா.சுப்பிரமணியப் பிள்ளை அவர்களும் தமிழ் நாட்டிலேயே தமிழ் மக்களின் பழைய நாகரிக விஷயமாய் தக்க ஆராய்ச்சி உள்ளவர்கள். ஏனையவர்களை இவர்களுக்கு சமமானவர்கள் அல்லது இவர்களுக்கு அடுத்தவர்கள் என்று சொல்ல வேண்டுமேயல்லாமல் இவர்களுக்கு மீறினவர்கள் என்று சொல்ல முடியாது என்பது நமது அபிப்பிராயம். இப்படிப்பட்ட இரு ஞானபாஸ்கரர்கள் (அறிவுச் சுடர்கள்) கூடிச் செய்தத் திருமணம் பார்ப்பனீயத் திருமணமாய் நடந்தேறிற்றென்றால் மற்றவர்கள் எவ்வளவு தூரம் பார்ப்பனியத்திற்கு உயர்வு கொடுக்க மாட்டார்கள்! உயர்வு கொடுக்க விரும்பார்களா என்பதை யோசிக்கும்படி அவர்களுக்கே விட்டு விடுகிறேன். இதற்கு ஏதாவது தகுந்த சமாதானம் இவர்கள் சொல்லாத வரையில் திருத்த முடியாத குற்றமாவதோடு மக்களுக்குக் குழப்பமும் நமது முயற்சிக்கு இடையூறும் ஏற்படும் என்பதையும் வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்" என்று பெரியார் எழுதியுள்ளார்.

பெரியார் சுயமரியாதை இயக்கம் வாழ்வியல் நிகழ்வுகளில் புரோகிதர்களை நீக்க வேண்டும் என்ற இயக்கத்தைத் தொடங்கி நடத்திக் கொண்டிருக்கும் போது மறைமலை அடிகளார் தனது மகள் திருமணத்தை பார்ப்பனரை வைத்து (மணியரசன் மொழியில் ஆரிய புரோகிதர்களை வைத்து) நடத்தியிருக்கிறார். மறைமலை அடிகளாரின் இந்தச் செயல் 'பார்ப்பன புரோகித விலக்கு' இயக்கத்துக்கு பின்னடைவையும் குழப்பத்தையும் ஏற்படுத்தி விடாதா என்ற கவலையோடு பெரியார் சுட்டிக் காட்டுகிறார்.

இத் திருமணத்தின் மணப்பெண், மறைமலையடிகளின் (அவரது இயற்பெயர் சுவாமி வேதாச்சலம் ஆகும்) மூத்த மகள் நீலாம்பிகை ஆவார்.

மறைமலை அடிகளார் தனது மகளுக்குத் தேர்ந்தெடுத்த மணமகன் வ.திருவரங்கம் பிள்ளை. இவரும் இவரது உடன் பிறந்தாராகிய வ.சுப்பையா பிள்ளையும் தென்னிந்திய சைவ நூற்பதிப்புக் கழகத்தை உருவாக்கியவர்கள். 'திராவிடன்' முதலிய ஏடுகள் சைவ சமயத்தைக் கண்டிக்கும் வியாசங்களை உடன்பட்டு வெளியிடுவதைக் கண்டித்ததோடு, அதனை எதிர்கொள்வதற்கான செயல் திட்டம் ஒன்றையும் முன்வைத்து, அச்செயல் திட்டத்திற்குத் தக்க வடிவம் கொடுப்பதற்குச் "சைவ மகாநாடு" ஒன்று கூட்டவேண்டுமென்று (அதாவது பெரியாரைக் கண்டித்து..) 25-9-1928 அன்று "சைவ மக்களுக்கும், சைவ மடாதிபதிகளுக்கும் ஓர் விண்ணப்பம்" வெளியிட்டனர் என்பது ஒரு தனி செய்தி.

'நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே' என்ற கட்டுரைக்கு பதிலாக அடுத்த வார 'குடிஅரசு' (18-9-1927) இதழில் (9 ஆம் பக்கத்தில்) 'திருவரங்கம் பிள்ளை திருமணம்' என்ற தலைப்பில் "ஒரு பொறுப்புள்ளவர் எழுதுவது" எனக் குறிப்பிட்டு சமாதானம் கூறும் ஒரு கடிதம் வெளியாகியுள்ளது.

மறைமலையடிகளார், பார்ப்பனர் புரோகிதரை தனது வீட்டுத் திருமணத்துக்கு அழைத்ததை நியாயப்படுத்தி, அந்தத் திருமணத்துக்குச் சென்று வந்த ஒருவர் தந்த இந்த விளக்கம் இது; அதையும் 'குடிஅரசு' ஏட்டில் பெரியார் பதிவு செய்திருக்கிறார். கோயில்கள் எல்லாம் தமிழர்களுக்கே உரிமையானவை; அந்தக் கோயிலில் பூசனை நடத்தும் பார்ப்பன புரோகிதர்கள் ஆதி சைவர்கள். அவர்களும் தமிழர்களின் ஒரு பகுதியினர் தான். அந்தக் கண்ணோட்டத்தோடுதான் மறைமலை அடிகளார் மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயில் பார்ப்பன அர்ச்சகரை அவர் ஆதி சைவர் (தமிழர்) என்பதாலும், தம்மிடம் பயின்ற மாணவர் என்பதாலும் திருமணத்தை நடத்தி வைக்க அழைத்திருக்கிறார். ஆனால் மற்றொரு சைவத் தமிழ் அறிஞரான கா.சுப்ரமணியம் பிள்ளைக்கு பார்ப்பனரை வைத்து திருமணம் நடத்துவதில் உடன்பாடு இல்லை. அவர் திருமணத்துக்கு நெல்லை யிலிருந்து வந்து சேருவதற்குத் தாமதமாகிவிட்டது. தாலி கட்டும் நேரத்தில்தான் வந்து சேர்ந்தார். முன் கூட்டியே வந்திருந்தால் தமது கருத்தை மறைமலையடிகளிடம் எடுத்துக் கூறியிருந்திருப்பார். அதே நேரத்தில்,

பார்ப்பனரை தமிழர்கள், ஆதி சைவர்கள் என்று மறைமறையடிகள் கருதுவதை கா.சுப்ரமணியப் பிள்ளை ஏற்கவில்லை. அவர்கள் தங்களை தமிழர்களாக ஒன்றிணைத்துச் செயலாற்றும் வரை இப்படி திருமணங்களுக்கு பார்ப்பனரை அழைப்பது தவறு என்பதே கா.சுப்ரமணியபிள்ளை கருத்து. அவரது ஒப்புதலுடனேயே இதை எழுதுகிறோம் என்று திருமணத்துக்கு சென்று வந்தவர் 'குடிஅரசு' பத்திரிகையில் சமாதானம் கூறுகிறார். 'குடிஅரசு' ஏட்டில் வெளிவந்த அந்த விளக்கம் இதோ:

"பண்டை நூலாராய்ச்சியால் தமிழர்க்கே கோயில்களுரியனவென்றும், ஆதி சைவக் குருக்கள் தமிழரின் ஒரு பகுதியார் என்று கருதியே மயிலைத் திருக்கோயில் (மயிலாப்பூர் கபாலீசுவர் கோயிலில்) பூசனை புரியும் தமது ஆதிசைவ மாணவரை தமது புதல்வி திருமணத்தின் போது ஒரு கருவியாக மறைமலை அடிகள் கொண்டார் என்று புரிந்து கொள்ள வேண்டும்" என்பதாக எழுதியிருப்பதோடு " நம்மவர் மணங்களை நம்மவர் வாயிலாகவே நடத்த வேண்டுமென்ற கருத்துக் கொண்ட திருவாளர் கா.சுப்பிரமணியம் பிள்ளை முதலியவர்கள் திருமங்கல நாண் பூட்டுஞ் சமயத்திலேதான் நெல்லையிலிருந்து வந்து அதனைக் கண்ணுற்றமையால் மறைமலை அடிகளுக்குத் தங்கள் கருத்தைத் தெரிவிக்க சமயம் வாய்க்கப் பெற்றிலர்.

ஆதி சைவ மரபினர் தமிழருடன் மனமியைந்து வந்து சேருவார்கள் என்பதற்கும் போதிய சான்றுகள் காணும் வரை **இத்தவறு** பிற திருமணங்களிலும் நிகழவொட்டாது செய்வது நமது கடமையென்று திருவாளர் கா.சுப்பிரமணிய பிள்ளை முதலியவர்கள் உணருகிறார்கள்" என இக்கடிதம் எழுதப்பட்டுள்ளது.

அதற்குக் கீழே ஆசிரியர் குறிப்பாக "திரு கா.சுப்பிரமணியம் பிள்ளை அவர்கள் சம்மதத்தின் பேரிலேயே இது பிரசுரிக்கப்பட்டது. எனவே, இது விஷயம் இத்துடன் முடிவு பெற்றது" என்று இந்தப் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார் பெரியார்.

நீலாம்பிகை-திருவரங்கம் பிள்ளை திருமணத்தைத் தொடர்ந்து பெரியார்-மறைமலை அடிகள்-கா.சுப்ரமணிய பிள்ளை (கா.சு.பிள்ளை) போன்றோரின் சந்திப்பொன்று 'திருமண முறை' குறித்து விரிவாக ஆராய நடந்துள்ளது.

இது குறித்தப் பதிவொன்று 26-2-1928 நாளிட்ட 'குடிஅரசு' இதழில் (13ஆம் பக்கத்தில்) காணக் கிடக்கிறது.

'தமிழில் புரோகிதம் வேண்டும்' என்ற தலைப்பில் மதுரை அ.சொ.அருணாசலன் என்பவரால் அது எழுதப்பட்டிருக்கிறது.

அதில் "சென்னையில் சில மாதங்கட்கு முன்னால் இது விஷயமாக திருவாளர்கள் சிங்காரவேற் செட்டியார் அவர்கள், அட்வகேட் கா.சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், சுவாமி வேதாசலமவர்கள், திரு. கஜேந்திர முதலியாரவர்கள், ஈ.வெ. ராமசாமி நாய்க்கரவர்கள் எல்லோரும் கூடிப் பேசினார்களே ஒழிய இது சம்பந்தமாக முயற்சி எடுத்துக் கொண்

(4 ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION 25.06.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# கார்த்திகேயன்—கல்பனா ஜோதி மணவிழா



25-05-2014 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12-00 மணியளவில், புதுக்கோட்டை மாவட்ட கழக அமைப்பாளர் பூ.கார்த்திகேயன் சு.கல்பனாஜோதி ஆகியோரது வாழ்க்கை இணை ஏற்பு விழா நடைபெற்றது. புதுக்கோட்டை மாவட்டம், சுக்கிரன் விடுதி முல்லை விழா அரங்கில் நடைபெற்ற இந்த நிகழ்வில் திருவாரூர் மாவட்ட அமைப்பாளர் மன்னார்குடி காளிதாசு வரவேற்புரை ஆற்றினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி விழா விளக்க உரை ஆற்றி வாழ்க்கை இணை ஏற்பு ஒப்பந்தத்தை நடத்தி வைத்தார். கழகப் பரப்புரை செயலாளர் பால்.பிரபாகரன், திருச்சி மண்டல செயலாளர் த.புதியவன் முதலானோர் வாழ்த்துரை வழங்கினர். தஞ்சை மாவட்ட அமைப்பாளர் பட்டுக் கோட்டை பாரி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆9941613535

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இச்செயலவை முடிவு செய்கிறது. இதற்கு அந்தந்த மாவட்டத் தலைவர்கள் பொறுப்பேற்று மாதந்தோறும் அறிக்கையினை கழகத் தலைவருக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று இச்செயலவை கேட்டு கொள்கிறது.

8. தொடர்வண்டித் துறை, சுங்கத் துறை, வருமான வரித் துறை போன்ற தமிழ்நாட்டில் உள்ள மத்திய அரசு அலுவலகங்களில் கடந்த ஐந்து ஆண்டுகளாக தமிழகத்தைச் சார்ந்தவர்கள் 10 விழுக்காட்டிற்கும் குறைவாகவே பணி நியமனம் பெற்று வருகிறார்கள் என்பது அதிர்ச்சியைத் தருகிறது. வடமாநிலத்தவர்களின் துறையாகவே இந்தத் துறைகள் மாறி வருவதற்குக் காரணம் - மண்டல வாரியாக நடத்தப்பட்டுவந்த பணியாளர் தேர்வுமுறையை, அகில இந்திய அளவிலான பணியாளர் தேர்வாக மாற்றி 2006 ஆண்டில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பாகும். மண்ணின் மைந்தர்களைப் புறம்தள்ளும் இந்தத் தேர்வு முறையில் மத்திய அரசின் நிர்வாக அமைப்பு களும் நெருக்கடிக்கு உள்ளாகி வருகிறது. இந்த அநீதியை மாற்றி அமைக்கும் சட்டத்திருத்தத்தை மத்திய அரசு கொண்டு வர வேண்டும் என்றும் மாநில அடிப்படையிலேயே பணியாளர் தேர்வு மய்யங்கள் அமைக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தி, வரும் 10.7.2014 அன்று சென்னை மத்திய அரசு பணியாளர் தேர்வு ஆணையத்தை முற்றுகையிடும் போராட்டத்தை ஒத்த கருத்துள்ள அமைப்புகள் - இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பாக நடத்துவது என்றும் இச்செயலவை தீர்மானிக்கிறது.

9. மதவெறி, ஜாதிவெறியின் ஆபத்துக்கள், உலக மயமாக்கல் கொள்கையினால் உருவாகியுள்ள சமூக பாதிப்புக்களை கவனத்தில் கொண்டு-திராவிடர் விடுதலைக்கழகப் பொறுப்பாளர் களும் தோழர்களும், கொள்கைக்கும் இயக்கத் திற்குமான தங்கள் பங்களிப்பை, இருத்தலுக்கான அடையாளமாக்கிக் கொள்ளாமல், கூடுதல் பங்களிப்பு வழங்கிட வேண்டியதன் அவசியத்தை யும் தேவையையும் இந்தசெயலவை கவலையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறது. இவ்வகை அணுகு முறையால் மட்டுமே திராவிடர் விடுதலைக் கழகத்தின் பெரியாரியல் செயல்பாடுகளை வீரியமாக முன்னெடுக்க முடியுமென்று இச் செயலவை உறுதியாக நம்புகிறது.

10. பரமக்குடி, பரளிப்புதூர், தருமபுரி, கரியாம்பட்டி(நிலக்கோட்டை), வடக்குமாங்குடி முதலிய பகுதிகளில் தலித் மக்கள் மீதான கொடுந்தாக்குதல், தீவைப்பு, சொத்துக்களைச் சேதப்படுத்துதல் ஆகியவை தொடர்ந்து நடந்து வருகின்றன. இத்தகைய வழக்குகளில் குற்றவாளிகள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை என்றே நாம் கருதுகிறோம். இந்த நிலையில், காவல் நிலையங்களில் அந்தந்தப் பகுதிகளில் இருக்கும் ஆதிக்க ஜாதிப் பிரிவைச் சார்ந்தவர்களையே காவல்துறை அதிகாரிகளாக நியமிப்பதைத் தவிர்க்கவேண்டும் என்றும், அதேவேளை தலித் பிரிவைச் சேர்ந்தவர்கள் அந்தந்தப் பகுதி காவல் நிலையங்களில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் ஏற்கனவே திராவிடர் விடுதலைக்கழகம் நிறைவேற்றியிருந்த தீர்மானத்தை உடனடியாக தமிழக அரசு செயல்படுத்தவேண்டும் என்று இந்தச் செயலவை மீண்டும் வலிறுத்துகிறது.

11. ஒரே ஜாதிக்குள் நடைபெறும் திருமணங்களால் ஆரோக்கியமற்ற தலைமுறை உருவாகிவரும் ஆபத்துக்களை அறிவியல் ரீதியாக விளக்கிடும் "அகமண முறை எதிர்ப்புப் பரப்புரைப் பயணத்தை" வரும் ஜூலை 15 அன்று திண்டுக்கல் மாவட்டம் பழனியில் தொடங்கி திண்டுக்கல், திருப்பூர், பொள்ளாச்சி மாவட்டங்களில் பயணித்து ஆகஸ்ட் 18 இல் பல்லடத்தில் நிறைவு செய்வது என்று தீர்மானிக்கிறது.

# ந.பாரதிதாசன்—ஆ.தீபா வாழ்க்கை இணைப்பு ஏற்பு விழா




7.6.2014 அன்று கடலூர் மாவட்டம், விருத்தாசலத்தில் நடராஜன்-பூங்கொடி மகன் ந.பாரதிதாசன், ஆறுமுகம்-சாந்தி மகள் ஆ.தீபா ஆகியோருக்கு வாழ்க்கை இணையேற்பு விழா கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது.

மதியழகன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். திண்டுக்கல் இராவணன், தஞ்சை மண்டல அமைப்புச் செயலாளர் இளையராஜா, நாகை மாவட்ட செயலாளர் மகேஷ், தமிழ்நாடு மாணவர்கழக மாநில அமைப்பாளர் பாரி. சிவக்குமார் ஆகியோர் மணமக்களை வாழ்த்தியும், சுயமரியாதை திருமணம் பற்றியும் பேசினர். மணமேடையின் பிற்புறம் 'கடவுளை மற; மனிதனை நினை' என்ற வாசகம் எழுதப்பட்டிருந்தது. குறிப்பாக திருமணம் சனிக்கிழமை நடைபெற்றது. அனைவரையும் ஆச்சரியப்பட வைத்தது.

தலைவர் தமது உரையில்கூட, சனிக்கிழமை திருமணம் நடைபெறுவதை குறிப்பிட்டு பேசினார். இறுதியாக தலைவர் மணமக்களை வாழ்த்திப் பேசும்போது சுயமரியாதை திருமணத்தின் அவசியத்தையும், நேரம் காலம் பற்றி பேசியதையும் அனைவரும் ஆர்வமுடன் கேட்டனர். மணமக்கள் மாலை மாற்றி, வாழ்க்கை இணை ஒப்பந்த உறுதி மொழியேற்றதைப் பலரும் அதிர்ச்சியுடனும் ஆர்வமுடனும் பார்த்தனர். திருமணத்திற்கு வந்திருந்த அனைவருக்கும் 'அகமணமுறையை அகற்றுவோம்' என்ற புத்தகம் இலவசமாக வழங்கப்பட்டது. இறுதியாக பாபு அம்பேத்கார் நன்றி கூறினார்.

## முடிவெய்தினார்

தஞ்சை மாவட்டம், ஒரத்த நாடு வட்டம், வடசேரியைச் சேர்ந்த ஒரத்தநாடு ஒன்றிய செயலாளர் சொ.சிவசுப்பிரமணியன் தந்தை க.மெ. சொக்கலிங்கம் மே 24 அன்று மரணமடைந்தார். அன்று இரவு 9 மணியளவில் கழகத் தலைவர் கொளத் தூர் மணி, பரப்புரைச் செயலாளர் தூத்துக்குடி பால் பிரபாகரன், பேராவூரணி ஒன்றிய செயலாளர் சி.த. திருவேங்கடம், மன்னார்குடி ஒன்றிய செயலாளர் நல்லிக்கோட்டை முருகன், திருவாரூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் மா.கார்த்திகேயன் மற்றும் தோழர்கள் இறுதி மரியாதை செலுத்தினர்.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

டதாகத் தெரியவில்லை" என்று குறிப்பிட்டுள்ள தோடு "நமது இயக்கம் பலப்பட்டு புரோகிதத்தின் மூலம் பார்ப்பனர்களுக்குப் போகும் பணத்தைத் தடுத்து, பார்ப்பனர்களை பகிஷ்கரிக்க வேண்டுமானால் புரோகிதத்தில் நம்பிக்கையுள்ள வர்களுக்கு அவசியம் தமிழில் வேண்டுவது இன்றியமையாதது என்பதே அடியேனது அபிப்பிராயம்," எனவும் எழுதியுள்ளார்.

ஆக நீலாம்பிகை-திருவரங்கம் பிள்ளை ஆகியோரின் திருமணம் முடிந்த ஓரிரு மாத காலத்துக்குள் பெரியார்-மறைமலையடிகள்- கா.சு.பிள்ளை முதலியோரின் சந்திப்பு நிகழ்ந்துள்ளது. அதன்பின்னரும் கூட சைவர்களும், தனித் தமிழ் இயக்கத்தார் சார்பாகவும் ஆரியப் பார்ப்பன மறுப்பு, சமற்கிருத மறுப்பு குறித்த எந்த முன்னெடுப்பும் நிகழவில்லை என்பதையே இது காட்டுகிறதே தவிர தோழர் மணியரசன் கூறுவதைப் போல வழிகாட்டிகளாக அவர்கள் செயல்படவில்லை தனித் தமிழ் இயக்கம் இந்த வகையில் எதுவும் செய்திடவில்லை என்பதே உண்மை.

அதன் பின்னர் 7-10-1928 நாளிட்ட குடிஅரசு இதழின் 'சைவ சமயம்' என்ற தலைப்பில் ஒரு தலையங்கத்தைப் பெரியார் எழுதியுள்ளார்.

அதில் சைவர்கள் சுயமரியாதை இயக்கத்தை ஒழிப்பதற்கு சைவர்கள் 'தொடை' தட்டிக் கிளம்பியுள்ளதை சுட்டிக்காட்டி, சைவம், வைணவம் உள்ளிட்ட மதங்களின் பொதுவான கடவுள்களும் கருத்துகளும் பார்ப்பனிய சார்புடையவையாக இருப்பதை ஆணித்தரமாக எடுத்துக் காட்டுகிறார்.

(அதுபற்றி அடுத்த இதழில் எழுதுவோம்)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 26th June 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN